
# மண்ணைத் தேடும் மனங்கள்



ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் ஒன்றியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணைத் தேடும் மனங்கள்

(சிறுகதைத் தொகுதி)

## Mannai Thedum Manangkal

Un Roman Court Collection en Tamoul

Publie Par :

***Association Des Ecrivains Tamouls Dans L'Europe***

30, Rue de Tourville,

93600, Aulnay Sous Bois

FRANCE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணைத் தேடும் மனங்கள்

(சிறுகதைத் தொகுதி)

## Mannai Thedum Manangkal

Un Roman Court Collection en Tamoul

Publie Par :

**_Association Des Ecrivains Tamouls Dans L'Europe_**

30, Rue de Tourville,

93600, Aulnay Sous Bois

FRANCE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Premire edition : 21-09-1986

தொகுத்தோர் : ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் ஒன்றியம்

பதிப்பாசிரியர் : M. அரியநாயகம்

Distribution Limitee aux Membrs

ஓவியம் : ஜமால்

Printed at :

MOOVENDHAR ACHAGAM (மூவேந்தர் அச்சகம்)
29/2, Srinivasa Perumal Sannathi Street,
Royapettah, Madras-6000 014.
Tamil Nadu

Wrapper Printed by : Lotus Offset Press

Published by :
ASSOCIATION OF TAMIL WRITERS IN EUROPE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணிலின் பங்களை விரும்பிச் சுதந்திரத்தின்
மாண்பினை யிழப்பாரோ?
கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால்
கைகொட்டிச் சிரியாரோ?

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்

தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்.

—பாரதியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

எக்கரையும் பச்சையில்லை
—கோவை நைதன்

வேடதாரிகள்
—செ. குணசிங்கம்

இனக் கலவரம்
—மதனறூபன்

ஓர் ஆத்மாவின் பயணம்
—பார்த்திபன்

எப்படிப் புரியும்
—செல்வம்

ஒரு போராளி உருவாகுகின்றான்
—அமிர்தகௌரி

மேற்கை நோக்கிய கிழக்குப் பறவைகள்
—மலர்

அனுபவம் ஓர் ஆக்கம்
—மாலன்

கூண்டல்ல; கூடு
—அ. திருச்செல்வம்

ஓரக்கண்
—வசந்தி

உணர்வுகள்
—பிரேமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாக்டர் தலைவர்
**கலைஞர் மு. கருணாநிதி**

கோபாலபுரம்,
சென்னை-600 084

திரு. அரியநாயகம் மேனுவல் பிள்ளை அவர்களுக்கு,

வணக்கம். தங்களின் அரிய பணியின் விளைவாக "ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் அன்றும்" வெளிவந்தது கண்டு மிகமிக மகிழ்கிறேன். தமிழர்களில் - அதிலும் தமிழ் எழுத்தாளர்களில் ஒன்று பட்டு செயல்படுவது என்பது அரிய செயலாய்ப் போயன்றோ!

தமிழ்க்கும் அருமை நோக்கு மகிழ்ந்து மனம் நிறைந்து வாழ்த்துகிறேன்.

அன்புள்ள
மு. கருணாநிதி
25/7/1986

டாக்டர்
**கா. காளிமுத்து**
வேளாண்மைத்துறை
அமைச்சர்

தலைமைச்
செயலகம்,
சென்னை-600 009

ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் அமைத்திருப்பதையும், அதன் கொள்கை மற்றும் செயல்பாடு விபரங்களையும் அறிந்தேன்.

தொடுப்பதும், தொகுப்பதும் இலக்கியப் பணிகள். இந்த இலக்கியப் பணி எழுச்சியை ஏற்படுத்தும். அந்த எழுச்சியை வெற்றிப் பாதையில் நடைபோட வைக்க, முப்பெரும் சூளுரைகளை ஏற்றிட வேண்டும்.

* தமிழால் ஒன்றுபடுவோம்!
* தமிழர் உரிமைகளுக்காகப் போராடுவோம்!
* தமிழ்-தமிழர் நலன்களுக்காக வெற்றி பெறுவோம்!

மேற்சொன்ன முப்பெரும் சூளுரைகளே, இன்றைய சூழ்நிலையில் உலகத் தமிழினத்தை முன்னேற்றமடையச் செய்யும் என்பதே என் துணிந்த முடிவு.

* சுதந்திரம்
* சமத்துவம்
* சகோதரத்துவம்

ஆகிய முப்பெரும் முழக்கங்களை உலகிற்கு வழங்கியது பிரெஞ்சுப் புரட்சி! அந்த பிரெஞ்சுப் புரட்சியைப் போல் நான் முதலில் குறிப்பிட்ட முப்பெரும் சூளுரைகளைத் தமிழ்ப் புரட்சியாக எதிர்கால தமிழ் இனத்துக்கு வழங்குவோம்!

ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் ஒன்றியம், ''அச்சம் என்பது மடமை; அஞ்சாமை திராவிடர் உடமை'' என்பதை அகில உலகிற்கும் எடுத்துக்காட்டும் வகையில் செயல்படட்டும் என்று சொல்லி என் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவண்,

**கா. காளிமுத்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**K. Anbazhagan,**
M.A.,M.L.A.
General Secretary, D.M.K.
Dy. Leader, D.M.K. Legislature Party

74, Aspiran Garden
Kilpauk, Madras-10

ஐரோப்பாவின் பல்வேறு நாடுகளில் வாழும் தமிழ் எழுத்தாளர்களிடையே உறவும் நட்பும் ஏற்படுத்தி— அந்நாடுகளில் உள்ள தமிழர்கள் தமிழ் இலக்கியங் களைப் படிப்பதற்கான ஒரு வாய்ப்பை உருவாக்கிட வும், தமிழ் மொழியில் வெளிவந்த சிறந்த இலக்கியங் களை அந்நாட்டு மொழிகளில் பெயர்க்கவும் அவர்தம் மொழி இலக்கியங்களைத் தமிழில் பெயர்க்கவும் ஏற்றதொரு அமைப்பாக 'ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் ஒன்றியம்' தோற்றுவிக்கப்படுவது கண்டு பாராட்டுகிறேன். தங்கள் முயற்சி வெற்றி பெற, ஒன்றியம் நிலைபெற, குறிக்கோள் பரவிட வாழ்த்து கிறேன். வாழ்க தமிழ்!

அன்பன்,

க. அன்பழகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Dr. Valampuri John**
Member of Parliament
(Rajya Sabha)

18, Meena Bagh,
New Delhi-110 011
Phone : 3019722

எட்டுத் திக்கிலும் எங்கள் தமிழ் அன்னை ஏறி நிற்கின்றாள். கால ஊழி வரை தனது கனகமணிக் கண்களைத் திறந்து உலகத்தை உவப்புடன் பார்க்கின்றாள். உலகம் உய்ய, உயர, ஒரு பெரும் சமுதாயமாய் திரண்டு, திண்மை பெற்று வாழ வழிவகைகளைத் தன்னகத்தே கொண்ட அன்னை, விழிநீரைத் துடைத்து விந்தை உலகைக் காணுகின்றாள்!

நாடுகள்தோறும் தமிழ் எழுத்தாளர் வாயிலாக, உலக சமுதாயம் உயர்வடைவதற்கான திண்ணிய கருத்துக்களைத் திறனறிந்து உரைக்கும் அன்னைத் தமிழ் அய்ரோப்பாவிலும் தமிழ் எழுத்தாளர் மன்றம் காண்பதில் களிப்பு நமக்கு!

திருவாசகத் தேனை மாந்தி, திருக்குறள் நெறிதனை ஓதி உணர்ந்த போப் அய்யர் முதல், காதல் தமிழே கதி என்று கிடந்த கமில்லசுவல்லபெல் வரை அய்ரோப்பாவில் தமிழ் இலக்கியத் தேனைத் துய்த்து மானுட வசந்தத்திற்காகக் குரல் கொடுத்தோர் பலர்.

மனிதனைத் தொடுவது எழுத்து; தொட்டுத் தூக்குவது இலக்கியம். 'செய்தி' இல்லாத இலக்கியம் செத்த பிணத்திற்குச் சமானம். அவ்வகையில் மானுட வசந்தத்திற்காக மணிதோறும் குரல் கொடுக்கும் உலகத் தமிழ் இலக்கிய ஒருமைப்பாட்டிற்கு அய்ரோப்பிய தமிழ் எழுத்தாளர் மன்றம் நெற்றிப்பொட்டு; நிறைநாள் இன்பம்.

உண்மையான, நெறிசார்ந்த தேமதுரத் தமிழோசை உலகெலாம் பரவிட, அய்ரோப்பிய இலக்கியம் தமிழுக்கு வரவேண்டும்; தமிழ் இலக்கியமும் அய்ரோப்பாவில் படர்ந்து பரவிட வேண்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் தனது கூட்டுச் சிறைதனைக் குமுறும் சிறகுகளால் உடைக்கின்ற காலம் இது! கிழக்கு வானம் சிவந்து வருகிறது!

'மண்ணைத் தேடும் மனங்கள்' என்கிற தலைப்'பூ' வாடிப் போகின்ற வசந்த காலத்து நேச நெருடல் அல்ல! எப்போதும் வாழப்போகும் நெருப்'பூ'! சிவந்தே பிறந்த புன்னகைப்பூவே வேள்வி என்னும் வித்தக நெருப்பு!

'மண்ணைத் தேடும் மனங்கள்' எனில், நீவிர் விண்ணைத் தேடும் விதைகள்; திசைகளைத் தேடும் திருப்பங்கள்; அடிப்படைகளைத் தேடும் அழகுமாடங்கள்; வேரினை மறுக்காத வெளிச்ச மரங்கள்; நாரினை வெறுக்காத ஒரு முல்லைப் பூச்சரங்கள்!

எது இலக்கியம் என ஓர்ந்து, மானிட விடியலுக்கான மகத்தான இலக்கியங்களை, உலகம் முழுவதிலும் பரப்பும் தமிழ் இயக்கப்பணியில் அய்ரோப்பியத் தமிழ் எழுத்தாளர் மன்றம் ஒரு எல்லைக்கல்; வரலாற்று வரி வடிவம்.

தமிழ் உலகெலாம் பரவிட, உலகம் தமிழிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். இந்தக் கனவுகள் நிரம்பிய காவியப்பணிக்கு எனது நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்!


வெல்க தமிழ்ப்பணி! எதற்கும் அதுவே

இனி தலைப்பணி! முதற்பணி!

வாழ்க தமிழ்!

வெல்க தமிழர்!!

என்றென்றும் அன்புடன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலாநிதி**
**நீ. மரிய சேவியர் அடிகள்**
Lindensty. 45
Koln 1.

லிண்டன் ஸ்ராஸ்ஸே 45
கொலோத் 1
மேற்கு ஜெர்மனி.

தமிழ் வாழ்க!

இலக்கியப் படைப்புகள் சாதனைக் கருவிகள். அவைகளால் நாம் பிறந்த நாட்டுக்கும் பின்வந்தடைந்த நாட்டுக்கும் பாலம் அமைக்கலாம். ஆன்மீக அடிப்படையில் மலர்ந்த நம் பண்பாட்டிற்கும் விஞ்ஞான சாதனைகளுடன் விளங்கும் பிறஃகலாச்சாரங்களுக்கும் பிணைப்பு ஏற்படுத்தலாம். இறந்த கால ஆக்கத்தில் உறைந்து நிகழ்கால ஏக்கத்தைக் கடந்து, எதிர்கால ஊக்கத்தை நம்மவரில் வளர்க்கவும் உதவலாம். இத்தகைய குறிக்கோளைத் தமிழ்த்தாய் தமக்களித்த தலையாய பணியெனக் கொண்டு எழில் மிகுந்த பாரிஸ் நகரில் தமிழ் வளர்க்கும் தொண்டர்களை ஒன்றிணைத்து இயங்க இருக்கும் ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்துக்கு இறைவனின் பேரருளை இன்றும் என்றும் விழையும்,

தமிழ் அன்பன்,

**நீ. மரிய சேவியர் அடிகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எண்ணியதை எழுத்தில் கொண்டு வரத் துடித்த எண்ணற்ற நெஞ்சங்களை நான் அறிவேன்.

அந்தப் பேனா முனைகளிலிருந்து பொங்கி வந்த மைத் துளிகள், வார்த்தைகளை வடிப்பதற்கு வழியின்றி வற்றிப் போன சோக சம்பவங்களையும் நான் அறிவேன்.

அடிப்படை உரிமைகளை இழந்தவர்கள்—

அடக்குமுறைகளினால் அடிமைகளாக்கப்பட்டோர்—

உழைத்தும் உயர்வு காண முடியாதவர்கள்—

சிறுபான்மை இனமெனச் சித்திரவதைப்படுபவர்கள்—

சமூகக் குறைபாடுகளினால் சகதியிலே தள்ளப் படுபவர்கள் —

இத்தகைய துயர நிலைகளில் நின்று விடிவுபெற விளைந்தவர்கள்—விளைபவர்கள்...இவர்களின் உண்மைச் சம்பவங்கள் சாட்சியங்களாக — வரலாறாக எழுத்திலே பொறிக்கப் பட்டிருந்தாலும்—

என் கண்கண்ட சாட்சியாக சிறீலங்கா அரசின் சிங்கள ஆட்சியிலே...

1969-70-ம் ஆண்டுக் காலப் பகுதியில் தொடங்கி தொடர்ந்து நான்கு ஆண்டுகளாய், 'இரங்கு நிலை' கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஏற்றகுறை, தவிர்த்திட நீர் எழுச்சி கொள்வீர்' என்ற விருது வாக்கியத்துடன் வெளிவந்த 'எழில்' கலை இலக்கிய மாத ஏட்டின் ஆசிரியராக நான் இலக்கியப்பணி ஆற்றிய வேளையில், என்னைத் தேடிவந்த காவியங்கள், கதைகள், கட்டுரைகள், கருத்துக்கள்—இவைதான் என் கண்கண்ட சாட்சியங்கள்.

அவை அனைத்தும் விடிவு காண எழுந்த நெஞ்சங்களின் எண்ணக் குமுறல்கள். கண்ணீராலும் செந்நீராலும் எழுதப் பட்ட சோக கீதங்கள். பத்திரிகைச் சுதந்திரம் பறிக்கப் பட்டிருந்த நிலையில் என் போன்றவர்கள் அவற்றைப் படித்து விட்டு எம் கண்களிலிருந்து இரத்தத் துளிகள் சிந்தாவண்ணம் கண்களை இறுக மூடிக்கொண்டோம்.

எழுச்சிமிகு சிந்தனையில் எழுந்து வந்த வார்த்தைகள் அன்று வடிவங்களாய் வந்து ஊக்கம் பெற்றிருந்தால்—

உலகின் கம்யூனிஸ புரட்சி நூல் தந்த கார்ல்மார்க்ஸ் படைத்த 'மூலதனம்'போல்—

சிறையில் இருந்தபோது ஹிட்லரின் மனதில் தோன்றி உலக முக்கியத்துவம் பெற்ற MEIN CAMP போல்—

சனநாயகம்—

சோஷலிசம்—

கம்யூனிசம், என்ற வரிசையிலே புதிய புரட்சிமிகு அரசியல் சமூக பொருளாதார விடுதலை உணர்வோடு *தமிழிசம்* என்னும் புதிய தத்துவ நூல் ஒன்று உருவாகியிருக்குமோ என்னவோ......!?

இந்த அடிப்படையிலேதான் '*காவலன்*' என்றொரு சஞ்சிகை—வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பொருளாதார அபிவிருத்தி ஏடு என்னும் பெயரோடு வெளிவந்தது. பலருடைய கேள்விக்கு விடையாக தமிழீழம் தனியாகப் பிரிந்தால், பொருள் வளத்தைப்பற்றிய கேள்விக்கே இடமில்லை— அவை அனைத்தும் வடக்கிலும், கிழக்கிலும் பூரணத்துவமாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு என, விஞ்ஞான புவியியல் ரீதியில் ஆராய்ச்சி பூர்வமாய் ஆணித்தரமான கருத்துக்களுடன் கூறியது.

ஒரு எழுத்தாளனின் பேனா முனையும் சகல அடக்கு முறைகளுக்கும் எதிராக மக்களை முன்னெடுத்துச் செல்லக் கூடிய பயங்கர ஆயுதமே! அதனால்தான் சிங்கள அரசு அதைத் தடை செய்து அதன் ஆசிரியரையும், துணை நின்றவர்களையும் சிறையிலிட்டது.

எழுத்தாளன் படைக்கும் இன்றைய இலக்கியம்தான், நாளைய சரித்திரங்கள்.

இதோ உங்கள் கையில் தவழும் 'மண்ணைத் தேடும் மனங்கள்' தங்கள் நெஞ்சத்தைக் கிழித்துக் காட்டி தம் துயர் படிந்த சோக கீதங்களை உங்கள் முன்னால் பாடி நிற்கின்றன.

இதைப் படைத்தவர்கள் பிரபல்யமானவர்கள் அல்ல. சொல்லப்போனால் எழுத்துலகுக்குப் புதியவர்களும் கூட. சிலருடைய கன்னிப் படைப்புக்களையும் இதிலே நீங்கள் காண லாம். எழுத்திலே கன்னிமை இருந்தாலும் கருத்திலே கனம் மிகுந்தவை. காலாதி காலமாய் நீங்கள் காத்து வைக்க வேண்டிய பொக்கிஷம். ஐரோப்பிய தமிழர் வரலாற்றில் சரித்திரம் படைத்து நிற்கும் கதைத் தொகுப்பு இது.

சித்திரம் வரையத் துடித்தவர்கள் சுவர் இல்லாது வேதனை யுற்ற காலம் ஒன்றிருந்தது. இதோ, ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் ஒன்றியம், போதிய சுவர்களைக் கட்டித் தர ஆயத்தமாய் உள்ளது. இனி நீங்கள் எத்தகைய சித்திரங்களையும் வரையலாம். உங்களை வரையப் பண்ணுவதே எமது நோக்கம்.

ஈழத்திலும், இந்தியாவிலும், ஏனைய நாடுகளிலிருந்தும் தமிழர்கள் ஆயிரம் ஆயிரமாய் இன்று அரசியல், கல்வி, பொருளாதாரம் போன்ற பல்வேறு இன்னல்களிலிருந்தும் விடுதலை காண, தம் சொந்த மண்ணைவிட்டு அந்நிய நாடு களில்—குறிப்பாக, ஐரோப்பிய நாடுகளில் குடிபுகுந்துள் ளார்கள். ஆயினும், இவர்களது மனங்களெல்லாம் தம் மண்ணைத் தேடியே நிற்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் மண்ணுக்காக தம் பங்களிப்பைச் செய்யவேண்டும் என இவர்களின் மனங்கள் இவர்களை வலியுறுத்திக் கொண்டுதான் இருக்கின்றன.

பல சாம்ராஜ்யங்களை அழித்து—

வர்க்கப் புரட்சிகளை உருவாக்கி—

உயர்வு தாழ்வுகளை அழித்து, உழைப்போர் உலகு உருவாக்கிய தன்னிகரில்லா ஆயுதமாகிய எழுதுகோலைத் தம் கையிலே வைத்திருக்கும்—வைத்திருக்கத் துடிக்கும் தமிழ் எழுத்தாளன் இந்நேரம் தூங்கலாமா? அவனைத் தூங்க விடலாமா?

இப்பாரிய கேள்வியின் பதில்தான்—

ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் ஒன்றியம்.

ஐரோப்பிய நாடுகளில் ஆங்காங்கே சிதறுண்டு வாழும் எழுத்தாளர்களையெல்லாம் அழைத்தோம் — ஒன்று படுத்தினோம்.

இனி வரும் தமிழுலகில் மலரப் போகும் புதிய சமுதாயம்—அது அடையப்போகும் மாற்றத்திற்கு மக்களைத் தயார்ப் படுத்தும் பணியினை அவர்களிடம் கொடுத்துள்ளோம்.

புரட்சிக் கவி பாரதியின் வேண்டுகோளையும் நாம் மறக்கவில்லை.

*தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்*
*பரவும் வகை செய்தல் வேண்டும்!*
*பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்*
*தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்!*
*இறவாத புகழுடைய புதுநூல்கள்*
*தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்!*

—என்ற புரட்சிக் கவியின் வாக்கை எம் தலையாய கடமையாகவும் ஏற்க முனைந்துள்ளோம்!

தமிழர் கலை—பண்பாடு காப்பது போன்ற இன்னோரன்ன பணிகளைக் கொண்டுள்ள ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றியத்தைக் காப்பதும், வளர்ப்பதும் ஐரோப்பிய நாடுகளில் வதியும் தமிழ் மக்களாகிய உங்களிடம்தான் உள்ளது.

எழுத்தாளர்களை உருவாக்குங்கள் — ஊக்குவியுங்கள் அவர்கள் சிந்தனை வளர, வளர்ந்து பெருமரமாகி தமிழினத்திற்கு நிழல்தர, உங்கள் ஆதரவு என்னும் தண்ணீரை அயராது ஊற்றுங்கள், என ஒன்றியத்திற்காக உங்களிடம் இரு கரம் கூப்பி தாழ் பணிந்து வேண்டி நிற்கிறேன். காக்கும் உங்கள் கருத்துக்களை ஒன்றியம் நிச்சயம் ஏற்கும்.

எங்களைக் 'காக்கும் கரங்கள்' உங்கள் கரங்களே!

வந்தவர்கள் எல்லாம் கடவுளின் மக்கள்; அனைவரும் எம் உறவினரே என்ற பெரும் குணத்தோடு எம்மை ஏற்றுள்ள ஐரோப்பிய நாட்டு வெள்ளை உள்ளங்கொண்ட மக்களையும், எம் குறிக்கோளை ஏற்று தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தை, தம் நாட்டில் பதிவு செய்யப்பட்ட அமைப்பாகப் பெருந்தன்மையோடு ஏற்றுக்கொண்ட பிரான்சு நாட்டு அரசுக்கு, பிரான்சிலுள்ளளவும், இன்னும் ஐரோப்பிய தமிழர்களின் சார்பாகவும் என் நன்றியைச் செலுத்துகிறேன்.

எம்மை ஊக்குவித்த கலாநிதி சவுரிமுத்து அடிகளார், நாம் வேண்டும்போதெல்லாம் சிரமம் பாராது மொழிபெயர்ப்புக் களைச் செய்தும் ஆலோசனைகள் வழங்கியவருமான திரு. அரிமா இளங்கோவன், திரு. சுகுமாரன் இவர்கள் எல்லாரும் ஒன்றியத்தின் நன்றிக்குரியவர்களே!

ஒன்றியத்தின் சார்பாக நான் தமிழகம் வந்தபோது என்னை அன்போடு வரவேற்று 'நிலாவரை' மாத சஞ்சிகையின் ஆசிரியர் தேவகாந்தன்—தன் சஞ்சிகையின் பணிகளுக் கிடையிலும் ஐ. த. எ. ஒன்றியத்தின் அச்சகப் பணிகளில் அவர் காட்டிய அக்கறை சொல்லப்போனால் ஐ. த. எ. ஒன்றியம் அவருக்கு மிகவும் நன்றிக்கடன் கொண்டுள்ளது.

மேலும், எமக்கு ஆதரவு தந்து ஆலோசனைகள் வழங்கிய ஈழத்து எழுத்தாளர்களான செ. கணேசலிங்கன், செ. யோகநாதன்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்போடு வரவேற்று 'உண்மையில் வரவேற்கப்பட வேண்டிய முயற்சி' என முகமலர்வோடு கூறி ஆசி உரைகள் வழங்கிய டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி, அமைச்சர் காளிமுத்து மற்றும் தமிழறிஞர்கள் அனைவருக்கும் ஒன்றியத்தின் ஆதரவாளர்களுக்கும் மனம் நிறைந்த நன்றியைக் கூறி நிற்கிறோம்.

என்னோடு துணைநின்ற நண்பர்கள் J. E. அருள்தாஸ், ஜெயக்குமார்—

முத்தாக விளங்கும் மூவேந்தர் அச்சகத்தார், மிக அழகான ஓவியங்கள் வரைந்து தந்த ஓவியர் ஜமால், மேலட்டையை அழகுற அமைத்துத் தந்த லோட்டஸ் •ஆஃப்செற் பிரஸ் ஸ்தாபனத்தார் அனைவருக்கும் ஐ. த. எ. ஒன்றியத்தின் சார்பில் என் மனம் நிறைந்த நன்றியைக் கூறி நிற்கின்றேன்.

எங்கள்மீது மிக்க பற்றுக்கொண்டு எங்களை நெஞ்சார வாழ்த்தி, தன் பாரிய பொறுப்புக்களையும் ஒதுக்கி, எம் அழைப்பை ஏற்று இந் நூல் வெளியீட்டு வைபவத்தில் சிறப்புரை வழங்க வருகை தரும் வார்த்தைச் சித்தர் டாக்டர் வலம்புரிஜான் *எம்.பி.* அவர்களுக்கு ஐ. த. எ. ஒன்றியத்தின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றி கூற நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன்.

இறுதியாக—

ஐரோப்பாவில் வதியும் தமிழ் எழுத்தாளர்களை வளர்ப்பது தமிழ் மக்களாகிய உங்கள் கடமையென்னும் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து கரங்கூப்பி நிற்கின்றேன்.

நன்றி!

அன்பன்

**எம். அரியநாயகம்**

*ஐ. த. எ. ஒ. தலைவர், பதிப்பாசிரியர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எக் கரையும் பச்சையில்லை


**கோவை-றைதன்**

மணி நடு இரவை அண்மித்துக்கொண்டிருந்தது.

வானத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக நட்சத்திரங்கள் மின்னிக் கொண்டிருந்தன. அரைச்சந்திரன் மேகங்களின் ஓட்டத்தில் மறைவதும், ஒளிர்வதுமாக விளையாடிக்கொண்டிருந்தான். நிசப்தங்கள் நிலவினாலும் நாய்களின் ஊளையிடும் ஓசை அந்த ஊரின் அமைதியைக் கலைத்துக்கொண்டிருந்தது.

குமாருக்குத் தூக்கம் வரவில்லை. அன்று காலை நடந்த நிகழ்ச்சி அவனது நெஞ்சத்தைச் சுமையாக அழுத்திக்கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய் கூறியிருந்தாள் :

''டேய் குமார்! வீட்டிலை இரண்டு குமருகள் வயதெல்லையை தாண்டிக் கொண்டு இருக்குதுகள். அப்பரும் குடிச்சுக்கொண்டு வீட்டைக் கவனிக்கிறதா யில்லை. உன்னைத்தான் நான் நம்பி இருந்தன். நீ என்னடாவெண்டால் இயக்கத்துப் பொடியளோடை தொடர்பு வைச்சுக்கொண்டு, வேலை வெட்டி ஒண்டு மில்லாமல் திரியிறாய். இனி உன்னை இந்த நாட்டிலை வச்சிருந்தால் எங்களுக்கு எதிர்காலமே இல்லாமல் போயிடும். நாளைக்கே சரவணமுத்தரிட்டை போய் தோட்டத்துக் காணியை ஈடுவைச்சு வெளிநாட்டுக்கு அனுப்புற அலுவல்களைக் கவனிக்க வேணும்.''

க.பொ.த. (உயர்தரம்) வரை படித்து 'தரப்படுத்தல்' எனும் கொடுமையால் பல்கலைக்கழகம் சேரமுடியாத வேதனையாலும், வேலை ஒன்றும் கிடைக்காத விரக்தியி னாலும் எம்முடைய இனத்தின் விடிவிற்கு தமிழ் ஈழமே சரியானதோர் பாதையைக் காட்டும் என்று முடிவு செய்து தற்போது சரியானதோர் இயக்கத்தைத் தேர்ந்தெடுத்துத் தன்னைப் படிப்படியாக இணைத்துக் கொண்டிருக்கும் போது அம்மாவின் கட்டளைகள் அவனுக்குப் பெரும் சங்கடமான நிலையைத் தோற்றுவித்தன.

அவன் மனதில் எண்ணங்கள் அலைகளாகச் சுழல அதிகாலைச் சேவல்களும் கூவ ஆரம்பித்துவிட்டன.

குமாரின் தாயார் காலையில் குமாருக்கு 'தேத்தண்ணி, ஊற்றிக் கொடுத்துவிட்டு, ''நான் சரவணமுத்தரிட்டை காணி ஈடு வைக்கிற விசயமாய் போட்டுவாறன். நீ போய் ஏஜென்சி சிவத்தை கண்டிட்டுவா. எப்ப இனி அடுத்த 'றிப்' வெளிக்கிடறதாம் எண்டு கேள். மறந்திடாமல் பிரான்சுக்கு அனுப்ப எவ்வளவு முடியுதெண்டதையும் கேட்டுட்டு வா'' என்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அம்மா நான் சொல்லுறதைக் கொஞ்சம் கேளுங்கோ. எங்கடை இனம் கொஞ்சம் கொஞ்சமா அழிஞ்சு கொண்டிருக்கு. ஆமிக்காரனுகள் விமானத்தில் வந்து குண்டுபோட ஆரம்பிச்சுட்டாங்கள். எங்கடை சனத்திற்கு விடிவு கிடைக்கோணுமெண்டா விடுதலை பெற வேணும். நாங்களெல்லாம் வெளிநாடு போனமெண்டால் யாரம்மா விடுதலை எடுத்துத் தாறது? எங்கடை தலைவிதியை நாங்கள்தான் எங்கடை கரங்களிலை எடுக்க வேணும். அதுவரை எங்கடை பிரச்சினைகள் தீராது. ஒன்று முடிஞ்சாலும் வேறையொன்று புதுசாய் வரும்'' என்றான் குமார்.

''நீ எனக்குப் புத்தி சொல்லாதை. என்ரை சொல்லைக் கேட்காட்டி என்ரை பிணத்தை கிணத்து தண்ணியிலைதான் பாப்பாய். கெதியிலை முகத்தை கழுவிப் போட்டு நான் சொன்னதைச் செய்'' என்று கோபமாகக் கூறிவிட்டு குமாரின் தாயார் வெளியே சென்று விட்டாள்.

குமாரும் வழமைபோல் தன் தோழர்கள் இருக்கும் இருப்பிடம் நோக்கிச் சென்றான்.

குமாரைக் கண்டதும், ''என்ன குமார்? வழமையாய் இருக்கிற உற்சாகம் இண்டைக்கு உன்னிலை தெரியேல்லை. நேற்று தெல்லிப்பழைப் பக்கம் ஆமிக்காரங்கள் ஹெலிகொப்டரிலை குண்டு போட்டு இருபது சனம் செத்ததையும், அகதியாய் சனம் வெளியேறிக்கொண்டிருக்கிறதையும் நினைச்சு கவலைப்படுறியோ?'' என்று குமாரின் நெருங்கிய தோழன் சதீஸ் வினவினான்.

''இல்லை, சதீஸ். நானும் அகதியாய் போற சனத்தோட கோழையாய் வெளிநாடு போகப் போறேன்.''

சதீஷ் அவனது பதிலைக் கேட்டுத் திகைத்துப் போனான். ''என்ன குமார், சொல்லுறாய்? ஏன், என்ன நடந்தது?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமார் காலையில் வீட்டில் நடந்த விஷயங்களை சதீஸுக்குக் கூறினான். குமார் கூறியவைகளைக் கேட்டு சிறிது நேரம் யோசனையிலாழ்ந்திருந்த சதீஸ், குமாரைப் பார்த்துச் சொன்னான் :

"குமார், குடும்பம் எண்ட உறவுகளோடை பாசம் என்ற கயிற்றை அறுக்க முடியாமல் ஒரு குறுகிய மனப்பான்மையோடு எங்கடை தமிழினத்தின்ரை வாழ்வு இறுக்கமாய் அமைஞ்சிருக்கு. இந்தப் பாச உணர்வுகளை அறுப்பவன்தான் தன் இனத்தின் விடிவுக்காகப் புறப்படும் புரட்சிவாதியாக மாறுகிறான். எங்கடை இனத்துக் குள்ளை இன்றும் பிசாசுமாதிரி இருக்கிற சாதிப்பிரச்சினை, சீதனக் கொடுமை, சுரண்டல், பெண்ணடிமை போன்ற தெல்லாம் அழியவேணுமெண்டால் எங்கடை நிலம் விடுதலையடைய வேணும். நிலம் விடுதலை அடைஞ்சால் மட்டும் போதாது. மக்கள் புரட்சியொண்டினை ஏற்படுத்தி தேசிய விடுதலையோடை வர்க்க விடுதலையும் அடைய வேணும்! என்னவோ நீயும் சிந்திக்கத் தெரிஞ்சனி, யோசிச்சு செய்."

குமார் திரும்பிவிட்டான்.

தாயாரும் சதீஸும் மாறி மாறி அவனது மனத்துக்குள் சிந்தனை அலைகளைக் கிளப்பிக் கொண்டிருந்தனர். கடைசியில் தாயின் பிணக்கோலத்தைக் காண விரும்பாத அவனது மனம், உடனடிக் கடமையாய் வீட்டு நிலைமை யைக் கவனிக்கத் துணிந்தது.

'எதற்கும் கொஞ்சக் காலத்தில் உழைத்து பிரச்சினை யைத் தீர்த்துவிட்டு இயக்கத்துடன் இணைவோம்' என்று அவன் முடிவு கட்டினான்.

சரவணைமுத்தரைப் பார்த்துவிட்டுத் திரும்பியிருந்த தாயாரிடம் வெளிநாடு போவதற்கான தன் சம்மதத்தைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவித்துவிட்டு, ஏஜென்சி சிவத்தைச் சந்திக்கப் புறப் பட்டான் அவன். அப்போது அவனது தாயாரின் முகம் மட்டுமல்ல, அவனது தங்கைகளின் முகங்களும் மலர்ந் திருந்தன.

குமாரின் பிரயாண அலுவல்கள் யாவும் பூர்த்தியான தும் பிரயாணத்திற்கான நாளை ஏஜென்சி சிவம் கூறினான்.

கொழும்பு செல்வதற்கான நாளும் வந்தது.

தன் சகோதரிகளிடம் சொல்லிக்கொண்டு தாயிடம் வந்தான். தாய் கண்ணீர்மல்க அவனைப் பார்த்தாள். தன் தாயிடம் "போட்டுவாறன் அம்மா, கெதியிலை பிரச்சினையெல்லாம் முடிச்சிட்டு திரும்பியிடுவன்" என்று கூறி விடைபெற்றான்.

மினி பஸ் வேகமாகச் சென்றது. தூரத்தில் தெரியும் பனைமரக் கூடல்களும், தென்னை மரங்களும் அவன் கண்களிலிருந்து மெல்ல மெல்ல மறைந்துகொண்டிருந்தன.

வழியில் உள்ள இராணுவத் தடைகளில் இராணுவத் தினர் பிரயாணிகளுக்குக் கொடுக்கும் அசௌகரியங்களும், அடையாள அட்டை இல்லாதோரையும் சந்தேகப் படுவோரையும் இராணுவ முகாமிற்கு அழைத்துச் செல் வதையும் கவனித்தவன் என்ன செய்வதென்று தெரியாமல் தவித்தான். அவன் அடையாள அட்டை வைத்திருந்தபடியாலும், சந்தேகத்துக்கிடமற்ற முறையில் நடந்ததாலும் அவனுக்கு அவ்வளவாக இடையில் பிரச்சினைகள் ஏற்படவில்லை.

குமாரும் கொழும்பு வந்து விமானமேறி பல நாட்டு எல்லைகளையும் கடந்து பாரிசிற்கு வந்து சேர்ந்தான். அவன் வரும்போதே தனது பாடசாலை சிநேகிதனான ஜேதீயின் விலாசத்தைக் கொண்டு வந்திருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேதீயின் அறைக்கு வந்து அழைப்பு மணியை அழுத்தினான். கேதீ இரவுவேலை செய்து அதிகாலையின்தான் படுத்திருந்தான் போலும்; எரிச்சலுடன் வந்து கதவைத் திறந்தான்.

கண்களைக் கசக்கியபடியே ஆச்சரியத்துடன் குமாரைப் பார்த்து கேதீ, "அட குமாரே, வா, வா. ஒரு கடிதம்கூட போடாமல் திடீரென்று வெளிக்கிட்டிட்டாய்" என்றபடியே அறையினுள் அழைத்துச் சென்றான். குமார் நடந்த விடயங்களைக் கேதீயிற்குக் கூறினான். கேதீயும் இங்குள்ள பிரச்சினைகளை ஒவ்வொன்றாகக் கூற வெளிநாட்டில் வாழ்பவர்களின் உண்மை நிலை அவனுக்கு மெல்ல மெல்லப் புரிய ஆரம்பித்தது.

"இங்கை மச்சான், எல்லாம் பிரச்சினைதான். இங்கை பார். இந்த சின்ன ரூமிலை ஐந்துபேர் இருக்கிறோம். பத்தாததுக்கு நீயும் வந்திட்டாய்; ஆறு. வீடு, வேலை, விசா இதெல்லாம் இப்ப வரவரப் பிரச்சினை. இங்கை சிலர் தான் நல்லாயிருக்கினம். கனசனத்திற்கு பலபல சிக்கல்கள். இப்ப வேலையொண்டு எடுக்கிறதென்றால் பெரும்பாடு. அரசாங்கம் மாறினதோட விசாப்பிரச்சினையும் சிக்கலாகிக் கொண்டிருக்குது. என்னவோ அவையவையின்ரை அதிர்ஷ்டம். வந்திட்டாய்; ஏதோ இனி உன்ரை முயற்சி" என்று கூறி தன் ரூமில் குமாரை தங்கவைத்தான், கேதீ.

குமார் பாரிசிற்கு வந்து ஐந்து மாதங்கள் கடந்து விட்டன. இந்தஐந்து மாதங்களில் எந்தவொரு முன்னேற்றமுமில்லை. இருப்பினும் தான் சார்ந்திருந்த இயக்கத்தின் கிளை அமைப்பினூடு, இயலுமானவரையில் நிதி சேகரித்து அனுப்பிக் கொண்டிருந்தான். 'நொண்டிக் குதிரைக்கு சறுக்கியது சாட்டு" போன்று வந்துவிட்டோம், இதையாவது செய்வோம் என்று இதயத்தில் ஓர் ஆறுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் பாரிஸிற்கு வந்து பத்து மாதங்களும் ஆகி விட்டன. அரசாங்கம் தரும் உதவிப் பணத்தில் ஒருவாறு வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்தான். அந்தச் சின்னஞ் சிறு அறையில் அவன் எண்ணங்களும் சிறிது சிறிதாகக் குறைந்து கொண்டே சென்றன.

வேலை கிடைப்பதாயில்லை. அவனது நண்பர்களும் அவனுக்கு வேலை எடுத்துத் தந்து உதவும் நிலையில் இல்லை.

தாயாரிடமும், சகோதரிகளிடமிருந்தும் வந்த எதிர் பார்ப்புக் கடிதங்கள் ஒவ்வொன்றும், அவனை விரக்தியின் எல்லைக்குத் துரத்தின. இருந்தும் மனந் தளராமல் தன் கடமைகளை நிறைவேற்றும் உறுதிப்பாட்டுடன் அவன் வேலை தேடிக் கொண்டே இருந்தான்.

அன்றும் வழமைபோல் வேலை தேடுவதற்காக காலையில் எழுந்து புறப்பட்டான். தை மாதக் குளிர் அவனது உடம்பில் ஊசிபோலக்|குத்திற்று. அவன் வெளியில் வரும்போது தபாற்பெட்டியில் அவனுக்கு ஒரு கடிதம் வந்திருந்தது. கடிதத்தை உடைத்து ஆவலோடு வாசித்தான்.

அவனுடைய தாயார் எழுதியிருந்தாள் :

அன்பு மகன் குமாருக்கு,

முதலில் உன் மனத்தைத் திடப்படுத்திக் கொள். இங்கு நடக்கக் கூடாத பல சம்பவங்கள் நடந்து விட்டன. தனியே இருக்கும் உன்னைத் துயரப்படுத்த மனமின்றி இந்த விஷயத்தை உடனே அறிவிக்கவில்லை. போன மாதம் இருபத் தொன்பதாம் தேதி ஆமிக்காரர் எங்கள் ஊரையே சுடு காடாக்கிவிட்டுப் போய்விட்டார்கள். அன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாலை திடீரென வீட்டிற்குள் நுழைந்து உன்னை எங்கேயென்று கேட்டனர். நீ வெளிநாடு போய் விட்டதாக நாங்கள் கூறினோம். நாங்கள் பொய் கூறுவதாகச் சொல்லி எங்களைத் தாக்கினர். இறுதியில் உன் தங்கைமார் இருவரையும், விசாரணைக்கென்று கதறக் கதற இழுத்துச் சென்றனர். மறுநாள் கேணியடியில் உன் தங்கைகளுடன் வேறு மூன்று பெண்களின் சடலங்கள் அலங்கோலமான நிலையில் பிணமாகக் கிடந்தன. இனி நாங்கள் வாழ்ந்து என்ன பயன்? எதற்காக, யாருக்காக வாழவேணும்?

மகனே, உனக்கு நான் கூறிய கடமை முடிந்து விட்டது. இனி... உன் விருப்பம்.

இப்படிக்கு,
உனது அம்மா.

தாயாரின் கடிதத்தை வாசித்த குமார் துடித்தான். தங்கைகளுடன் வாழ்ந்த இளமைக்கால ஞாபகங்களினால் கண்ணீர் சிந்தி, வாய்விட்டுப் புலம்பி அழுதான்.

நண்பர்கள் அவனுக்கு ஆறுதல் கூறினர். ஆறுதல் வார்த்தைகளில் அடங்கக் கூடிய சோகமா, அது?

நாட்கள் நகர்ந்தன.

தாயாரின் கடிதத்தை வைத்துக்கொண்டு பல நாட்களாக, பலவாறும் சிந்தித்தான். 'யாருடைய கடமைகளை நிறைவேற்ற இங்கு வந்தேனோ, அவர்களே அங்கு அழிக்கப்பட்ட பொழுது, இனி இங்கு எனக்கு என்ன வேலை?' இதுதான் அவனது சிந்தையில் சுழன்ற கேள்வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயாரின் கடிதம்கூட அவனுக்கு அவன் கடமைகளி லிருந்து விடுபடுவதற்கான ஒரு விடுதலைப் பத்திரம்தானே! 'மகனே, உனக்கு நான் கூறிய கடமை முடிந்துவிட்டது. இனி...உன் விருப்பம்' என்ற வரிகள் அந்த விடுதலைப் பத்திரத்தின் முத்திரையல்லவா?

ஆம்; அவனுக்கு முடிவு கிடைத்து விட்டது. திசை தீர்மானிக்கப்பட்டு விட்டது.

குமார் இங்குள்ள இயக்கக் கிளையினூடு தாய்நாடு செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தான். ஒரு போராளியாகி விடுவதில்தான் அவனுக்கு எவ்வளவு ஆர்வம்! அவன் பிரயாணமாகிற அன்று, நண்பர்கள் அவனை வழியனுப்ப விமான நிலையம் வந்திருந்தனர்.

எல்லோரிடமும் விடைபெற்றுக் கொண்ட குமார் கடைசியாகச் சொன்னான்: ''இன்று என் தங்கைகளுக்கு நடந்தது போன்று நாளைக்கு உங்கள் சகோதரிகளுக்கும் நடக்கலாம். அதுவரையும் நீங்கள் பொறுத்திராமல் இப் போதே, புறப்படுங்கள். காலம் இன்னும் கடந்து விட வில்லை.''

அவன் போய்விட்டான்.

ஆனால், அவனது இறுதி வார்த்தைகள் மட்டும் அவனது நண்பர்களின் இதயத்தில் இறுக்கமாய்த் தங்கி விட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேடதாரிகள்

செ. குணசிங்கம்


என் கண்களை என்னாலேயே நம்ப முடியவில்லை. நான் காண்பது கனவோ என்று கூட ஒரு கணம் தடுமாறினேன். அந்த மேதின ஊர்வலத்தில் பெரிய சுலோக அட்டையுடன் நிற்பது நான்கு வருடங்களிற்கு முன்பு நான் கண்ட முருகையன்தான்.

எவரையும் கவரும் அவனது கண்கள் இன்று ஒளியிழந்து பஞ்சடைந்து போயிருந்தன. மிடுக்கான அவனது தோற்றம் கூனலுற்று, வயதானவன் போல் அவனைக் காட்டிற்று.

நினைவு அலைகள் முருகையனுடன் பழகிய அந்த நாட்களை ஒன்றன்பின் ஒன்றாகத் தரிசனம் காட்டின. அப்பப்பா! என் மனத்திரையில் காட்சிகள் நிறுத்தப்படாத கடிகாரம் மாதிரி ஓடிக் கொண்டேயிருந்தன.

சொந்த நாட்டிலேயே அகதிகளாக்கப்பட்டுத் தற் செயலான விபத்தில் ஐரோப்பாவில் தஞ்சம் அடைந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கும் பல ஆயிரக்கணக்கான பிரகிருதிகளில் என்னைப் போன்ற பலர் அடங்குவர்.

இத்தாலியன் உணவு விடுதியில் 12 மணித்தியாலங்கள் கால் கடுக்க கோப்பை கழுவி, அதனால் ஏற்பட்ட வலி காலையில் நித்திரையை விட்டெழும்பும் போதுதான், வீட்டு நினைவுகள்- அம்மா- தங்கைகள்- படிப்படியாக வந்தாலும், ஏக்கப் பெருமூச்சுடன் அந்த ஆசைகளும் முளையிலேயே கருகிவிடும்.

மாதம் 2500 பிராங்குகளுக்கு வேலை செய்து வெளிக் காற்றே உடலில் படாமலிருக்கும் என்போன்றவர்களுக்கு லீவு கிடைப்பதென்றால் அதைப் போன்ற சந்தோசம் வேறென்ன இருக்கின்றது.

நேற்று வேலை முடிய இரவு 12.30 மணியாகி விட்டது. கோடை விடுமுறையில் அதுவும் பிரான்சில் நாட்களைக் கழிப்பதற்கென்றே வரும் அண்டை நாட்டு உல்லாசப் பிரயாணிகளைத் திருப்திப்படுத்த நாங்கள்தான் இரத்தத்தைப் பிழிந்து வேலை செய்யக் கிடைத்திருக்கின்றோம். ஆனால் அரசு அலுவலகங்கள் எங்கு சென்றாலும் வெற்று வார்த்தைகளான பிரான்சியப் புரட்சியின் முப்பெருங் கோசங்களான சகோதரத்துவம், விடுதலை, சமத்துவம் என்ற வாசகங்கள் பளிச்சிட்டுக் கொண்டேயிருக்கின்றன.

இரவு அறையில் படுக்கும்போது சாந்தனுக்கு சொல்லிப் போட்டுப் படுத்தேன். நாளைக்கு மேதின ஊர்வலத்திற்குப் போக வேண்டுமென்று. காலையில் அவனை எழுப்பும் போது எதுவோ வேண்டா வெறுப்பாக, ''நீ போ மச்சான் எனக்கு உதுகள் சரிவராது'' என்று சொல்லிக் குப்புறப் படுத்துவிட்டான்.

என்னைப் பொறுத்தவரை நான் அந்த உணர்வுப் பாசறையில் வளர்ந்தவன். எப்படியும் மேதினத்தில் பங்கு பற்ற வேண்டுமென்று நேரத்துடன் புறப்பட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகையனை முதன்முதல் 1979ம் ஆண்டு தான் சந்தித்தேன். சிங்களப் பகுதியிலிருந்து மாற்றலாகி கரவெட்டி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கு மாற்றம் கிடைத்தவுடன் எனது பழைய நண்பர்களின் தொடர்புகள் புதுப்பிக்கப்பட்டன. அப்போதுதான் முருகையனும் கச்சேரியிலிருந்து புதிதாக பியோனாக நியமிக்கப்பட்டான்.

சாதாரண ஏழ்மைக் குடும்பத்தில் பிறந்த முருகையன் என்னுடன் பழகிய அந்தக் குறுகிய நாட்களில் என் அனுதாபத்தைப் பிடித்துக்கொண்டான். அவனது குடும்பத்தின் ஏழ்மை, கலியாணச் சந்தையில் தவங்கிடக்கும் அவனது இரண்டு அக்காமார், ஏறிக்கொண்டு போகும் விலைவாசிகள் இவைகள் நாம் அன்றாடம் அலசும் விசயங்கள். இந்தப் பிரச்னைகள் எனக்கும் உங்களிற்கும் உள்ள பிரச்சினைகள் அல்ல. அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் பிரச்சனை. தொழிலாள விவசாயிகளின் போராட்டத்தின் மூலம் தான் இந்த பிரச்சனைகளைத் தீர்க்க முடியும்'' என்று ஒரு குட்டிப் பிரசங்கமே எனக்குச் செய்தான்.

அந்த வருட மேதினம் யாழ்ப்பாண றிம்மர் மண்டபத்தில் வைப்பதென்று தீர்மானிக்கப்பட்டது. இது சம்பந்தமாக சிவராசாவும், நாதனும், முருகையனும் மற்றும் சக தோழர்களும் அலுவலகம் முடிந்தவுடன் சந்திப்பதாகத் தீர்மானித்தோம்.

அந்த மேதினந்தான் இலங்கையை விட்டு வருவதற்கு முன்னர் நான் பங்கு பற்றிய ஊர்வலம்.

பகல் இரண்டு மணியிருக்கும் என நினைக்கிறேன். அனல் தெறிக்கும் வெயில். வானத்தை அண்ணாந்து பார்க்கவே முடியவில்லை. ஊர்வலத்திற்குச் செல்ல ஆயத்தமாகத் தட்டி வானின் கோர்ண் சத்தம் காதைப் பிளந்து கொண்டிருந்தது. கரவெட்டி கிழக்குத் தோழர்களுக்காகத்தான் காத்திருக்க வேண்டியிருந்தது. அதுவரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் முருகையனும் அந்த செங்கொடியைக் கட்டுவதற்கு ஆயத்தமானோம். படார் படாரென்று பெரிய கற்கள் தட்டி வானை நோக்கி விழுந்து கொண்டிருந்தன. வந்த கல் லொன்று முருகையனின் நெற்றியைப் பதம் பார்த்தது. நெற்றியிலிருந்து இரத்தம் பாய்ந்தோடியது. பக்கத்தில் நின்ற நாதன் உடனடியாக பழைய துணியொன்றினால் நெற்றியில் கட்டொன்று போட்டும் முருகையனின் நெற்றி யிலிருந்து வரும் இரத்தத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. கோபத்தின் எல்லைகள் என்னைவிட்டு மீறின. கற்கள்வந்த திசையை நோக்கி நானும் சக தோழர்களும் ஓடினோம். அங்கு சரவணனும் அவனது சகாகக்ளும்தான் நின்றிருந் தார்கள்.

ஏளனச் சிரிப்புடன் எங்களை அவர்கள் பரிகாசமாகப் பார்த்தார்கள். சரவணன் ஆவேசத்துடன் "உந்தச் சிவப்புச் சட்டைக்காரர்களால்தான் நாடே உருப்படாமல் போய்விட்டது. உலகத் தொழிலாளர்களை ஒன்றுபடுத்தி உலகத்தை மாற்றியமைப்பதையும் நாங்கள் பார்க்கத்தான் போகிறோம்" என்று குண்டர்கள் சகிதம் எங்களை நோக்கித் தாக்க வந்தான். நல்ல வேளை கரவெட்டி கிழக்குப் பொடியன்கள் அப்போது வந்துவிட்டனர். அவர் களும் ஆவேசத்துடன் வர சரவணன் தன் கூட்டத்தின ருடன் "தமிழ்த் துரோகிகள் ஒழிக" என்ற கோசத்துடன் அந்த இடத்தை விட்டு உடனடியாக மறைந்துவிட்டான்.

இந்த நிகழ்வுகள் நடந்து முடிந்து நான்கு வருடங்கள் உருண்டோடிவிட்டன.

சென்ற மேதினத்தில் அதே சரவணன் தமிழ் மக்கள் கலந்து கொண்ட மேதினத்தில் கோசங்கள் சொல்லிக் கொண்டு முன் வரிசையில் "உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருகங்ள்" என்ற சுலோகத்தைத் தூக்கிக்கொண்டு சென்றதை முருகையனுக்குச் சொல்ல வேண்டுமென்ற ஆவலில் முருகையன் நிற்கும் ஊர்வலத்தின் ஆரம்பப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதியை அடைந்த போது எழுந்த கோஷங்கள் வானைப் பிளந்தன.

பாலஸ்தீன விடுதலை இயக்கம் வாழ்க!

தென் ஆப்பிரிக்க ஒடுக்கு முறை அரசாங்கம் ஒழிக!

இலங்கைப் பாசிச அரசாங்கம் ஒழிக!

தமிழ் கோஷங்கள் பாரீஸ் வீதியில் காதைப் பிளந்தன.

போலி வேடதாரிகள் மத்தியிலும் முருகையன் போன்ற உண்மையான உணர்வு கொண்டவர்கள் இருக்கின்றார்கள் என்ற மனத்திருப்தியுடன் முருகையனுடன் நானும் கலந்து கொண்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனக்கலவரம்


**மதனறூபன்**

இயற்கையன்னையின் எழிற் கரங்கள் அந்த நகரத்தை அரவணைத்துக் கொண்டிருந்தன. சிங்கள நாட்டின் தலை நகரில் இருந்து சுமார் பத்துக் கி. மீட்டர் தள்ளியிருக்கும் அந்த நகரத்தின் அழகைப் பாராட்டதவர்கள் இல்லை எனலாம். யாரோ ஒரு தமிழ்க் கவிஞன் அந்தக் கிராமத்தைப் பார்த்து "களனி நதியோரத்து கழனிகள் சூழ் நகரம்" என வர்ணித்துமுள்ளான். களனி நதியின் நீண்ட கரங்கள் அந்த இடத்தைச் சுற்றி வளைந்த வண்ணம் நீரோடைகளாக ஓடிக் கொண்டிருந்தன. எப்பொழுன பார்த்தாலும் பச்சைப் பசேல் என்றே அந்தப் பகுதி இருக்கும்.

நகரத்தின் நடுவில் ஒரு பௌத்த விகாரை; சற்று வடக்கே சென்முல் ஒரு முஸ்லீம் பள்ளிவாசல்; ஒரு தேவாலயம்; புகையிரதநிலையத்திற்கு அண்மையில் ஒரு இந்துக் கோயில். அத்துடன் இரண்டு சிங்கள மகா வித்தியாலங்கள், இரண்டு முஸ்லீம் மகாவித்தியாலயங்கள், ஒரு இந்து மகாவித்தியாலம் என எல்லாச் சமயத்தாருக்கும், எல்லா இனத்தவர்க்கும் பொதுவான நகரமாகத் திகழ்ந்து கொண்டிருந்தது, களனி.

எல்லாவற்றிற்கும் மேலாக அந்தக் கிராமத்துக்கு அழகு செய்தது, ஆயிரக்கணக்கான தொழிலாளர்களைக் காப்பாற்றும் அந்த உரக்கொம்பனிதான்.

ம.—2




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரமணன் சைக்கிளை விரைவாக மிதிக்கலானான்.

வீட்டில் அம்மா எதிர்பார்த்துக் கொண்டிருப்பார் என்று தெரியும் அவனுக்கு. தான் போய் சாப்பிட்டுப் படுக்கும்வரை அம்மா கொட்டக்கொட்ட விழித்திருப்பார் என்று தெரியும்.

ரமணன் திப்பிடிக் கொடை பாலத்தைக் கடந்து வந்து கொண்டிருந்தான்.

அந்த நீரோடை பூரண நிலவின் கிரணங்களால் பள பளத்துக் கொண்டிருந்தது. அந்த அழகில் தன்னை மறந்த ரமணன் சைக்கிளின் வேகத்தைக் குறைத்து நிறுத்தி பாலத்தில் காலை வைத்து நின்றுகொண்டு ஆற்றையும் வயல் வெளிகளையும் உற்று நோக்கினான். அவை எவ்வளவு அமைதியாக இருந்தன! இடைக் கிடையே மீன்கள் மட்டும் சற்று மேலே துள்ளி வான்மதியின் மலர் முகத்தைப் பார்த்துவிட்டு போய்க் கொண்டிருந்தன.

யாருமே எதுவுமே மறுநாள் நடக்கப்போகும் அந்தப் பயங்கரத்தை நினைக்கவில்லை.

ரமணன் வீட்டையடைந்ததும் சாப்பிட்டு நித்திரை யானான்.

வழமை போல் அன்றைய பொழுதும் புலர்ந்தது. ரமணன் தான் பணியாற்றும் பாடசாலைக்குச் சென்றான். வழியில் கண்ட சிங்கள நண்பர்கள் எல்லோரும் அவனை ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள். அவனுக்கு அது விசித்திர மாகப் பட்டது. அவன் தனது வகுப்பறைக்குள் நுழைந் தான். அந்தப் பிஞ்சு உள்ளங்களைக் காணும் போது அவனுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. தனது சிந்தனைகளை ஒதுக்கிவிட்டு பாடங்களை ஆரம்பித்தான்.

முதல் பாடம் முடிய மணி அடிக்கும்போது கணேசும் பாஸ்கியும் வகுப்பறைக்குள் நுழைந்தார்கள். கணேசின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகத்தில் கலக்கம் காணப்பட்டது. அவன் அருகில் வந்த கணேகேஸ் ''ரமணா, பிரச்சனையைப் பற்றித் தெரியுமா? கொழும்பு எல்லாம் பற்றி எரிகின்றது. எங்கும் ஒரே புகை மண்டலம். என் கண் முன்னாலேயே தமிழர்களை வெட்டிப் போட்டு எரித்துக் கொண்டிருக்கின்றார்கள். நான் எப்படியோ தப்பி வந்து விட்டேன். உடனடியாக எல்லா மாணவர்களையும் அனுப்பவேண்டும். நானும், பாஸ்கியும் உணுப்பிட்டிப் பாடசாலை மாணவர்களை பத்திரமாக அனுப்பிவிட்டோம். உனது அதிபரிடமும் அறிவித்தாகி விட்டது. இனி மாணவர்களை அனுப்பிவிட்டு வீடு போக வேண்டியதுதான்'' என்றான்.

அதே நேரம் அதிபரின் சுற்றறிக்கை வந்தது. மாணவர்கள் எல்லோரையும் உடனடியாக வீடுகளுக்குத் திரும்பும்படியும், நாட்டின் குழப்ப நிலைமை சீரடைந்ததும் மீண்டும் பாடசாலை திறக்கும் என்றும் இருந்தது.

ரமணனும், கணேகேசும், பாஸ்கியும் சேர்ந்து பஸ்ஸுக்கு காசு இல்லாதவர்களுக்கு பணம் கொடுத்து பஸ்ஸிற்குச் செல்ல ஏற்பாடு செய்துவிட்டு வீட்டிற்குச் சென்றனர்.

அப்பா அப்பொழுதுதான் வீட்டிற்குத் திரும்பி வந்தார். அவர்களைக் கண்டதும் அவர் ''தம்பிமாரே! கெதியாய் வீடுகளுக்குப் போய்ச் சேருங்கோ. இந்த முறை நிலமை பயங்கரமாகப்போய்விட்டது. வீடுகளில் உங்களைத் தேடுவார்கள், ஓடுங்கள்'' என்றுகூறி கணேகேசையும் பாஸ்கியையும் அனுப்பி விட்டார். வரும் வழியில் அவனது சிங்கள நண்பர்கள் ''மச்சான் இக்மனட்ட கெதரட்ட பலயாங் மேயின் டெப்பா. கோலால பட்டங் அரகென்ன தியன்ன (நண்பா விரைவில் வீடு போய்ச் சேர். இங்கே நிக்காதே வன் செயல் ஆரம்பமாகி இருக்கின்றது)'' என்றார்கள்.

ரமணன் அவர்களுக்கு நன்றி கூறிவிட்டு வீட்டிற்குச் சென்றான். வழியில் வழமைக்கு மாறாக மக்கள் பரபரத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தார்கள். அவன் வீட்டை அடைந்தபோது வீட்டில் எல்லோரும் பீதியுடன் காணப்பட்டார்கள்.

வீட்டுச் சாமான்களை என்ன செய்வது, எங்கு கொண்டு ஒழித்து வைப்பது என்று தெரியாமல் அவர்கள் தவித்துக் கொண்டிருந்தார்கள்.

ரமணனோ, ''அப்படி ஒன்றும் ஏற்படாது. அயலவர்கள் எவ்வளவு நல்லவர்கள்!'' என்று கூறினான்.

மாலை வந்தது. வானமெங்கும் ஒரே புகைமண்டலமாகக் காணப்பட்டது. தமிழர்களின் நிலைமையைக் கண்டு தமிழர்கள் அழிக்கப்படுவது கண்டு வானமே, சினமடைந்தது போல் நாற்புறமும் தீயின் நாக்குகள் தெரிந்த வண்ணம் இருந்தன.

அப்போது அங்கு வந்த பக்கத்து வீட்டு நூருக் அண்ணை ''சீக்கிரம் எங்காவது போய்விடுங்கள். தேவசகாயம் வீடும் சரி. தம்பிராஜா வீடும் பற்றி எரிகின்றது'' என்று கூறினார்.

ரமணனுக்குப் புரிந்துவிட்டது, இம்முறை தாங்களும் தாக்கப்படுவது உறுதி என்று. நண்பர்கள் என்ன செய்கிறார்களோ, எல்லாருக்குமே தங்கையாக விளங்கும் சோமசுந்தரி எப்படி இருக்கின்றாளோ என்று யோசித்துக் கொண்டிருக்கும்போது தூரத்தில் குண்டு வெடிக்கும் சத்தங்களும், மக்களின் அலறல்களும் கேட்டன.

வீட்டில் இருக்கப் பயந்த அவனது பெற்றோர் அயலிலுள்ள துவான் மாமா வீட்டிலே போய் ஒளிந்து கொண்டனர். ரமணன் மட்டும் பக்கத்து வீட்டில் நின்று கொண்டிருந்தான்.

திடீரென ''பறதெமலோ'' எனக் கூச்சலிட்டுக் கொண்டு ஒரு காடையர் கூட்டம், வாள், கம்பு, வெடிகுண்டுகள் சகிதம் வளவிற்குள் நுழைந்தனர். அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களை இதற்கு முன்னால் கண்டதில்லை. ஒரு சிலரைத் தவிர எல்லோரும் புதியவர்கள். முன்னால் வந்தவனின் கையில் ஒரு பேப்பர் இருந்தது. அவன் வீட்டிற்கு முன்னால் வந்து "இதுதானா முருகேசனுடைய வீடு?" எனக் கேட்டவாறு கையில் இருந்த இரும்புக் கம்பியால் அவர்கள் வீட்டை உடைக்கத் தொடங்கினான். ஏனையவர்களும் தாக்கத் தொடங்கவே கதவு உடைந்து விழுந்தது.

உள்ளே புகுந்த காடையர் கோஷ்டி வீட்டைச் சூறையாடிய பின் வீட்டின் முன்பாகப் பொருட்கள் எல்லாவற்றையும் போட்டுக் கொளுத்தினர். ரமணன் எல்லாவற்றையும் ஆத்திரத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான். அந்த நிலையில் அது ஒன்றைத்தான் அவனால் செய்ய முடிந்தது.

திடீரென அக்காடையர் கோஷ்டி அடுத்த வீட்டிற்குள் புகுந்து தமிழர்கள் இருக்கின்றார்களா என்று தேடத் தொடங்கினர்.

ரமணன் சட்டென்று உள்ளறைக்கு ஓடி கட்டிலின் கீழ் ஒளிந்து கொண்டான். அந்த வீட்டுக்காரியான பத்தீன் அக்காவிற்கு ஒரு யோசனை தோன்றியது. நிறைமாதக் கர்ப்பிணியான அவர் கட்டிலின் மேல் படுத்துக் கொண்டு பிரசவ வேதனையால் துடிப்பது போல் நடிக்கலானார்.

உள்ளே வந்த அந்தக் காடையர் கோஷ்டி கட்டிலின் கீழ் தேடினார்கள். கட்டிலின் கீழ் பழைய மெத்தை. அதனை இழுத்துப் பார்த்தார்கள். ஆனால், அது வரவில்லை. பத்தீன் அக்காவை எழுப்ப முடியாத அவர்கள் மெத்தையை வாளினால் குத்திவிட்டுச் சென்றனர்.

மெத்தையின் மறுபுறம் கட்டிலுக்கும் சுவருக்கும் இடையில் படுத்திருந்த ரமணனுக்கு ஒருமுறை உயிர் போய் வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடையர் கோஷ்டி வெளியே சென்றதும் நாருக் அண்ணை ஓடிவந்து "ரமணா எழும்பி ஓடிவிடு, ஏனெனில் நீ இங்கிருப்பது அவர்களுக்குத் தெரிந்து விட்டது. அவர்கள் மீண்டும் வருமுன்பு ஓடிவிடு" என்று அவனை அவசரப் படுத்தினார்.

இனியும் அங்கிருக்கக்கூடாது என்று நினைத்த ரமணன் வெளியே வந்தான்.

அவனைக் கண்டதும் ஒரு கூட்டத்தினர் வாட் களுடன் ஓடிவந்தனர்.

ரமணன் யோசித்தான், அவர்களுடன் நின்று போராடி மடிவோமா என்று. அவர்களோ வெறி பிடித்துள்ள கூட்டத்தினர். எல்லோருமே ஆயுதபாணியினர். அவனோ, நிராயுதபாணி. எனவே, அந்தச் சமயம் தப்பி ஓடுவது தான், தான் செய்யக் கூடியது என உணர்ந்து அவன் பின்புறமுள்ள வயலுக்குள் இறங்கி, ஓடத் தொடங்கினான்.

காடையர்களும் விடாமல் துரத்தவே அவன் சட்டென்று வயலின் தண்ணீருக்குள் படுத்துக்கொண்டான்.

வானிலே வான்மதியின் பூரண உருவம். எல்லா வற்றையும் தெளிவாகக் காட்டிக் கொண்டிருந்தது. அவனால் வேறு இடத்திற்கு ஓடவும் முடியவில்லை. தண்ணீரை விட்டு எழும்பினால் தன் கதை முடிந்து விடும் என அவனுக்குத் தெரியும். அவன் சாவதை எண்ணிக் கவலைப்படவில்லை. பிறந்தவர்கள் எல்லோரும் சாகத்தானே வேண்டும்! ஆனால், அநியாயமாகச் சாக வேண்டுமோ என்றுதான் நினைத்தான். தமிழினத்தின் விடுதலைக்காய் எத்தனையோ இளைஞர்கள் விடிவிற்கு முந்திய மரணங்களாய் தமிழ் மக்களின் மனத்தில் நிரந்தர இடத்தைப் பிடித்து ஆராதனைக்குரிய கல்லறைகளாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கிக் கொண்டிருக்கும் போது, நான் வெறும் சிங்களக் காடைகளினால் கொல்லப்பட்டு யாருக்குமே தெரியாமல் மறைந்து விடவேண்டுமே என்றுதான் யோசித்தான்.

இதற்கிடையில் தண்ணீருக்குள் இருந்த இரத்தம் குடிக்கும் அட்டைகள் தங்களுக்கு இரை கிடைத்த மகிழ்ச்சியில் தங்கள் கைவரிசையைக் காட்டத் தொடங்கின. தொழிலாளி வர்க்கத்தினரைச் சுரண்டும் முதலாளி வர்க்கத்தினர் போல் அந்த அட்டைகளும், இரத்தம் குடிக்கத் தொடங்கின. அவற்றைக் கழற்றி எறிவது கடினம். அவை தங்களுக்குத் தேவையான இரத்தத்தைக் குடித்து இனிக் குடிக்க முடியாது என்றநிலை ஏற்பட்டால்தான் அவை தானாகக் கழன்று விழும்.

அட்டைகள் நூற்றுக் கணக்கில் அவன்மீது படையெடுக்கத் தொடங்கின. அட்டைகளை உடலிலிருந்து கழற்ற வேண்டுமானால் சவர்க்காரம், அல்லது உப்புத் தண்ணீர் வேண்டும். இல்லாவிட்டால் நாம் பிய்த்தெடுக்கும் போது உறிஞ்சிகள் உடலில் தங்கிவிடும். பிய்த்தெடுத்தாலும் காயத்திலிருந்து இரத்தம் வந்து கொண்டிருக்கும்.

மாகெதர (பெரியவீடு) என்று அழைக்கப்படும் நமசிவாயம் மாமாவின் வீடு காடையர்களால் தாக்கப்படத் தொடங்கியது.

அந்த வீட்டுக்காரர்கள் அவனைத் தாண்டி ஓடிக் கொண்டிருந்தனர்.

அவர்களைத் தேடி வயல் எங்கும் தேடுதல் தொடங்கியது. ஒருவன் ரமணனுக்கு அருகில் வந்து வாளால் குத்தினான். குத்து ரமணனுக்கு அருகில் விழுந்தது. ரமணன் மூச்சை அடக்கிக் கொண்டு தண்ணீருக்குள் ஒளிந்து கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடியவர்கள் களைத்து அப்பால் போனார்கள். ரமணன் நிம்மதியாக அப்போதுதான் மூச்சு விட்டான். ஆனாலும் உடலிலிருந்து கழற்றிய அட்டைகளை அவனால் தூரத்தில் எறிய முடியாதிருந்தது. ஏனெனில் அவன் ஏதாவது சிறு சத்தம் போட்டாலும் அவர்கள் பிடித்துக் கொண்டு விடுவார்கள். எனவே அவற்றை அவன் பக்கத்திலேயே விடவேண்டியிருந்தது. ஒன்றைக் கழற்றிய மறு கணமே காத்திருந்த அட்டைகள் அந்த இடத்தைப் பிடித்துக் கொள்ளும்.

அவனது போதாத காலத்திற்கு ஒரு நீர்ப்பாம்பு அவன் காலைச் சுற்றியது. எப்படியோ தண்ணீருக்குள் வைத்து அதன் கழுத்தை நெரித்து அதனைக் கொன்றான்.

நேரம் போய்க் கொண்டிருந்தது. அதிகாலை 3 மணி என உரக் கொம்பனியில் மணி கூறியது.

ரமணன் மெல்ல மெல்ல ஊர்ந்து கரையை அடையத் தொடங்கினான்.

நிலவு முகில்களுக்கிடையில் மறைந்து விளையாடும் பொழுது அவன் கொஞ்சத் தூரம் ஊர்ந்து செல்வான். பின் அப்படியே தண்ணீருக்குள் மூழ்கி விடுவான். வயலில் உள்ள "பன்" எனப்படும் பாய் பின்னுவதற்காகப் பாவிக்கப்படும் ஒரு வகைப் புல் அவன் உடம்பெல்லாம் தன் கைவரிசையைக் காட்டியது.

அவன் கண்களில் கண்ணீர். அந்த அழுகையினூடும் கொஞ்சத் தூரம் முன்னேறினான். கரையை அடைந்து அருகில் இருந்த காட்டிற்குத் தவழ்ந்துபோய் ஒழிந்து கொண்டான்.

பலமணி நேரம் தண்ணீருக்கடியில் இருந்தமையால் அவனின் உடம்பு நடுங்கத் தொடங்கியது. உடம்பெல்லாம் ஒரேவலி. போதாததிற்கு உடம்பின் காயங்களால் குருதி வடிந்து கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுதும் புலர்ந்தது. இரவின் கோரத்தன்மையால் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்காக இரத்தக் கண்ணீர் வடித்த வண்ணம் சூரியன் தோன்றினான்.

ரமணன் தன்வீட்டை நோக்கிச் சென்றான். பின்னால் சரசரவெனச் சத்தம் கேட்க அவன் ஒரு மரத்தின் பின்னால் நின்று திரும்பிப் பார்த்தான். கோடி வீட்டு ரவி மாமா மெல்ல மெல்ல வந்து கொண்டிருந்தார். அவர் முகத்திலும் காயங்கள்.

ரமணன் வீட்டை அடைந்தான். அது அவர்கள் பல காலம் வாழ்ந்த வீடு. அவனது கதைகள் கவிதைகள் எல்லாவற்றிற்கும் பிறப்பிடமாயிருந்த அந்த வீட்டில் வெறும் உடைந்த சுவர்கள் மட்டுமே அப்போது நின்று வரவேற்புரை வாசித்துக் கொண்டிருந்தன.

ரமணனால் நிற்க முடியவில்லை. உடல் காயங்களில் இருந்து இரத்தம் நிற்காது வழிந்து கொண்டிருந்தது. அவன் தனது காற்சட்டையை முழங்கால் வரை மடித்திருந்ததால் இடுப்பில் இருந்து முழங்கால் வரை காயங்கள் இல்லை. மற்றைய இடங்கள் முழுவதும் காயங்கள்.

இதற்கிடையில் அயலவர்கள் சொன்னார்கள், மீண்டும் காடையர் கோஷ்டி வீடு வீடாகத் தேடுதல் நடத்தப் போகின்றார்களாம் என்று. எனவே தமிழருக்கு அடைக்கலம் கொடுத்திருந்த, சிங்கள, முஸ்லீம் மக்களின் மனதில் பீதி குடிகொள்ளத் தொடங்கியது. தமிழர்களை வைத்திருப்பதால் தங்களுக்கும் ஆபத்து; அவர்களுக்கும் ஆபத்து, என்ன செய்வது என்று அவர்கள் தத்தளிக் கொண்டிருந்தனர்.

ரமணன் யோசித்தான். எப்படியாவது பொலீஸ் ஸ்டேசனுக்கு போய்விட்டால் எல்லோரையும் காப்பாற்றலாம் என அவனுக்குத் தோன்றவே அடுத்த வீட்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரரிடம் ஒரு தொப்பியை வாங்கிப் போட்டுக் கொண்டு முஸ்லீம் போல் தெருவில் செல்லலானான்.

அவன் முகத்தில் இருந்த குறுந்தாடியும் அவனை ஒரு முஸ்லீம் போல் தோற்றம் அளிக்கச் செய்தது.

வழியில் கண்ட ஒரு காடையர் கோஷ்டியின் தலைவன் அவனை அணுகி "மச்சான்! இந்த நேரத்தில் எங்கே போகின்றாய்?எங்களுக்கு இன்றுசரியான கொண்டாட்டம். தமிழனுக்கு நல்ல பாடம் படிப்பித்தோம். எங்காவது தமிழர் இருந்தால் கூறு''எனச்சொல்லிவிட்டுச் சென்றான்.

வழியிலே எரிந்த வீடுகள், கைகால்கள் வெட்டப்பட்டுக் கடந்த பிணங்கள், காருடன் எரிந்த பிணங்கள் என அந்தக் கிராமமே ஒரு பிணக்காடாக இருந்தது.

பௌத்த விகாரையின் முன்னால் உள்ள அரசமரத்தில் அய்யாத்துரை மாமாவின் பிணம் தொங்கிக் கொண் டிருந்தது. அந்த ஊரே 'ஐயா' என்று மரியாதையாக அழைக்கும் அவரையே கொலை செய்து கட்டிவிட்டிருக் கின்றர்களே, என எண்ணியபோது நெஞ்சு ஓலமிட்டு அழுதது.

அவன் இரண்டு நாட்களுக்கு முன்னால் ரசித்த பாலத்தின் அருகில் வந்தபோது திடீரென ஆரவாரத்துடன் ஒரு கோஷ்டிவந்து கொண்டிருந்தது. பின்னால் ஒரு தமிழ் வாலிபன் கட்டி இழுத்துக் கொண்டுவரப்பட்டான். அவனது ஓலம் ரமணனின் மனதை வதைத்தது.

ரமணனால் ஒன்றுமே செய்ய முடியாத நிலை. அவனைக் கண்டதும் அந்தக் கோஷ்டி ஒருகணம் நின்றது. பின் அப்படியே சென்று விட்டது.

ரமணன் பொலீஸ் நிலையத்தை அடைந்தான். அவன் எவ்வளவு மன்றாட்டமாகக் கேட்டும் பொலீஸ்காரர்கள் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவன் கெஞ்சினான், அவர்கள் அவனை விரட்டினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்தும் வீதியில் நடமாடுவது தற்கொலைக் கொப்பானது என்ற எண்ணத்துடன், அவன் புகலிட மொன்றைத் தேடிக்கொண்டிருக்கையில், கூட்டங்கூட்ட மாக கொழும்புத் தமிழர்கள் அகதி முகாமை நோக்கிச் செல்வதைக் கண்டான்.

இனி பெற்றோரையோ, நண்பர்களையோ தேடும் முயற்சி பலிதமாகப் போவதில்லை. ஒருவேளை அவர்களும் அந்த அகதி முகாமுக்கே வந்திருக்கலாம் என்ற எண்ணத்தில் ரமணனும் அவர்களுடன் சேர்ந்து அகதியாய் அகதிகள் முகாமை நோக்கி நடந்தான்.

அங்கே துணிமூட்டையும், பெட்டியுமாகவோ, எதுவுமே இல்லாது வெறுங் கைகளுடனோ திரண்டிருந்த ஆயிரக்கணக்கான மக்களையும் பார்க்க, இனக்கலவரத்தின் தாக்கம் எத்தகையது என்பதை ரமணன் உணர்ந்தான்.

உறவினர்களை, குடும்பத்தினரைத் தவறவிட்டவர்கள் பலி கொடுத்தவர்களின் அழுகையும், புலம்பலும் ஒரு மாபெரிய சோகத்தின் உருவெளிப்பாடாய் இருந்தது.

அந்தச் சோகத்தினுள்ளும் அவனுக்குச் சந்தோஷம் தந்தது அங்கே அவனுடைய பெற்றோரும் இருந்ததுதான்.

இரவு 11.30 மணியளவில் எல்லோரையும் ஏற்றிக் கொண்டு பஸ் வண்டிகள் மஹாநாம அகதிமுகாமை அடைந்தன.

மறுநாள் முழுவதும் சாப்பாடு ஒன்றும் இல்லாமல் மக்கள் துடித்தனர். காசுள்ளோர் வெளியே சென்று சாப்பாடு கொண்டு வந்தனர். ஆனால், எல்லாவற்றையும் பறி கொடுத்தவர்கள் எதுவும் செய்ய முடியாமல், திகைத்துப் போய் நின்றனர். பச்சிளம் குழந்தைகள் பசியால் துடித்தன.

எப்படியோ பதினான்கு நாட்கள் அங்கே பல்வேறு வசதியீனங்களுக்கும், பயங்களுக்குமிடையே கழிந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த முகாமில் இருந்த பதினான்கு நாட்களும் மறக்க முடியாத நாட்கள். சாப்பாட்டிற்கு வரிசை; தண்ணிக்கு வரிசை; மலசலம் கழிக்க வரிசை என எல்லாவற்றிற்குமே வரிசை. அந்தச் சோக நாடகம் பதினாறு நாட்கள் தொடர்ந்தது. பதினாறு நாட்களின் பின் இலங்கைப் புகையிரதப் பகுதியினர் ஒழுங்கு செய்த புகைவண்டியில் தன் பெற்றோர்களுடன் அவர்களின் வேதனைகளுடன் ரணங்களுக்கு தமிழீழம் நிச்சயம் மருந்திடும் என்ற எண்ணத்துடன் அவன் தான் வளர்ந்த மண்ணைப் பிரிந்து வாழவேண்டிய மண்ணை நோக்கிப் பயணமானான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் ஆத்மாவின் பயணம்

பார்த்திபன்

அவள் நெஞ்சில் மோகன இராகங்களை மீட்டிய அந்தக் குரல்—

அவள் திரும்பிப் பார்த்தாள்.

'மன்னிக்க வேண்டும்' என அழைத்த திசையில் அக்குரலுக்குரியவன் வாடிய முகத்தோடு நோயாளியாய்ப் படுத்திருந்தான். அவள் இதை எதிர்பார்க்கவில்லை. அவள் வாழ்வில் இப்படி ஒரு நிலையில் மீண்டும் அவனைச் சந்திப்போம் என்று அவள் நினைக்கவேயில்லை.

''இங்கே கொஞ்சம் வர முடியுமா?'' அவன் அழைத்தான்.

அவளுக்குக் கண்களைக் கசக்கி விட்டுத் திரும்பவும் பார்க்கவேண்டும் போல் இருக்கிறது. அந்த முகம்—அவள் நெஞ்சில் ஆழமாகப் பதிந்துவிட்ட அந்த முகம் 'மூர்த்தி, நீங்களா?' என்று அவளுக்கு வாய் விட்டுக் கத்த வேண்டும் போல் இருந்தது.

ஒரு கணந்தான். அவள் தன்னைச் சமாளித்துக் கொண்டு கட்டிலின் அருகே சென்றாள். அந்த நிலையிலும் அந்தக் கண்களின் பிரகாசம் மட்டும் குறையாமல் இருக்கிறது. அவளை அருகே கண்டதும் அவளைத் தெரிந்து கொண்ட புன்னகை அவன் முகத்தில் மிளிர்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மேரி. நீங்களா...?'' என்கிறான் அவன்.

மேரி கண்களில் திரண்டு வந்த கண்ணீரைப் புன்னகையால் மறைக்கப் பார்த்தாள்.

''ஒன்றுமில்லை. தாகமாக இருக்கிறது. குடிக்கிறதுக்கு தண்ணீர் கொஞ்சம் தர முடியுமா?'' என்கிறான் அவன்.

'இதோ' என்றவள் அங்கு இருந்த கூசாவிலிருந்து தண்ணீரை வார்த்துக் கொடுத்தாள்.

'மன்னிக்க வேண்டும். உங்கள் கடமையின் இடையில் குறுக்கிட்டு விட்டேன்.'

அவள் அவனைத் திரும்பிப் பார்த்தாள். அவனுக்கு அவள் நிலைமை விளங்கி விட்டது.

'நர்ஸ்' மேரி, தான் ஒரு தாதியாக இல்லாமல் அவனுக்குத் தான் விரும்பிய உறவு நிலையில் இப்போது இருந்திருந்தால் எப்படி இருந்திருக்கும் என்று எண்ணம் தோன்றுகிறது. அந்த நினைவு அவளுக்கு சுகமாக இருக்கிறது. ஆயினும், கண்ணீர் அணை உடைத்துப் பாய்ந்தது.

''புனிதமான கடமைகளில் ஈடுபட்டவர்கள் தங்கள் வாழ்வில் கண்ணீருக்கு இடங் கொடுக்கக் கூடாது.'' அவளைப் பார்க்காமல் வேறு பக்கம் திரும்பி அவளுக்கு மட்டுங் கேட்கக் கூடியதாக மெதுவாகக் கூறுகிறான் மூர்த்தி. அவள் சுவர்ப் பக்கம் திரும்பி தன் இமைகளுக்குள் கண்ணீரைக் காயப் பண்ணுகிறாள்.

திரும்பவும் மேரியால் கடமைகளைச் சரியாகச் செய்ய முடியவில்லை. அவளுக்கு இது போன்ற உணர்வுகள் ஒரு போதும் ஏற்பட்டதில்லை. இயந்திரம் போல் மருந்து வகைகளைக் கொடுத்துக் கொண்டு வருகிறாள். அவளுடைய முகத்தைப் பார்த்த வயதான ஒரு நோயாளி, ''என்னம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மாதிரி இருக்கிறாய்?'' என்று கேட்கிறார். அவர் அங்கு நீண்ட காலம் இருக்கும் ஒரு நோயாளி. அவளைத் தன் மகள் போல நினைப்பவர்.

''ஒன்றுமில்லை. கொஞ்சம் தலைவலி'' அவர் ஆதரவோடு அவளைப் பார்க்கிறார். மூர்த்தியின் கட்டிலருகே வந்து அவனது மருந்துகளையுங் கொடுத்து எல்லாவற்றையும் முடித்துக்கொண்டு அவர்களது ஒப்வறைக்குச் சொல்கிறாள். அவளுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. ''என் மூர்த்தி! என் நெஞ்சம் நிறைந்த மூர்த்தி! உங்களுக்கென்ன நடந்தது?''

இருக்கையில் அமர்ந்து முழங்கைகளுக்குள் முகத்தைப் பதித்துக் கொண்டு மூர்த்தியோடு பழகிய அந்த வசந்த காலங்களை நோக்கிச் செல்கிறாள் மேரி.

பள்ளிப் பருவம், வாழ்க்கையில் ஒருமுறை வருகின்ற இளவயதுக்குரிய பசுமையான நாட்கள். மேரி, மூர்த்தி இருவரும் பல வருடங்கள் ஒன்றாகப் படித்தவர்கள். உயர் கல்வியின் போது கூட இருவருக்கும் ஒரே வகுப்புத்தான். மூர்த்தி உயர்ந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவன். படிப்பிலும் விளையாட்டுக்களிலும் சூரன். எவ்வளவு திறமையிருந்தும் அவனிடம் எவ்விதமான கர்வமுமில்லை. மிகவும் எளிமையானவன். வகுப்பில் கூட சாதாரண ஒரு மாணவனிடந்தான் மனம் விட்டுப் பழகுவான். எந்நேரமும் கலகலப்பாக இருப்பான்.

மேரி சாதாரண வறிய குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மாணவி சமயப்பற்று மிக்க ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவள். மிகவும் அடக்கமானவள். மூர்த்தி, மாணவிகளைப் பொறுத்தவரை மேரியிடந்தான் கூடுதலாகப் பழகுவான். இதனால் மற்ற மாணவிகளுக்கு அவள் மீது சிறிது பொறாமையும்கூட. உயர்கல்வி முடிந்து அவர்கள் பிரிகின்ற நாட்கள் நெருங்கின. எதிர்காலத்தைப் பற்றி ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருக்கும் ஒவ்வொரு கற்பனை. இனம் சிறிது சிறிதாக் ஒடுக்கப்பட்டுப் பல்கலைக் கழகம் போன்றவற்றில் புறக் கணிக்கப்பட்டு வந்த காலம். தரப்படுத்தலாயினும் சில மாணவ மாணவிகளுக்குஎப்படியாவது பல்கலைலக்கழகத்தில் இடம் பிடித்து டாக்டராவோ என்ஜினியராகவோ அல்லது பட்டதாரியாகவோ வரவேண்டுமென்ற ஆர்வம். சிலருக்கு உயர் கல்வியுடனே ஏதாவது உத்தியோகத்தில் சேர்ந்து விட வேண்டுமென்ற எண்ணம். மூர்த்தியோ அந்நாட்களில் ஏதோ சிந்தனையில் இருப்பவன் போல் தோன்றுவான்.

ஒரு நாள் அவன் மேரியிடம் ''மேரி நான் தொடர்ந்து படிக்கப் போவதில்லை. தெரியுமா?'' என்றான். ''ஏன் உத்தியோகம் தேடப் போகிறீர்களா?'' ''இல்லை நான் உத்தியோகம் பார்த்துக் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் இல்லை. தெரியுந்தானே மேரி? நாம் ஒவ்வொரு விஷயத்திலும் அவர்களால் புறக்கணிக்கப்பட்டு வருகிறோமே, அதைப் பற்றித்தான் யோசிக்கிறேன்.''

மேரி பேசாமல் அவனையே பார்த்தபடி நின்றாள். சிறிது நேரத்தில் மூர்த்தி ''நீஎன்ன செய்யப் போகிறாய்?'' என்று கேட்டான். மேரி யோசித்தாள். அவள் தொடர்ந்து படிக்க விரும்பினாலும் அவள் குடும்ப நிலைமை அதற்கு இடங் கொடுக்கப் போவதில்லை. இது வரைக்கும் அவள் படித்ததே பெரிய விஷயம்.

''கல்யாணங் கட்டப் போகிறாயா?'' மூர்த்தியின் விஷமக் கேள்வியினால் மேரி தலையைக் குனிந்து கொண்டு சிரித்தாள்.

''நான் கல்யாணம் செய்தால் உன்னைப் போல ஒருத்தியைத் தான் கட்டுவேன்.'' அவன் இப்படிக் கூறியதும், தான் இருக்கும் இடத்தை மறந்து எங்கோ ஆகாயத்தில் பறப்பதைப் போல உணர்ந்தாள் மேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேரி மேரி என்று அவன் இரண்டு தடவை கூப்பிட்டதும்தான் தன் நிலைக்கு மீண்டாள் அவள்.

மூர்த்திக்கு தான்ஏதோ தவறாகக் கூறிவிட்டது போல் தோன்றியது. ''மேரி, சாதாரணமாகத்தான் சொன்னேன். தவறாக இருந்தால் மன்னித்து விடு.'' மேரி பேசாமல் இருந்து விட்டாள்.

நாட்கள் ஓடுகின்றன.

ஓரிரு மாதங்களில் அவர்கள் பிரியப் போகிறார்கள். மேரியின் உள்ளத்தில் அவன் சொன்ன வார்த்தைகள் மின்னி மின்னி மறைகின்றன. நாளாக நாளாக அவ்வார்த் தைகள் அவள் நெஞ்சில் சுடராய் ஒளிர்ந்தன. சில இரவுகள் தூக்கமில்லாமலும் தவித்திருக்கிறாள். பரீட்சை நாட்கள் நெருங்கும் போது கூட மூர்த்தி பள்ளிக்கு வருவதில்லை. அவளிடம் எதுவும் சொல்வதில்லை. அவனைக் காணா விட்டால் அவள் மனம் ஏங்கும். தான் அவனைப் பற்றிய நினைவுகளில் தவிப்பதை உணர்ந்தாள் அவள்.

ஒரு நாள் தனிமையில் மேரி மூர்த்தியிடம் ''மூர்த்தி பள்ளி நாட்கள் முடியப் போகிறது. என்னை மறந்து விட மாட்டீர்களே?'' என்றாள்.

அவனுக்கு அவள் கேட்ட தோரணை விளங்கவில்லை. ''பைத்தியம்! உன்னை மறப்பேனா? மேரி, நான் சில வேளை பரீட்சை எடுப்பேனா என்று கூடத் தெரியாது''

மேரி அவனை ஆச்சரியத்தோடு பார்த்தாள், ''நான் இதெல்லாம் பாஸ் பண்ணி உத்தியோகம், குடும்பம், குழந்தை -குட்டிகளென்று சாதாரண வாழ்க்கை வாழப் பிறந்தவனாக என்னை எனக்குத் தெரியவில்லை. நாம் பிறந்த இந்த மண்ணுக்காகவும் என் உயிரான தமிழுக் காகவும் ஒரு களம் அமைந்தால்...அதில் நான் அழிந்தால் கூட, அதுதான் என் வாழ்க்கை.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேரியால் ஒன்றும் பேசமுடியவில்லை. பள்ளி நாட்கள் முடிந்தன. மூர்த்தி பரீட்சை எழுதுகிறான். ஆனால் முடிவுக்காக அவன் காத்திருக்கவில்லை. பிறகு அவனை அவள் ஒரு போதுங் காணவில்லை.

எத்தனை வருடங்களுக்குப் பிறகு அவனை இந்தக் கோலத்தில் காண்கிறாள். இடையில் இந்த நிலையில் அவள் ஒரு தாதியாக வாழும் போது கூட அவனை, அந்த நினைவுகளை முற்றாக மறந்து அவளால் வாழ முடியவில்லை.

மேரி மேரி என்று சக தோழி கூப்பிட்டதுந்தான் தன் நினைவுகளைக் கலைத்தாள்.

''மேரி புதிசாய் வந்திருக்கிறானே மூர்த்தி என்று உன்னுடைய 'வார்ட்'க்கு, அவன் இயக்கத்திலே இருக்கிறவனாம். ஒருதருக்கும் தெரியாது. பயங்கரமான ஆளாம்'' 'ஆ'! மேரிக்கு மூச்சை அடைக்கிறது. ஆயினும் ''சீ! அப்படி இருக்காது'' என்றாள். ஆனால் அவளுக்குத் தெரியும், அது உண்மையாய் இருக்குமென்று.

அவர்களுக்கு இது போன்ற விஷயங்கள் சாதாரணம். அரசுக்கு எதிராய்ச் சதி செய்தார்கள் என்று அடி அடியென்று அடித்து பிறகு அங்கு கொண்டு வந்து போடுவார்கள். காக்கிச் சட்டைகள் காவல் நிற்கும். ஆனால் மூர்த்தி அப்படி வரவில்லையே! பல யோசனைகளுக்கிடையே தன் கடமைகளைக் கவனிக்கிறாள்.

மாலை பார்வையாளர் நேரத்துக்கு முன்பாக அவளது அன்றைய கடமை முடிந்தது. பதில் கடமையேற்கும் தாதியும் வந்து விட்டாள். மாலைப் பார்வையாளர் நேரம் வந்ததற்கான மணி கலகலவென்று ஒலித்தது.

மேரி தன் விடுதியை நோக்கிச் சென்று கொண்டிருந்தாள். பார்வையாளர்கள் குபுகுபுவென்று வந்த வண்ணம் இருந்தனர். கூட்டத்தினரிடையே வந்து கொண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிருந்த ஒரு பெண் அவள் கவனத்தைக் கவருகிறாள். இன்னொரு தடவை திரும்பிப் பார்க்க வேண்டுமென்பது போல் அவ்வளவு அழகு. அவள் முகத்தில் கோடிட்டிருந்த கவலை ரேகைகளை ஒரு நொடியில் புரிந்து விட்டாள் மேரி. கண்களில் மிரட்சி.

பாவம் யாருடைய உறவுப்பெண்ணோ தெரியவில்லை.

விடுதிக்கு வந்து முகத்தைக் கழுவி உடைமாற்றிய பின் மூர்த்தியைச் சென்று பார்க்க எண்ணும் மேரி, அங்கு சென்றாள். மூர்த்தியின் கட்டிலருகே ஓர் அழகான பெண். கண்களிலே வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருக்கிறாள். மூர்த்திக்கு யாராக இருக்கும் அந்தப் பெண் என்று நினைத்தவளாய் அருகே செல்கிறாள் மேரி.

அவளைக் கண்ட மூர்த்தி மெதுவாகச் சிரிக்கிறான். அந்தப் பெண்ணும் மேரியைப் பார்த்துச் சிரிக்க முயல்கிறாள்.

''மேரி, இது என்னுடைய மனைவி சுமதி'' மூர்த்தி கூறினான்.

மனைவியா? மூர்த்திக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா? கல்யாணம் ஆகியும் இதுபோன்ற இயக்க நடவடிக்கைகளா? அவள் நெஞ்சில் வலி. மௌனத்தைக் கலைத்தவன் மூர்த்திதான்.

''நான் எவ்வளவோ சொன்னேன். எவருமே கேட்கவில்லை. எப்படியோ வாழ்ந்து கொண்டிருந்த என்னை இந்த வலையில் சிக்க வைத்து விட்டார்கள். எல்லா விதத்திலும் என்னால் பாழாகிப் படுக்கையில் இருந்த என் அம்மா என்னைத் தவிர யாரோடும் வாழ மாட்டேன் என்ற மாமன் மகளாகிய இவள் கண்ணீர். தாய்ப் பாசத்துக்கு அணை போட முடியாமல் என் தாயின் சாவைக் காப்பாற்ற இவளைக் கைப்பிடித்தேன். என்னால் இவளுக்கு எந்தச் சுகமுமில்லை.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அக்கா நான் சந்தோஷமாகத் தான் இருக்கிறேன். இவருடைய புனிதமான நோக்கங்களுக்கு நான் எந்த விதத்திலும் தடையில்லை. ஆனால் உடம்பைக் காப்பாற்றாமல் இப்படி..." என்று அவள் முடிக்குமுன்...

"ம், உடம்பு! ஒரு இலட்சியத்துக்கென என் உயிரையே அர்ப்பணித்த பிறகு உடம்பைப்பற்றி என்ன கவலை? நான் யாருக்காவது துரோகஞ் செய்திருந்தால் மன்னிக்கப் படுவேன். அது எனக்குத் தெரியும். நான் வாழும் நாட்கள் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த உலகத்திலிருந்து எனக்கு விடுதலை கிடைக்கப் போகிறது."

"நான் சாவதற்கு ஒரு போதும் பயப்படவில்லை. ஏனென்றால், நான் பல கொடிய மிருகங்களைச் சுட்டு வீழ்த்தியிருக்கிறேன். அதே போல் என் தோழர்களின் வீரச்சாவையும் என் கண் முன்னால் பார்த்திருக்கிறேன். நான் களத்தில் மடிந்திருக்கலாம், ஆனால் அப்படியொரு சந்தர்ப்பம் எனக்கு நேரவில்லை." பேசப்பேச மூர்த்திக்கு மூச்சிரைத்தது.

"மூர்த்தி, உங்கள் நிலமையில் நீங்கள் இப்படிப் பேசக் கூடாது. உங்களுக்கு ஓய்வு தான் தேவை" என்றாள் மேரி.

"என்னைச் சிறிது நேரம் பேச விடுங்கள். எங்கள் இலட்சியம் நிறைவேறும் வரை சாவு இந்த உடம்புக்குத் தான். உயிர் இன்னொரு போராளிக்குள் புகுந்து பலத்தைக் கொடுக்கும். ஓயாத உழைப்பும், காட்டு வாசமும் என்னை நோயாளியாய்ப் படுக்க வைத்துவிட்டன. நான் திருமணம் ஆனவன் என்பதால் என் தோழர்கள் என்னை வீட்டில் கொண்டு வந்து விட்டார்கள்.

"சிங்கள ராணுவத்தின் பிடியினில் சிக்காது இப்படியே இறந்து விட்டால் கூட ஒரு வகையில் நல்லதுதான், எத்தனை ஆண்டுகள்! எத்தனை ஆண்டுகள் நல்ல ஒரு நிலைமைக்காக உழைத்தோம்!" அவன் கண்களை மூடிக் கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் முகத்தில் மாறுதலை உணர்கிறாள் மேரி. அவளுக்கு விளங்கி விட்டது. மூர்த்தியைக் காப்பாற்றியாக வேண்டும். டாக்டர்களை அழைக்க அறைக்கு ஓடினாள். அப்போது கடகடவென்று பூட்ஸ் காலடி ஓசைகள் கேட்கின்றன. பத்துக்கு மேற்பட்ட இராணுவத்தினர். அவள் தேகம் நடுங்குகிறது. சிறிது நேரம் வெளியே நின்று கேட்கிறாள். பல இராணுவத்தினரைக் கொலை செய்த குழுவுக்குப் பல தடவைகள் தலைமை தாங்கிய மூர்த்தியை அங்கு 'இருப்பதறிந்து கைது செய்ய வந்ததாக அவர்கள் சொல்லுவது அவளுக்குக் கேட்கிறது.

அவள் திரும்பி வந்தாள்.

அங்கே கண்மூடிய நிலையில் ஏதோ கனவு கண்டு கொண்டிருப்பவன் போல் மூர்த்தி படுத்திருந்தான். முகத்தில் அந்தக் கவர்ச்சியான புன்சிரிப்பு. மெதுவாக அவள் கைகளைத் தொடுகிறாள். அவன் கையில் உணர்ச்சி இல்லை. நாடித் துடிப்பைப் பார்க்கிறாள். துடிப்பு அடங்கிப் போயிருந்தது. அந்தச் சிங்கம் பயணம் போய்க் கொண்டிருக்கிறது என்று அவளுக்குத் தெரிந்தது. நிமிர்ந்து சுமதியைப் பார்த்தாள் மேரி. அவள் முகமாறுதலைக் கண்ட சுமதி அம்மா என்றலறியபடி மூர்ச்சித்து விழுந்தாள். பூட்ஸ் காலடியோசைகள் மூர்த்தியின் கட்டிலைச் சூழ்ந்து கொள்கின்றன. அவர்கள் முகத்தில் அவனைச் சிறைப் பிடித்த பூரிப்பு.

ஆனால், அந்த விஷக்கரங்களுக்குள் சிக்காமல் மூர்த்தி ஏற்கனவே பயணமாகிவிட்டான் என்பது அப்போது அவர்களுக்குத் தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்படிப் புரியும்

**செல்வம்**

மழையின் துளியோடு இழைந்து வந்த மென்காற்று சேர்மன் நாட்டின் குளிர்காலத்தில் இருப்பதனை ரகுவிற்கு நினைவூட்டியது. வயலின் சேறு படிந்த கையுறையைக் கழற்றிய அவன், தன் சகபாடி ரங்கனை உற்று நோக்கினான்.

மாடு போல உழைத்த அவர்கள் இருவரும் மதிய உணவுக்கு வரும்படி அழைத்த கமக்கார முதலாளியோடு உணவு மேசையின் அருகே சென்றனர்.

வகைவகையான உணவுகள் சூப், இறைச்சி வகைகள், மரக்கறி, கிழங்கு, பொரியல், வெண்குழம்பு, ஆகாகா எத்தனை ஊட்டம் மிகுந்த உணவு வகைகள்!

''வெட்டு மச்சான், நல்லாக வெட்டு, இன்றைக்கு மணியாக இருக்கும் இந்த நூடிள்ஸ்'' என்றான் ரங்கன்.

''எப்படி எண்டாலும் மச்சான். எங்கடை சோத்துக்கும் ஒரு புளிச்சொதிக்கும் கிட்ட வருமே'' என்றான் ரங்கன்.

''வேலை வாங்கினாலும் சாப்பட்டிலை ஒரு குறையும் விடான், மணிக்கு இரண்டு மார்க் தாற இந்தக் கஞ்சப்பயல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பளத்தையும் வெள்ளைக்காரருக்குக் குடுப்பதைப்போல குடுத்தால் எங்களுக்குப் போதுமே! எங்கடை மாடுகூட இப்படி வேலை செய்யாது. இல்லையே!'' என்றான். தொடர்ந்து ''முந்தி மணிக்கு ஆறுமார்க் தந்தவன் அரசாங்கம் மணிக்கு ஒருமார்க் தாறதாலை இப்ப இரண்டு மார்க்கைக் குறைத்துப் போட்டான். ஆனால் அவனும் இல்லையெண்டால் நாங்க ரோட்டிலை சோஷல் காசோடை தான்'' என்றான் ரகு.

''பாரடா அந்தக்குட்டி சாப்பாட்டை வெட்டு வெட்டெண்டு வெட்டிறதை. சும்மா சொல்லக்கூடாது. இவளவையைப் போலே எங்கடை பெண்டுகளாலை வேலை செய்யமுடியுமே'' என்றான் ரங்கன்.

''கொஞ்சம் சாப்பிடுங்கோ. இது என்ன இளம் பிள்ளைகள் இப்படியா சாப்பிடுவது?'' என்றான் ஜேர்மன் மொழியில் முதலாளி.

''அவன் என்ன சொல்லுகிறான்?'' என்று கேட்டான் ரகு.

''நீ நல்ல பிள்ளையாம் அந்தப் பெட்டையைக் கட்டினால் நல்லாக இருக்குமாம்'' என்றான் ரங்கன்.

''என்னடா காலை வாருகிறாய்? வந்து ஏழு மாதமாகி யும் இந்த மொழி வாயுக்குள்ளை நிக்கமாட்டன் என்னுது. உனக்குத் தெரிந்த மொழியறிவை என்ரை கழுத்தறுக்கப் பாவிக்கிறாய்! எண்டாலும் நானும் பேசாமலா விடுவன்'' என்றான் ரகு.

''எனக்கு இந்த நாட்டிலை பிடித்த விசயங்களிலை இவன் எங்களோடை வேலை செய்யிறானே! அது நல்லாய்ப் பிடித்தம். வேலை கடுமைதான் எண்டாலும் தானும் எங்களோடை சேர்ந்தல்லோ வேலைசெய்கிறான். எங்கடை முதலாளிமார் என்ன செய்வினம்! கதிரையிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்கார்ந்து காற்று வாங்குவினம். அவையின்ரை கால் வயலிலை படுமே'' என்றான் ரங்கன்.

''அதுமட்டுமல்ல மச்சான். பாரன் எங்களையும் தன்னோடை வைத்து ஒரே சாப்பாட்டைத்தானே தானும் தின்னுகிறான். எங்கடை ஆக்கள் எண்டால் எத்தனை கெடுபிடிகள்' கூலியாட்களுக்குப் புறம்பான சாப்பாடு. அதுக்குள்ளை அறுவத்தெட்டுச் சாதியள் பிரச்சனைகள்'' என்று சொல்லப் போன ரகுவை,

''நல்லகாலம் சந்திராவைக் காதலித்துவிட்டாய். இல்லாட்டில் இங்கை யாரும் குட்டியைப் பிடித்திருப்பாய் இல்லையே'' என்று சொல்லித் தடுத்தான் ரங்கன்.

''ஐ. ஐ. ஐ. ஐ. பட பட, சட் சட் மை. மை. மை. மை.'' என்றுஇவர்கள் பேச்சுத் தனக்குப் புரியவில்லைஎன்றதனை நினைவுபடுத்தினாள் வெள்ளைக்கார இளம் பெண். அவனது நகைச் சுவையில் பங்குகொண்டனர் முதலாளியும் எதிரே இருந்த அவனது மனைவியும். ''நீ நினைக்கிறீயே மச்சான். இவள் இவனுக்கு ஒரே மனைவியாக இருப்பாள் என்று இவனுக்கோ இவளுக்கோ இது எத்தனையாவதோ ஆரறிவார்?''என்றான் ரங்கன் முதலாளியின் மனைவியைக் குறிப்பிட்டு,

''அந்த ஆராய்ச்சி உவ்வளவோடை நிற்கட்டும். அது இந்த நாட்டுப் பண்பாடு. சுதந்திர காதல் வாழ்வு சீதனம் எடுப்புகள் இல்லாத எளிய திருமணம். சாதி இல்லாத சமத்துவம். அதுகளை நாங்கள் கவனித்தால் வாழக் காணும் இதுகளோடை ஒருவன் ஒருத்திக்கு எண்ட எங்கடை வாழ்க்கை முறையும் சேர்ந்தால் எங்கடை சமூகத்துக்குச் சாபவிமோசனம் கிடைக்கும்''என்றான் ரகு.

''சரி மச்சான். இப்ப பசிக்கு விமோசனம் கிடைச்சாச்சு. இன்னும் நாலுமணித்தியால வேலை. அது முடிஞ்சால் அல்போசரி. இப்ப முதலாளி ராக்ரரிலை ஏறிவிடுவான்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி இடுப்பொடிஞ்ச வேலைதான். வா வா. கிளவ்சைப் போடு'' என்று அழைத்தான் ரங்கன்.

''அது சரி. வீட்டில் இருந்து கடிதம் வந்ததே? எல்லா இடத்திலும் படுபயங்கரமான பிரச்சனைகள். நேற்றைய பி.பி.சி.யிலும் கிளி நொச்சி ஸ்ரேசனிலை பத்துப் பேரைச் சுட்டுப் போட்டாங்களாம் எண்டு சொன்னாங்கள். நாங்க போகைக்கிள்ளை ஆரைப் பாப்பமோ ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம்'' எண்டான் தொடர்ந்தும் அவன்.

''எங்கடை நாட்டிலை பயமில்லாமல் வாழத்தக்க நிலை வந்தால், அந்த மண், அந்தக் கடற்கரை, அந்தக் காற்று, வெயில், மணமும் சுவையும் நிறைந்த சாப்பாடு. அ ஆ எங்களுக்கு இந்த மண்ணிலை வாழ்வு அர்த்தமில்லாதது. எப்ப போவன் எண்டு இருக்கிறன்! என்றான் ரகு.

''சந்திரா கடிதம் போட்டாவா? என்று கேட்ட நான்!'' என்றான் தொடர்ந்தும் ரங்கன்.

''ஓம் ஓம் நாலு கடிதங்கள் ஒண்டாக வந்தது. நான் என்னவோ எண்டோ எண்டு பயந்திருந்தனான். வந்தது தான் பெரிய ஆறுதலாய்ப் போய்ச்சு'' என்றான் ரகு.

''அதுதான் ஆள் கலகலப்பாய் இருக்கிறுய். சந்திரா மனம் மாறிவிட்டளோ எண்டு உள்ளூரப் பயந்திருந்தன் நான்'' என்றான் ரங்கன்.

''பைத்தியமே. அதுக்கெல்லாம் இடம் இல்லை. ஆனால் எங்கடை நாட்டு நிலவரத்தில் யாருக்கு என்ன நடக்குமோ எண்டுதான் சொல்லமுடியாது.'' என்றான் ரகு.

வேலை தொடர்ந்தது. முதலாளி ராக்ரறில் ஏறினான். அந்த இளம் பெண் வைக்கோல் கட்டுகளைத் தூக்கிக் கொடுக்க ரங்கன் அவளிடம் வாங்கிச் செல்ல ரகு தடியில் குற்றி உயர்த்திஞன். முதலாளி வைக்கோல் கட்டுக்களை அடுக்கினான். வேலை தொடர்ந்தது. மனித இயந்திரங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயங்கின. அந்த இயந்திரங்களின் உள் இருந்த இதயங்களே பல்வேறு இராகத்தில் பலமாகத் துடிந்தன. இருவேறு உலகில் ரங்கனும் ரகுவும் இருந்தனர்.

ரகு சந்திராவினை மனத்திரையில் இட்டு அழகு பார்த்த வண்ணம் செயற்பட்டான். அவனது மனமேடையில் அவள் நின்றாள், நடந்தாள், கண்சிமிட்டினாள், கைஅசைத்தாள், தலையாட்டினுள். முன்னர் எதிர்ப்புத் தெரிவித்த அவள் அண்ணன் வந்தான்.

"எனக்கு முதலில் பிடிக்கவில்லைத்தான். ஆயினும் வாழப் போறவள் சத்திராதானே! போயிட்டு வாங்கோ ரகு. எல்லாம் நல்லபடியாக முடியும்" என்று அவன் மீண்டும் வழியனுப்பினான்.

அவளது தாய் வந்தாள். முறுவலித்தாள். பால்தந்தாள். பண்போடு உணவளித்தாள். "தம்பி யோசிக்காதையுங்கோ சந்திரா பத்திரமாக இருப்பா. இஞ்சை ஆமிக்காரங் களின்ரை தொல்லையிலை இருந்து நீங்களாகுதல் கொஞ்சக்காலம் தப்பி இருங்கோ. இனிக் கொஞ்சம் எண்டாலும் உழைக்கத்தானே வேணும்" கருத்துக் கூறினாள் மீண்டும் அவள். சந்திரா கை கொடுத்தாள் கட்டிப் பிடித்தாள் ஒரு சிறிய இலட்டுப் பொதி கொடுத் தாள். ஆட்களுக்கு முன்னால் ஒரு தமிழ்ப்பெண் செய்யக் கூடிய எல்லாம் செய்தாள்.

அவள் முகத்தில் சிந்திய குங்குமம், நெற்றியின் இருமங்கும் அழகு செய்த கருங்குழல், கைவிரல் நகங்களில் பளிச்சிட்ட வண்ணக் குழம்பு, கூந்தலில் அழகு காட்டிய மல்லிகை ஆ மறக்கமுடியாத காட்சி. பிரிவு, கண்ணீர், நெடுமூச்சு, தெரு மூலையில் மறையும் வரை குனிந்தும் நிமிர்ந்தும் கை அசைத்த அவள் அழகுக்கோலம். கூட வந்து வீடுவரை வழியனுப்பிவைத்த அவளது தகப்பனார் இராமலிங்கம், அவரது நரைத்த மீசை, தடித்த குரல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீடுக்கான் நடை, வீட்டிலை வழியனுப்ப விழிநீர் சிந்திய தங்கை மீனா.

''கொமற் சொவட்'' (கெதியாக வாங்க). என்று விரைவு படுத்தினாள் வெள்ளைக்காரி.

சிந்தனை அறுந்தது.

''மச்சான் இனி நான் தூக்கித்தாறன். நீ மேலை ஏறு'' என்றான் ரங்கன். ராக்ரறின் முன் புறமாக ஏறி மேலே தாவினான் ரகு.

குளிர் காற்று மேல்லத் தழுவியது. அடுக்கடுக்காக அழகாக அடுக்கப்பட்டிருந்த வைக்கோல் கட்டுகள் வான் நோக்கிக் குவிந்தன. நெற்றியில் வியர்வை துளிர்த்தது. முதுகுப் புறத்தே கடித்தது.

என்ன நடந்ததோ ரங்கனுக்குப் புரியவில்லை. வைக் கோற் கட்டுகள் சாய ''அம்மா'' எனும் அலறலோடு ரகு விழ, கீழே இருந்த தடி அவன் வயிற்றினைத் துளைக்க, அவன் மேலே வைக்கோற் கட்டுகள் விழ, இரத்தப் போக் குடன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட அவன் அறிவு வராமலே மறுஉலகம் சென்ற கோரம் ரங்கனுக்கு விளங்கவே இல்லை.

ஆயினும் அவன் அன்று விளங்காத மற்றொரு நிகழ்வு ஏறத்தாழ அதே வேளையில் கடலில் இருந்து பீரங்கியால் தாக்கப்பட்டவீடு சந்திராவோடு வீட்டில் இருந்த அத்தனை பேரோடும் தகர்ந்து விழுந்ததும் அறிவு மயங்கிய நிலையில் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட சந்திரா அறிவு தெளியாத நிலையிலேயே மரணத்திரையில் மூழ்கி சேர்மன் நாட்டில் உயிர் துறந்த தன் தலைவனைச் சேர்ந்தது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு போராளி உருவாகுகின்றான்

அமிர்தகௌரி

பாரீஸ் விமான நிலையம் பரபரப்புடன் இயங்கிக் கொண்டிருந்தது. இன்னும் ஒரு மணித்தியாலயத்தில் இலங்கை செல்வதற்கான விமானம் புறப்படவிருந்தது. பயணிகள் அமர்ந்திருக்கும் இடத்தில், முகத்தில் எந்த வித பரபரப்புமின்றி, நிதானமாக இலட்சிய வெறியுடன் அமர்ந்திருந்தான் சேகர். எதையோ நெஞ்சின் ஆழத்தில் புதைத்துவைத்துக்கொண்டு அந்த உணர்வின் வேகத்தை வெளியே காட்டமுடியாமல், வெம்பித் தவித்துக் கொண்டிருந்தது அவன் இதயம். அந்த இதயத்தின் வெம்மையைத் "தணிக்க அவனுக்கு யாருமே துணையாக இல்லை. எனவே தன் கையொன்றை ஆதரவாக நெஞ்சில் வைத்து அழுத்தினான். அங்கே சட்டைப் பையில் அழுத்தியது அந்தக் கடிதம். ஆதரவு தேடிய அவன் இதயம் எரிமலையாகக் குமுறியது. எந்த உணர்வின் வேகத்தைக் கட்டுப் படுத்த முயன்றானோ அதே உணர்வு அவன் இதயம் முழுவதும் பரவி ஓலமிட்டுக்கொண்டிருந்தது. இதயத்தின வலி தாங்கமுடியாமல் தன் கண்களை இறுக மூடிக் கொண்டான் சேகர். நெஞ்சிலே துயரம் மண்டியது. மூடிய கண்களில் இருந்து கண்ணீர் வழிந்து கொண் டிருந்தது. விதி அவன் வாழ்க்கையில் எப்படியெல்லாமோ விளையாடி விட்டது. கடந்த மூன்று வருடங்களுக்கு முன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்த நிகழ்ச்சிகளைத் துயரத்தோடு திரும்பிப் பார்த்தான்.

அப்பொழுது சேகர் யாழ்பாணப் பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருந்தான். அன்று அவனுக்கு இரண்டாம் வருடப் பரீட்சை ஆரம்பமாகப் போகின்றது. அதிகாலை மூன்று மணிக்கே எழுந்து முக்கிய குறிப்புக்களைப் பார்த்துக் கொண்டிருந்தான் சேகர்.

"அண்ணா இந்தத் தேத்தண்ணீயைக் குடிச்சிட்டுப் படியுங்க" என்றவாறு மேசையில் தேனீர்க் கோப்பையை வைத்தாள் அவன் தங்கை செல்வி. படித்துக் கொண் டிருந்தவன் தங்கையை நிமிர்ந்து பார்த்தான். ஏழ்மை யிலும் செழுமை என்பார்களே, அதுபோல பதினேழு வயதில் அளவுக்கதிகமாகவே வளர்ந்திருந்தாள் செல்வி. இந்தக் காலத்தில் பெண்கள் எப்படி யெல்லாமோ முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள்! ஆனால் செல்வியோ தாயில்லாத அந்தக் குடும்பத்திற்குத் தாய்க்குத் தாயாக இருந்து, வயதுபோன காலத்தில் இன்னும் உழைத்துக் கொண்டிருக்கும் அப்பாவுக்கு ஆதரவாகவும், கஷ்டமான குடும்ப சூழ்நிலையில் சேகரைப் படிப்பிப்பதற்கு ஊக்குவிப்பதுமே அவள் நித்திய கடமைகள். "அண்ணா! அண்ணா!" என்று அவனைச் சுற்றிசுற்றி வருவாள். அப்படி அவள் கூப்பிடும்பொழுது அந்தப் பாசக் குரலை இன்னொரு தரம் கேட்க மாட்டோமா என்று தோன்றும்.

"என்னண்ணை பாக்கிறீங்க" என்று செல்வி கேட்ட போதுதான் சேகர் தன் நினைவைப் பெற்றான்.

"செல்வி இந்தச் சின்னவயதில் நீ எப்படியெல்லாம் கஷ்டப்படுகின்றாய்? இந்தக் குடும்பத்தில் தாயில்லாத குறையே எனக்குத் தெரியவில்லையே" என்றான்.

"என்னண்ணா நீங்க இப்படியெல்லாம் கதைக்கிறீங்க. எனக்கு அப்பாவையும் உங்களையும் விட்டா யார் இருக்

ம.—4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறாங்க. நான் உங்களைப் பார்க்காமல் வேறயாரப் பார்க்கப்போறன். சரி சரி, அதையெல்லாம் விட்டிட்டு இப்ப படியுங்க. இன்றைக்கு காலையில உங்களுக்கு எக்ஸாம் என்பது ஞாபகம் இருக்கட்டும். தேத்தண்ணி ஆறப்போகுது, குடியுங்க'' என்றவாறு அடுத்த அறைக்குள் சென்றுவிட்டாள்.

சேகர், செல்வி வைத்துவிட்டுப் போன தேத்தண்ணியைக் குடிப்பதற்கு வாயருகே கொண்டு போனான். அப்பொழுது வீடே அதிரும்படி வெடிகுண்டுச் சத்தம் ஒன்று அருகில் கேட்டது. இப்படிச் சத்தங்கள் கேட்பது புதிதான ஒன்றல்ல. அடிக்கடி இப்படிப்பட்ட பயங்கரச் சத்தங்கள் கேட்கும் பொழுதெல்லாம், தூங்கிக் கொண்டிருக்கும் சுதந்திர உணர்வு திடீரென எழுந்து ஆவேசம் கொள்ளும். அவை அடிமைத் தனத்திற்கும், அநீதிக்கும் அடிக்கப்படும் சுதந்திர கீதம் என அவன் எண்ணிக் கொள்வான்.

''அண்ணா, ஏதோ வெடிச் சத்தம் கேட்டதே எங்கேயென்று தெரியலையே! பயமாக இருக்கிறதண்ணா'' என்றாள் செல்வி.

''இவன் தியாகுவும் அவனுடைய இயக்கப் பொடியன்களும் சின்னவேலிச் சந்தியில் நின்று நேற்று இரவு ஏதோ கதைத்துக் கொண்டிருந்தான்கள். அவங்கள்தான் ''ட்றக்குக்கு'' வெடி வைச்சிருப்பான்கள்போலத் தெரியுது. நீ பயப்பிடாதே செல்வி'' என்றான். வெளிவிறாந்தையில் படுத்திருந்த அவர்களது தந்தை தர்மலிங்கமும் எழுந்து உட்கார்ந்து கொண்டார்.

''தம்பீ! உனக்கு இண்டைக்குச் சோதனை நடக்குமோ தெரியேல்லை. நல்லாப் பொழுதுவிடியட்டும், நான் சைக்கிளில் போய் பார்த்திட்டு வாறன். இவன்கள் ஆமிக்காரங்கள் பொடியன்களைக் கண்டால் விடமாட்டான்கள்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பெருமூச்சுடன் முடித்தார். தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்த துவக்குச் சத்தங்கள் எதுவும் இப்பொழுது கேட்கவில்லை. ஒருவித அமைதி எங்கும் நிலவியது அந்த அமைதி பின்னால் ஏதோ நடக்கப் போவதற்கு அறிகுறிபோல் காணப்பட்டது. சேகரால் தொடர்ந்து படிக்கமுடியவில்லை. விடியற்காலை ஏழு மணிக்கு சேகர் கம்பசுக்குப் போவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தான். அப்பொழுது வெளியே சென்றிருந்த தர்மலிங்கம் பரபரப்புடன் வீட்டிற்குள் ஓடிவந்தார்.

"தம்பீ சேகர், நீ இண்டைக்கு கம்பசுக்குப் போக வேண்டாம். அங்க தின்னவேலிக்குக்கிட்ட ட்றக் பிரட்டிப் போட்டான்களாம். பதிமூண்டு ஆமி செத்துப்போயிட்டான்கள். அதாலை வேறு ஆமிக்காரங்கள் வீடு வீடாகப் புகுந்து சுட்டுக் கொண்டு வாறான்கள்" என்று அவர் கூறி முடிக்கவும், துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் மிக அண்மையில் வரவும் சரியாக இருந்தது.

"இவள் செல்வி எங்கே? தம்பி செல்வியைக் கூட்டிக் கொண்டு பின் பக்கமாக பனைவளவுக்குள ஓடு, நான் முன் 'கேட்'டைப் பூட்டியிட்டு வாறன்" என்றவர் பூட்டை எடுத்துக்கொண்டு முன்பக்கமாகவிரைந்தார். "அப்பா நீங்களும் எங்களோட ஓடிவாருங்க" என்றவன் தந்தையின் கையைப் பிடித்து இழுத்தான்.

"தம்பி அங்க செல்வி தனியாகப் போறாள். நீ அவளோட;போ, நான் உடனே பூட்டியிட்டுவாறன், ஆமிக்காரன்கள் வீட்டுக்குள் புகுந்து விடுவான்கள்," என்று சேகரின் கையை தட்டிவிட்டு மீண்டும் முன் பக்கமாக விரைந்தார். சேகர் தங்கையைக் கூட்டிக் கொண்டு பின் வளவுக்குள் ஓடினான். துவக்குச் சத்தங்கள் கேட்டுக் கொண்டே இருந்தன. அவர்கள் வீட்டுக்கு அருகில் வெடிச் சத்தம் கேட்டதைத் தொடர்ந்து "ஐயோ அம்மா" என்று தர்மலிங்கத்தாரின் ஓலமும் கேட்டது. சேகர் ஆவேசத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடன் ஓடி வந்தான். அவன் பின்னால் செல்வியும் ஓடி வந்தாள். இருவரும் பார்த்தபொழுது, அங்கே தர்மலிங்கம் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தார். ''ஐயோ அப்பா'' என்றவாறு தந்தையின் உடலைத் தழுவிக் கதறினாள் செல்வி. தந்தையின் பரிதாபகரமான நிலையைப் பார்த்தபொழுது அவன் இதயம் வெடித்தது. தந்தையின் சாவிற்கு நியாயம் கேட்கவேண்டும் என்ற உணர்வு எழுந்த போது, அவன் தங்கை கதறி அழும் பரிதாபமான காட்சி அவன் இதயத்தை இரும்பாக்கியது.

மனிதன் எப்பொழுது தெளிவாகச் சிந்திக்கின்றானோ அப்பொழுது அவன் மனதின் குழப்பங்களுக்கு தீர்வும் கிடைக்கின்றது. சேகர் தங்கள் எதிர்காலத்தைப்பற்றிய நிலையில் கேள்விக் குறியாகவே நின்றான். ஏழ்மையில் வாழ்ந்த குடும்பம். எந்தவித சுகத்தையும் அனுபவிக்காத அவன் தங்கை தாய், தந்தையின் அரவணைப்பில்லாத தனிமரமாக நிற்கின்றாள். அவளை வாழ வைக்க வேண்டும். ஆம், இறுதியில் அந்த எண்ணம் மட்டுமே அவன் இதயம் முழுவதும் நிறைந்து நின்றது. படிப்பை மேலே தொடர முடியாமல், வெளிநாடு செல்ல தீர்மானித்த சேகர், தங்கையிடம் தன் எண்ணத்தைத் தெரிவித்தபோது,

''அண்ணா, எனக்காக உங்கள் படிப்பை பாதியில் நிறுத்த வேண்டுமா? நீங்கள் பட்டம் பெறுவதைக் காண, எவ்வளவு ஆசைப்பட்டேன் தெரியுமா? அதெல்லாம் நிராசையாகப் போக வேண்டுமா, அண்ணா'' என்றாள். கலங்கிய கண்களுடன் , தங்கையையின் தலையை பரிவுடன் தடவினான் சேகர்.

''என் தங்கையை வாழ வைக்க, இந்த உலகத்தோடு நான் வாழும் வாழ்க்கையும் ஒரு படிப்பு தானேயம்மா'' என்றவன் தன் தங்கைக்குத் தெரியாமலே கண்களில் வந்த நீரை மறைத்துக் கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேகர் பாரீஸுக்கு வந்து மூன்று வருடங்கள். எத்தனையோ போராட்டங்களுக்கு மத்தியில் அவன் தன் தங்கைக்கு நல்லதொரு வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்தான். இன்னும் இரண்டுமாதத்தில் தங்கை செல்விக்கு திருமணம். சேகர் ஆசையோடு தங்கைக்கு விதவிதமான பொருட்களை வாங்கிக் குவித்தான். இலங்கைக்குச் செல்லும் நாளை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த அப்பொழுதுதான் அவனுக்கு இலங்கையிலிருந்து ஒரு கடிதம் வந்தது. தங்கையின் கையெழுத்தைக் கண்டதும் ஆவலோடு பிரித்தான் சேகர்.

அன்பான என் அண்ணாவிற்கு!

உங்கள் அபலைத் தங்கை எழுறிக்கொள்வது. அண்ணா! எத்தனையோ ஆசைகள், கனவுகளுடன் ஓடிவரக் காத்திருப்பீர்கள். காத்திருந்த உங்கள் ஆசைகள், கனவுகள் எல்லாவற்றையும் என் ஒருத்திக்கே சொந்தமாக்கிவிடாதீர்கள். என்னைப் போன்ற எத்தனையோ ஈழத்தின் தங்கைகளுக்கு அவற்றைப் பகிர்ந்து கொடுங்கள். நீங்கள் எனக்காக ஒரு இலட்சியத்தை ஏற்படுத்திக் கொண்டீர்கள். ஆனால், நானே அந்த இலட்சிய வெளிச்சம் எங்கள் இனத்திற்கு பயன்பட வேண்டுகிறேன். நீங்கள் எனக்கு சீதனம் தேடவேண்டும் என்று வெளிநாடு சென்றீர்கள். சீதனம் தேடுவதற்குள் என் கற்பை சிங்கள இராணுவத்தினர் சீரழித்துவிட்டாரண்ணா. உங்களைப் போன்ற எத்தனையோ அண்ணாக்களின் சீதனங்கள் எல்லாம், என்னைப் போன்ற பாவத்திற்கு ஆளான பெண்களின் கல்லறைக்குப் பூக்களாகத்தான் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்தக் கடிதம் உங்கள் கைக்கு கிடைக்கும் பொழுது நான் ஈழமண்ணில் என்னை அர்ப்பணித்து விடுவேன். நீங்கள் சீதனம் தேடி வெளிநாடு செல்லாமல், விடுதலை தேடிப் போராளியாக மாறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருந்தால், என்னைப் போன்றவருக்கு இப்படியொரு நிலைமை வந்திருக்காது. எனினும் காலம்கடந்து விடவில்லை யண்ணா. ஒற்றுமையுடன் போராடினால் தான் அழிந்து கொண்டிருக்கும் எம்மினத்திற்கு விடிவு ஏற்படும். இருளில் மூழ்கிப் போயிருக்கும் இந்த இனத்திற்கு ஒற்றுமை வெளிச்சம் நிச்சயம் தேவை யண்ணா. அந்த ஒற்றுமைக்கும் என்னைப் போன்ற சகோதரிகளின் எண்ணங்கள் பாலமாக அமையட்டும். அந்த ஒற்றுமைப் பாலத்தில் வீறு நடை போட்டுக் கொண்டு நீங்கள் வரும் பொழுது, அந்த ஈழமண்ணி லிருந்து உங்களை வரவேற்பேன் அண்ணா!

அன்புடன் உங்கள் தங்கை
செல்வி

தங்கையின் கடிதத்தை வாசித்த சேகர் குலுங்கிக் குலுங்கி அழுதான். 'ஓ' இறைவா, என் அருமை செல்வம், என் கண்மணி, எங்கேயம்மா நீ சென்றாய். இறுதியில் உன் முகத்தைக் கூடப் பார்க்கமுடியாத பாவியாகிவிட்டே யம்மா' இதயத்தின் பாரம் தீரும் மட்டும் அழுதான் சேகர். 'ஒ... நான் அழுகின்றேன். இனி அழக்கூடாது. எனக் கென்று ஒரு புது இலட்சியத்தை உருவாக்கித் தந்திருக் கின்றாள் என் தங்கை. அந்த இலட்சிய வெளிச்சத்தை நான் அடைந்தே தீரவேண்டும்.'

பாரீஸ் விமான நிலையத்தில், விமானம் புறப்படப் போவதற்கு ஆயத்தமாக அறிவிப்புக்கள் கேட்டன. சேகர் தன் நினைவைப் பெற்றான். கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்தான். இதயத்தின் நெகிழ்வில் எங்கோ மறைந்திருந்த அந்த லட்சிய வெறி மீண்டும் எழுந்து உறுதியான எண்ணத்துடனும், இலட்சிய வேகத்துடனும் நடந்து சென்று விமானத்தில் ஏறினான் சேகர். புதிதாக உருவாகிய அந்தப் போராளியைச் சுமந்த பெருமையில் விமானம் உயரப் பறக்கத் தொடங்கிற்று. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்கை நோக்கிய கிழக்குப் பறவைகள்

மலர்

ம்!...ங்!...பெரும் இரைச்சலுடன் விமானம் க. நா. விமான நிலையத்தை விட்டுக் கிளம்பியது. "ஆண்டவனே! நீதான் துணை, ஏதோ என்னையும் எங்காவது கொண்டு போய் புது வாழ்வு தாவேன்."

புதுத் தென்புடன் விமான சீற்றில் பின்பக்கமாக சாய்ந்தாள் சுபா. "அந்தப் பக்கத்தில் மாமா என்னை நிச்சயம் கூட்டிப் போக வருவார். யூகோஸ்லவியாவாம் வீசா இல்லாமல் அங்கும் என்னென்ன காத்திருக்கோ?" பல நினைவுகள் அலைபோல் மிதந்தன அவள் நெஞ்சில்.

ஒரு கணம் கண்ணை மூடித்திறப்பதற்குள்...கொட்டும் பனியில் விமானம் மொஸ்கோவில். எல்லாம் வெள்ளை மயம். குளிர் ஒருபுறம்...Transit flight க்காக Su 151 ல் கேட்கும் எவருக்கும் "பெல்கிறேட்!" என்று விசாரித்தபடியே இன்னொரு விமானத்துள் நுழைந்தாள். விமானத்துள்..." எல்லாம் வெள்ளை முகம்...நம்மவர் ஒருவருமே இல்லையே! மாமா வருவாரா?...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று சனிக்கிழமை. காலை 11 மணிக்கெல்லாம் விமானம் பெல்கிறேட்டில் இறங்கியது. கண்ணாடிக் கூடுகளுக்கூடாக எட்டி எட்டிப் பார்த்தவள்... "மாமா...! இவர் எங்கே நிற்கிறாரோ?... பயம் ஒரு புறம் ஏமாற்றம் ஒருபுறம். "பரவாயில்லை! வருவது வரட்டும். பலரும் ஏறிய ஒரு நீல பஸ்ஸில் தானும் ஒருத்தியாக நகருக்குள் வந்தாள். தன்னுடன் பயணம் செய்த நாலைந்து வெள்ளையர்களுக்குப் பின்னால் தானும் ஒருத்தியெனக் காட்டிக்கொண்டு, கொட்டல் ஒன்றில் தஞ்சம் புகுந்தாள்.

"மாமாவிற்கு என்ன நடந்தது? ஒரு வேளை என் தந்தி கிடைக்கவில்யோ?" "நீ வந்தால் வருவேன் என்றவருக்கு வரும் நாள் தெரியாவிட்டால் என்னதான் செய்வார்? போன் பண்ணவும்...மாமாவின் ரூமுக்குத்தான் போன் நம்பரும் இல்லையே!"

மூன்று நாட்களாக ஒருவர் தொடர்புமின்றி கொட்ட லுக்குள்ளேயே தன்னை அடைத்தாள் சுபா!

நான்காம் நாள்...த. கந்தோர் தேடி றோட்டிற்கு இறங்கியவளுக்கு... "இவர்களைப் பார்த்தால் யாழ்ப் பாணத்தவர் போலல்லவோ...இவர்களிடம் ஏதாவது?...

"என்ன மிஸ்! இங்கு இந்த ... றோட்டில்?" ... இது இந்துவின் குரல்.

"றோமிற்குப் போகவென்று இங்கு வந்தேன்."

"றோமிற்கா?...இங்கிருந்தா...?"வியப்புடன் இணைந்த திகைப்புச் சிரிப்புடன் இந்து மீண்டும் தொடர்ந்தான். "மாமா ரத்தினம் இங்கு வந்து கூட்டிப் போவதாக சொன்னார். தந்தியும் அனுப்பினேன். வந்து மூன்று நாட்கள்...மாமாவிடமிருந்து ஒரு செய்தியும் இல்லைங்க"

"தனியாகவா வந்தீங்க...?"

"ஆமாம் தனியேதான்...! ரத்தின மெண்டு?... அவர் யாழ்ப்பாணம் கச்சேரியில் வேலை பார்க்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமலிங்கத்தின் தம்பி...அவரை உங்களுக்குத் தெரியுமா?...''

''ஓ! அட...அந்த சபாரத்தினமோ!...றோமில் டெனிஸ் கிளப்பில் வேலை செய்கிறவரோ?''

''ஆமாம் அவரை எப்படி உங்களுக்கு...? ''றோமில் அடிக்கடி அவரை நான் பார்த்திருக்கிறேன்.''

அப்போ நீங்க றோமிலிருந்து இங்கு ஏன் வந்தீங்க...''

இங்கு அலுவலாக வந்தோம். இருநாட்களில் திரும்பிப் போக இருக்கிறோம்.''

றோம் அப்படிக்கிட்டவா? என தனக்குள் கேட்டவளாய்... ''அப்ப...என்னங்க மாமா ரத்தினத்தை நீங்கள் சந்திக்க நேர்ந்தால்...

''மிஸ்! உங்களுக்கு இஸ்டமென்றால் உங்களை நாங்கள் கூட்டிப் போகிறோம்...நேரடியாகப் போக முடியாது...இடங்கள் மாறி ரெயின்கள் மாறிமாறி எடுத்துத் தான் போகவேணும்...வெளிநாடு என்று வந்தால் கஸ்டங்கள் அனுபவிக்க ரெடியாக இருக்கவேண்டும். இல்லையா?''

''அது சரி இங்கு எங்கே இருக்கிறீங்க...'' அதோ அந்த கொட்டலில்''...இதுதானுங்க ரூம் நம்பர் ''சரி இன்று பின்னேரம் உங்களை வந்து சந்திக்கிறோம்! ம்... சரியுங்க...ரொம்ப தாங்ஸ்'' ''இவர்கள் எப்படிப்பட்டவர்களோ?... யாரோ? எவரோ என்ன செய்து எங்கே கொண்டு போகிறார்களோ?...ஐயோ தெய்வமே! என்ன என் தலைவிதி...''

அன்று மாலை இவர்கள் அவளை சந்தித்தனர். இந்துவிற்கோ அவளை எப்படியாவது றோமிற்கு கொண்டு போய்ச் சேர்க்க வேணும்போல...அவள் மேல் இவனுக்கு ஏன் இவ்வளவு அனுதாபம்... அக்கறை?...ஒரு வேளை பெண் என்பதற்காக தன் இலக்கை சாதித்துவிடலாமோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னவோ தன் சிநேகிதன் ஒருவர் மூலம் றோமில் உள்ள ரத்தினத்திற்கு தான் சுபாவை பெல்கிறேட்டில் இருந்து கூட்டிவரவிருப்பதாக அதே இரவிலேயே போன் பண்ணினான்.

இரத்தினம் விழித்தார்! இவன் என்ன இப்படி அங்கே... ஒரு அறிவித்தலும் இல்லாமல் தனியே நின்று கொண்டு... கடவுளே அவளுக்கு ஒன்றும் நடந்துவிடக் கூடாது. ஏதோ வந்துசேர்ந்தால் போதும்...பாவம் தாய் தந்தையற்றவள். தனக்கு எதிர்காலம் தேடவே வெளி நாடு வெளிநாடு என்று ஆசைப்பட்டவள்...இங்கு வந்தும் எம்மவர் செய்யும் வேலைகளை விரும்புவாளோ?... என்னவோ?''

சுபாவைக் கூட்டிவருவதற்கான ஒழுங்குகளைச் செய்து விட்டு இந்து அவளைச் சந்திப்பதற்காக ஹொட்டலிற்குப் போனான். அந்த நாளில் அவன் தன்னை தனியே பார்க்க வந்தது பயமாகவும், மர்மமாகவும் இருந்தது.

''சுபா! உங்கள் அதிஸ்டமோ என்னவோ உங்களுக்கு றோமிற்குப் போக visa அதாவது Transit visa தந்திருக்கிறார்கள். சுவிஜ்சர்லன்ட் போகிறவழியில் இறங்கி றோமிற்கு திரும்ப றெயின் எடுக்கவேண்டும். ''இந்த இடங்களை எனக்கென்ன தெரியும்...உங்களைப் பார்த்தால் யூறோப் எல்லாம் தெரிந்தவர் மாதிரி இருக்கு!...ஏதோ உங்களைச் சந்தித்தது என் பாக்கியமே!''

''அது சரி இன்று பின்னேரமே புறப்பட றெயின் ரிக்கற் வாங்கிவிட்டேன்.''

''ஐயய்யோ! என்ன? என்னிடம் பணம் ஒண்டும் வாங்காமல்...''

''முதலில் றோமிற்குப் போகிற அலுவலைப் பார்ப்போமே! அப்புறம் அடுத்ததையெல்லாம் உங்க மாமாவுடன் பேசிக் கொள்ளுங்க...இப்பவே நீங்க என் கூட்ட வரணும். வழிப்பயணத்திற்கான சாமான்களை வாங்கிடலாம்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படி என்ன வாங்கணும். என்னிடம் எல்லாம் இருக்கே. றோமிற்குப் போன பின் வாங்கலாம்.''

''இல்லை சுபா! வழியில் கடுங்குளிராக இருக்கும். உமக்கு குளிர்போர்வை ஒன்று அவசியம் தேவை. இவைகள் இல்லாம வந்து நான் பட்ட கஸ்டம்...எனக்குத் தான் தெரியும். காசைப்பற்றி யோசிக்காதீங்க...எங்கே யாவது போய், நாலுபணம் சேர்த்து நம்மடை ஆட்கள் சந்தோசமாக இருந்தால் அது நம்ம மகிழ்ச்சியும்தானே இல்லையா?''

''சரி! எப்படியெண்டாலும் செய்யுங்க! நீங்கதான் கூட்டிப் போகிறவராச்சே''...இருவரும் புறப்பட்டனர். கடை ஒன்றில் நீண்ட போர்வை ஒன்று அவனால் அவளிற்கு தெரியப்பட்டது.

''ஏனுங்க! இவ்வளவு நீண்ட போர்வை! ''உங்களுக்கு ஒன்றும் விளங்காது சுபா. காலை மூடிப் போர்வை இருந்தால்தான் குளிரை ஒருவாறு சமாளிக்கலாம்.''

''ஏதோ நீங்கள்தான் எல்லாம் அனுபவிச்சராச்சே!''

தன் நம்பிக்கை முழுவதையும் அவனுக்கே அர்ப்பணித் தவளாக கொட்டல் திரும்பினாள் சுபா. இந்துவிற்கோ அவள் தன்னை முழுவதும் நம்பிவிட்டதில் ஒரு திருப்தி யும், மகிழ்ச்சியும்.

மாலை வந்தது. தன் சிறிய சூட்கேசுடன், சுபா இந்து வின் அறைக்குப் போனாள். இரவு 10 மணி தான் றெயின் புறப்படும் நேரம். அவன் கொடுத்த விலாசத் தின்படி எப்படியோ அவன் றூமை அவள் ஏழு மணிக் கெல்லாம் அடைந்து விட்டாள். அங்கே அவனுடன் அவள் முதல் நாளில் பார்த்த இருவரும் இன்னும் ஐந்து பேரும் இருந்தனர். அவளின் வருகையினால் அஞ்சிய வர்கள்போல ஏனோ அவர்கள் ஒவ்வொருவராக வெளியே நகர்ந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘‘சுபா உங்கள் Bagல் என்னுடைய சாமான்கள் இரண்டொன்று வைக்கலாமா?

தாராளமாக! உங்களுக்கு செய்யாத உதவி வேறு யாருக்கு?...

ரொம்ப தாங்ஸ்! இந்தாலும்! அவ்வளவு பாரமுமல்ல உங்களுக்கு பாரமாகவே இருக்காது’’

‘‘பரவாயில்லை!’’

அந்தப் பார்சல்களைப்பற்றிய இரண்டாவது நினைவுகள் எதுவுமின்றி ஏதோ தன்னுடையவை தொலைந்தாலும் அவை இரண்டும் பாதுகாக்கப்படவேண்டியவை என்ற ஆர்வத்தில் பெட்டியினுள் அடிப்பக்கத்திலேயே வைத்தாள்.

‘‘சுபா சொல்கிறேன் என்று குறை நனைக்கமாட்டீர்கள் இல்லையா? நீங்கள் ஏன் சாரியில் வரக்கூடாது.’’

‘‘சாரி ஏனுங்க? இரவுப்பயணம் கஸ்டமாக இருக்கும்.’’

‘‘இருந்தும் சாரிக்கு ஒரு தனி மதிப்புண்டு. சாரியைக் கண்டால் ரொம்ப மரியாதையாகப் பழகுவார்கள்.’’

அதுக்கென்ன உடுக்கிறேனே.

றெயிலுக்கு இன்னும் அரை மணித்தியாலங்கள் ‘‘சுபா நான் தந்த பார்சல்களைப்பற்றி உங்களிடம் கொஞ்சம் சொல்ல வேண்டும்.’’

‘‘ம்... சொல்லுங்க’’... ‘‘அவை இரண்டும்... சொல்லப் போனால் விலை மதிப்புக் கொண்டவை. சாதாரணமாக பெட்டிகளில் கொண்டு போகமாட்டோம். இலேசாகத் திருட்டுப் போகக் கூடியவை. அநேகமாக நான் அவைகளை என் காலில் வைத்து, பிளாஸ்ரர் பண்ணிக்கொண்டுதான் போவேன். ஏனென்றால் இந்தப் பொருட்களை வைத்திருப்பதற்கு அவ்வளவு அனுமதியில்லை. எனவேதான் காலில் வைப்பது பாதுகாப்பும் கூட. ஆண்களை இலேசாக சோதனை போட்டிடுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களை அவ்வளவு பரவாய் பண்ணுவதில்லை. உங்களுக்கு இஸ்டமென்றால், அதுவும் கஸ்டமில்லை யென்றால்...உங்க காலிலே வைத்து பிளாஸ்ரர் பண்ணி விடுகிறேன். இந்த உதவியை மட்டும் நீங்க செய்திட் டால்...! வேடன் வலையில் அகப்பட்டவள்போல சிறிது தயங்கினாள். இருந்தும் அவனுடன்தானே பயணம். அது என்ன பொருள், எப்படிப்பட்டவை என்பது எல்லாம் கேட்டறியப் பக்குவப்படாத அந்தப் பெண் நெஞ்சம், அதற்கும் ''ஆம்'' என்று தலையசைத்தது.

றெயில் பயணம் தொடர்ந்தது. முதலாவது உறங்கல் பெட்டியில் அவர்கள் ஆசனம்...யாரோ?...எப்படிப் பட்டவரோ?...எங்கே கொண்டு போவாரோ?...எப்படி முடியுமோ?...இவையெல்லாம் அவளுக்கு விடியவிடிய எழுந்த விசாலமான கேள்விகள். எழுந்த நினைவுகளை ஓடுகின்ற வண்டியில் ஒழித்து வைத்தவளாய் மறுபுறம் புரண்டபோது...விடியற்காலை 4-05 மணியிருக்கும். கால்கள் இலேசாக வலிக்கத் தொடங்கின. பிளாஸ்ர ரல்லவா?...அத்துடன் அந்த பார்சல்கள்...அவனிடம் எப்படிச் சொல்வது...? அதுவும் கழற்றி விடும்படி—!? ஏதாவது விளங்காத் தன்மையில் அவளை அந்த இடத்தி லேயே விட்டுவிட்டுப் போய் விட்டால்...?

''தெய்வமே! எனக்கு ஏன் இந்த சோதனை? எல்லாம் என் மாமாவால்...அவரை நொந்து என்ன! என் தலைவிதி ...றோம் போய்ச் சேரும் வரை எதையும் தாங்குவேன்.''

பெண்ணினம் பாதுகாக்கப்பட ஆணினம்தான் ஆண்டவனுக்குத் தேவைப்பட்டதோ?...இது அவளின் கலங்கிய நினைவுகள்...

Transitக்கு ஏதோ ஒரு ஸ்டேசனில் இறங்கியபோது...

''கால்கள் ரொம்ப வலிக்குதுங்க...கழற்றிவிட முடியுமா?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன சுபா! இந்த நடுத்தெருவில் நின்று கொண்டு...எப்படி கழற்றுவது...?ஏற்கனவே சொன்னேனே அதையாரும் பார்க்கக் கூடாது என்று."

"அப்போ என்னங்க செய்ய. காலைத் தூக்கி அடியெடுத்து வைக்கவும் முடியாமல் இருக்கே...சுபா தயங்கினாள்..."ஹொட்டல் ஒன்றிற்குப் போய்த்தான் கழற்ற வேண்டும்,விரும்பினால் வாங்க...விருப்பமா?...என்ன?..."

இந்துவின் கேள்விகள் அர்த்தமுள்ள சந்தேகங்களை அவள் மனதில் அள்ளிப் போட்டன. எங்கு போயாவது காலின் பாரத்தைத் தீர்த்தால் போதும்தானே என்று மனதுக்குள் நினைத்தாள்.

"அதோ அந்த ஹொட்டலிற்கு...வாங்க போகலாம்" என்றவாறு இந்து நடந்தான். அவளும் அவனைத் தொடர்ந்தாள். அவள் அதிஸ்டமோ என்னவோ இரண்டரை மணித்தியாலங்களுக்கு மட்டும் அங்கே ஒரு அறை காலியாக இருந்தது. அந்த சொற்ப நேரத்திற்காக அவன் அந்த ஹொட்டல் முதலாளிக்கு அள்ளிக்கொடுத்த பணம்தான் எவ்வளவோ? "சுபாஎங்கே காலை பார்ப்போம்."

அவளின் மென்மையானகால்கள் பிளாஸ்ரரின் தாக்கத்தால் நன்கு சிவந்து வீக்கமடைந்திருந்தன. மெதுவாகத் தொட்டு எப்படி யெல்லாமோ ஒட்டியிருந்த பிளாஸ்ரரை ஒவ்வொன்றாக அவிழ்த்தான் இந்து.

"அப்பாடா! பெரிய ஒரு பாரம் உடலை விட்டு நீங்கினாற் போல"...சுபா தொடங்கினாள்.

"பாவம்! சுபா, நீங்க நல்லாக் களைத்துப் போய் விட்டீங்க. நீங்க விரும்பினால் இந்தக் கட்டிலிலேயே கொஞ்ச நேரம் தூக்கம் போடலாம். அடுத்த றெயினுக்கு தாராளமாக நேரமிருக்கு..."

இனியும் என்ன தூக்கம்...ஒரேயடியாக றோமிற்குப் போய் தூக்கம் போட வேண்டியதுதானே! என்றாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்சம் தூங்குவோம்... "ப்ளீஸ்...இப்படி வாங்க..." வாரியெடுத்தபடியே கட்டிலில் போட முயன்றான் இந்து.

"ஐயோ இல்லை...என்னை விட்டிடுங்க...உங்களை நம்பித்தான் வழிப்பயணம் துணிந்தேன்...எனக்கு ஒன்றும் நடக்காம பாதுகாப்பது உங்க......"

"பொறுப்பு இல்லையா சுபா?"

அணைத்த கைகளை அப்படியே நழுவவிட்டவனாய்— "சுபா...நீங்க என்னைப் புரிந்து கொண்டீங்க என்று நினைத்தேன்... பரவாயில்லை... ஆனா... நடந்ததை மறந்திடுங்க..."

சுபாவின் கண்களில் இலேசாக விழுந்த துளிகளை இந்து கவனித்தான். வேலி பயிரை மேய்ந்தாற்போல தன் கதை ஆகிவிடக் கூடாதென அவள் செய்த பிரார்த்தனைகள்.

"சுபா நடந்தது ஒண்ணும் உங்க மாமாவிடம் சொல்லிடாதேயுங்க...ஏதோ நம்ம சந்திப்பு இப்படியாய்ப் போய்ச்சு."

அவளுடன் ஒரு கணம் கூட நிற்பது பெரிய பாடு போல...இனி எப்படித் தப்பிப்பது...

"வாங்க ஸ்ரேசனிலேயே போய் உட்காருவோம்."

அவள் அவசரப்பட்டாள். அவனுக்கு இப்போ அவளைப்பற்றியும் அவள் பயந்துவிட்டாள் என்பதும் புரிந்தது.

ஸ்ரேசனை நோக்கி நடந்தான். அவளும் தொடர்ந்தாள்.

தனியே உட்கார்ந்த அவளுக்கு அத்தனை கூட்டம் மத்தியிலும் உலகமே இருண்டு வந்தது. நெஞ்சை இறுக்கிய நினைவுச் சுமைகள்!

இவன் யார்? என இவள் மனதில் ஏக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் யார் என அவன் மனதில் கேள்வி றெயிலும் வர பயணமோ ஊமைப் பயணமாக தொடர்ந்தது. மனித வாழ்விலும் எத்தனை சந்திப்புகள்...

றோமும் வந்தது...றெயிலும் நின்றது.

மாமா காத்திருந்தார்...''வாம்மா வா! ஏதோ வெளிநாடு வெளிநாடு என்று வந்து சேர்ந்திட்டாய்! கெட்டிக்காரி...''

'இந்து ரொம்ப தாங்ஸ்...கெட்டிக்காரர் நீங்க, உங்களைப்போல வீரர்தான் வெளிநாட்டிற்கு வரணும் வாங்க...முதலில் கோபி குடிப்போம்.'

(Barக்குள்) இந்து! இந்தாங்க! சுபாவின் வழிப் பயணத்திற்கான செலவுப் பணம் ரொம்ப செய்திருக் கிறீங்க. அவளுக்கு இனி நல்ல காலம்...உங்க பலனாக வந்ததே'' அவள் அவனை ஒருமுறை பார்த்தாள்.

''ஐயோ இதெல்லாம் என்ன ரத்தினம்? நம்ம சனத்திற்கு செய்யாம வேறு யாருக்கு? இதெல்லாம் பெரிய உதவியா ரத்தினம்? இன்னும் எத்தனை செய்ய காத்திருக் கிறோம். நல்லாக இருந்தால் சரி''...

''எப்படியிருந்தாலும், நீங்க இதை வைத்துக் கொள்ளுங்க.'' இது ரத்தினத்தின் கெஞ்சுதல்.

''சரி உங்க ஆசைப்படியே வைத்திருக்கிறேனே!''

வாங்கினான் இந்து...அப்போ பிறகு சந்திப்போம். மீண்டும் நிமிர்ந்து பார்க்க அச்சம் கொண்டவளாய் தாங்க் யூ...இந்து...என்றவளுக்கு கண்கள் கலங்கி வந்தன... இந்த இரு கோடுகள் ஒருநாள் சந்திக்குமா?...

''அம்மா சுபா! வா போகலாம். உனக்கு வேலை ஒன்று பார்த்திருக்கிறேன். வீட்டு வேலைதான். சிறிய குடும்பம். ஒரு பிள்ளை...இலேசாக இருக்கும். வந்த களைப்பு தீர இரண்டொரு நாட்களுக்கு என்னோடயே இரு...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்காம் நாளில் நீங்காத நினைவுகளுடன் சுபா வேலைக்காக அந்தப் புதிய வீட்டில் நுழைந்தாள். அவ் வீட்டில் அவளுக்கு இருந்த முதல்நாள் வரவேற்பில் நடந்த தெல்லாம் மறந்தவளாக துயில் கொண்டு எழும்பியவளுக்கு ...மாமா ரத்தினத்தின் குரல் போனில்.

''சுபா! உன்னை றோமிற்கு கூட்டிவந்த இந்துவை இங்கு பொலிசார் பிடித்து விட்டார்கள் ட்றக்ஸ்சுடன்.''

''அதென்ன மாமா ட்றக்ஸ்?...''

''உனக்கு ஒன்றும் தெரியாது! சொன்னாலும் விளங்காது...நீ வெளியில் வரும்போது ஆறுதலாக சொல் கிறேன். பாவம் அவருக்கு 7 வருட சிறைத் தண்டனை.''

அடுத்த நாள் வியாழன்...அரை நாள் ஓய்வு. ரத்தினம் சுபாவிடம், ''சுபா! உனக்குத்தெரியாது. அவன் உன்னுடன் வரும்போதே அதைக் கொண்டு வந்திருக்கிறான். அது ஒரு போதை மருந்து...உனக்கு ஒன்றும் தெரியவில்லை. நீ தெய்வாதீனமாகத் தப்பிவிட்டாய். நீ பாவம்...இந்த போதை மருந்து வியாபாரத்தைக் கொண்டுதான் நம்மில் பலர் இங்கு இலேசாக கொள்ளை கொள்ளையாய் பணம் சேர்க்கின்றனர். ருசி கண்ட பூனை அடுப்பங்கரை விட்டு இறங்காதது போல் இந்த வியாபாரத்தில் ருசி கண்டவர் கள் எத்தனை பேர். இதன் விளைவுகளை அறிந்து கூட பலர் விட்டபாடில்லை. ஏதோ பணத்திற்கு மேல் பணம் சேர்க்க வேண்டுமென்ற கொள்ளை ஆசை. சுபா! நீ இங்குதானே இருக்கப் போகிறாய். உனக்கு எல்லாம் தெரிய வரும். சுபா! உன்னிடம் ஒன்று கேட்கிறேன். இந்து உன்னிடம் ஏதாவது வைத்துக்கொண்டு வரும்படி தந்தானா உண்மையைச் சொல்லிடு.''

''சத்தியமாக மாமா! எனக்கு ஒன்றுமே தெரியாது. என்னை நல்லபடியாகத்தான் கொண்டு வந்து சேர்த்தார்'' முடித்தாள் சுபா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கும் எந்த இடத்திலும் நடந்ததை மறைத்து நாலு பேரை நல்லவராக மதித்துக் காப்பதுதான் பெண்மையில் நிறைந்த தாய்மையின் பெருமையோ? என்னவோ? எல்லாவற்றையும் ஒரு கணத்தில் அப்படியே விழுங்கி விட்டாள் சுபா! இந்து தனக்கு தரவிருந்த தண்டனையை ஆண்டவன் அவனுக்கே கொடுத்துவிட்டான் என்பது சூடான அவளின் பெருமூச்சு.

மூன்று மணித்தியால விசாவுடன் றோமிற்கு வந்த சுபாவிற்கு இன்று இத்தாலியில் வாழ்க்கை மூன்றரை வருடங்களாகின்றன. இந்த ஆண்டுகள் தந்த அனுபவத்தில் அவளுக்கு நடந்தவை, அவள் காதால் கேட்டவை, கண்ணால் பார்ப்பவை எல்லாம் இந்தப் போதை மருந்தின் தொடர் கதைகளே. தனக்கு நடந்தவை களைப் பற்றி எண்ணும்போது இந்து தனக்கு ஏன் நீண்ட போர்வை, அதுவும் தன் செலவில் வாங்கினான். கூட்டி வரும் பொறுப்பை ஏன் தானாக ஏற்றான்? முன்வந்தான்? என்பதெல்லாம் இப்போ அவளுக்கு இலேசாக விளங்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுபவம் ஓர் ஆக்கம்

**மாலன்**

"அண்ணா, அம்மா சாப்பிட வரட்டாம்"

"எனக்கு வேண்டாமென்று எத்தனை தரம் சொல்வது? சும்மா வீணாய் அடிவாங்காமல் எங்கேயாவது போயிடு."

"அம்மாவுமல்லே சாப்பிடாமல் இருக்கின்றா." கெஞ்சினான் தம்பி ரஞ்சன்.

"தம்பி குமார்! வா மகனே! எத்தனை நாளைக்கு இப்பிடிச் சாப்பிடாமல் இருக்கப் போகிறாய்—"

அது அம்மாவின் குரல்.

"ம். சாப்பாடு ஒண்டுதான் நமக்கொரு குறைச்சல்!" இது குமாரின் மனப் போராட்டம் நிறைந்த பதில்!

குமார் சாப்பிடாமல்விட்டு இன்றோடு மூன்று நாளாகி விட்டது. சின்ன வயதிலேயேயிருந்து அதிகம் செல்லம் இல்லையென்றாலும் இரு வேளையும் சோற்றுக்கு குறை வில்லாமல் வளர்த்து வந்தாள் தன் மூன்று ஆண் செல்வங்களையும் செபமாலையம்மா, கடையவன் பாலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று வயதை எட்டிப் பிடித்துக் கொண்டிருக்கும்போதே தந்தை அந்தோணிப் பிள்ளை கண்ணை மூடிவிட்டார். அந்நாட்களில் அச்சிறிய கிராமத்தில் ஏ. எல் வரையும் படித்து முடித்தவர்களையே விரல்விட்டு எண்ணிவிடலாம். ஆனால் செபமாலையம்மா வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி மூத்தவன் குமாரை ஏ.எல் வரையுமே படிக்க வைத்தாள். தம்பிமார் இருவரும் அண்ணன் காட்டிய வழியிலே சென்று கொண்டிருந்தார்கள்.

மன்னார் மாவட்டத்திலுள்ள ஒரு சிறிய கிராமத்தில் 1960-ம் ஆண்டு பிறந்தவன் குமார். ஒரு பேரினம் சிறிய இனத்தைத் திட்டமிட்டு அழித்தொழிக்கும் கொடுமையை பிஞ்சு வயதிலிருந்தே அன்றாடம் பார்த்துக் கேட்டு வளர்ந்து வந்தான் குமார்.

இப்போது 25 வயதை எட்டிப் பிடித்துக்கொண்டிருந்த குமார் அடிமை விலங்குகளை உடைத்தெறியத் துடித்துக் கொண்டிருந்தான்.

ஆனால் செபமாலையம்மாவோ தன்னையே பிழிந்தெடுத்து கல்வியூட்டி பிள்ளைகளை வளர்த்து எடுத்தவளாயிற்றே. தன் துன்ப வாழ்வின் பலனையெல்லாம் இப்போது குமாரின் வளமான எதிர்காலத்திலே காணக் காத்திருந்தாள். அவன் நல்ல ஒரு வேலையெடுத்து முதுமையில் தன்னையும் பார்ப்பானென்று எதிர்பார்த்தது அந்தத் தாயுள்ளம். ஆனால் குமாரின் மனமோ தாயின் எதிர்பார்ப்புக்களிலிருந்து மாறுபட்டுக் கொண்டே வந்தது. அடக்கி ஆளும் ஓரின வெறி பிடித்த அரசின் அடிமைத் தளைகளை உடைத்தெறியும் கோபாவேசத்தில் குமுறிக் கொண்டிருந்த அவன் உள்ளம் இப்போது எல்லாவற்றிற்கும் ஒரு முடிவு கட்டத் தீர்மானித்து விட்டான். ஒரு விடுதலைப் போராளியாக பயிற்சி பெற முடிவு செய்து விட்டான். அதே வேளை தன் தாயின் தியாகங்களை அவன் அறியாதவனல்ல. தந்தையாகவும் தாயாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை வளர்த்துக் காத்த அந்த அன்னையின் சொல் அவனுக்குத் தாரக மந்திரம். அதனாலேயே அன்றும் தன் முடிவைக் கூறி தாயின் விடைக்காக காத்திருந்தான். அந்தத் தாயால் எப்படி அவனை இழக்க முடியும்? இவ்வுலகில் அவள் வாழ்வில் சேகரித்த பெரும் சொத்து அந்த மூத்தவன் குமார்தானே!

மூன்று நாளாக அம்மாவும் சாப்பிடவில்லையே என்பதை எண்ணும்போது குமாரின் மனமும் கேட்கவில்லை. பிள்ளை மனம் கல் என்று யார் சொன்னது? தாயும் மகனும் எதுவுமே பேசிக்கொள்ளவில்லை. இருவர் கண்களிலும் நீர்த் திரைகள். சாப்பிட்டுக் கை கழுவினார்கள்.

''தம்பி! நிக்கிலாஸ் அண்ணன்!வந்துவிட்டுப் போறார். நாளைக்குத் தன்ர வயலிலே களைபிடுங்க வேணுமாம். உன்னை வரச் சொன்னாரடா தம்பி'' என்றாள் செபமாலையம்மா.

''ம்......சரி.''

''சாப்பாடு கட்டி வைக்கிறன். எடுத்துக் கொண்டு போ. எங்கட வயலிலே நாளையோட வேலை முடியுது. நாளைண்டைக்கு நானும் வாரனெண்டு நீக்கிலஸ் அண்ணனிட்டச் சொல்லு.''

''ம்...சரிம்மா...''

பலரோடு சேர்ந்து களைபிடுங்கும்போது உடற் களையும் அவ்வளவு தோற்றுவதில்லை. அத்தோடு குமாரோடு ஒட்டிய சில இளஞ்சிட்டுகளும்கூட. கலகலப்பாகவே போனது நாள். சூரியனும் ஓய்வெடுக்க அடிவான் சென்று கொண்டிருந்தான், களை பிடுங்குபவர்களுக்கும் ஓய்வு அண்மித்துக் கொண்டிருந்தது.

திடீரென மூன்று பெரிய ''ரக்'' வண்டிகள் விரைந்து வந்து கொண்டிருந்தன. அது வீதியை ஒட்டிய வயல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று வண்டிகளும் வயல் அருகே வந்து நின்றன. திடீரென நூற்றுக்கணக்கான காக்கிச் சட்டைக்காரர்கள், சுழல் துப்பாக்கிகள் சகிதம் கீழே குதித்தார்கள். 'டுமீல், டுமீல்...' எங்கும் வெடிச் சத்தம். ஓரிரு நிமிடங்களில் நாற்பது அப்பாவித் தமிழ் உயிர்கள் திறந்த வயல்வெளியில் சிங்கள ராணுவ வெறியர்களின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாகிக் கீழே சாய்ந்தன. அடிமை விலங்கை உடைத் தெறியத் துடித்தான் குமார். ஆனால், அதே அடிமைத் தனத்தின் குண்டுகளால் சின்னாபின்னமாக்கப் பட்டு அவனுடைய இளரத்தம் இப்போது அவ் வாய்க்கால் நீரை செந்நிறமாக்கிக் கொண்டிருந்தது.

மறுநாள் அக்கிராமமே அழுது வடிந்தது. குமார் மட்டுமா? அப்பாவிப் பெண்கள், முதியோர், சிறுவர் இப்படி நாற்பது உயிர்கள் புத்த பெருமானின் உத்தம புத்திரர்களினால் நரவேட்டையாடப்பட்டுக் கிடந்தனர். அத்தோடு மற்றும் ஒரு பரபரப்பு! அக் கிராமத்தில் பல குடும்பங்களிலிருந்த 18 வயதுக்கு மேற்பட்ட இளைஞர்கள் சிலரை இரவோடு இரவாகக் காணவில்லை.

பலர் வாயிலும் இப் பேச்சு அடிபட்டது. ஆனால் செபமாலையம்மா மட்டும் எதுவுமே பேசவில்லை. மதுரையை எரித்த கண்ணகிபோல் தன் மடியில் கிடந்த குண்டு துளைக்கப்பட்ட குமாரின் உடலையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

முன்பு குமாரை அனுப்பத் தயங்கியவள் இப்போது மீதி இருக்கும் தன் இரு செல்வங்களான ரஞ்சனையும், பாலாவையும் இரவோடிரவாகவே விடுதலைப் போர்ப் பயிற்சிக்கு அனுப்பி வைத்துவிட்ட துணிவு மட்டும் அவள் மனதில் அமைதியைக் கொடுத்துக்கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூண்டல்ல; கூடு!

அ. திருச்செல்வம்

எங்கும் ஒரே பரபரப்பு.

"இனித்தான் ஆபத்து. கவனமாய்ப் போகாட்டில் மாட்டுப்படுவோம்"

ஓர் இளைஞன் தன் சகபாடிகளைப் பார்த்துக் கூறினான்.

"என்னை முழுக்க உரியச் சொல்லிப் போட்டான். உங்களைச் சும்மா கடன் கழிக்கப் பாத்ததுபோல கிடந்தது. பாரடா, உந்த வெள்ளையன்களை உப்பிடியே சோதிக்கிறாங்க." இது அந்தக் கும்பலில் மற்றொருவன்.


"நீ திருட்டு விழி விழிச்சால் வேறை என்ன அவங்க செய்வாங்க?" இது மற்றைய ஒருவன்.

"என்ன செய்ய! கறுப்பன் எண்டால் இப்பிடித்தான் மச்சான். எங்கடை ஆக்கள் செய்யிறதும் உப்பிடித் தானே" என்று சொல்லிப் போனான் மற்றொருவன்.

அவனைத் தடுக்க மற்றொரு குரல் :

"களவு முழுக்கச் செய்யிறது—போதைப் பொருட்கள் கடத்துறது எல்லாம் வெள்ளையன்கள்தான். எண்டாலும் வெள்ளையன் நாடு. நம்மளைப்பற்றிக் கவனமாய் இராட்டில்-இருக்க இடங் கொடுத்தாற் கூரையைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடுங்குகிற ஆக்களல்ல நாங்க'' என்றது. அதற்குரியவன் நாடு அடிபட்டவன் போலிருந்தான்.

''இதுவரை சரி! இனி அடுத்தது என்ன? இப்ப உங்கடை இரண்டு பேற்றை ஆக்களிலை ஆர் வந்தாலும் நாங்கள் போயிடலாம். இருபத்திநாலு மணித்தியாலம் இங்கை இருக்கலாம். ஆனால் கவனமாய்ப் பாருங்கோ. வெள்ளைக்கும்பலுக்கை கறுப்பர் வந்தால் தூரத்திலேயே தெரியும்'' என்றது விடயம் அறிந்த மற்றொரு குரல்.

கிழிந்த, நைந்துபோன பயணப் பெட்டிகள்-கசங்கிய ஆடைகள்-பல்வேறு கோலங்களைக் காட்டிய தலைகள்-பயண அலுப்பால் வடிந்த நிலையில் தெரிந்த முகங்கள்-எனினும் இன்னமும் ஓய்ந்துவிடாத வாய்கள்.

இவற்றை எல்லாம் கவனித்தும் கவனியாதவள்போல நின்றிருந்தாள் கமலி. அருகே நின்ற பெண் தன் கடிகாரத்தையும் பார்த்து விமான நிலையக் கடிகாரத்தையும் பார்த்தாள்.

''நேரம் வித்தியாசமாகத்தான் காட்டும். மணிக் கூட்டிலை பிழை இல்லையுங்கோ'' என்றாள் கமலி.

''ஓ...ஓ அதுதானே! நான் அதை மறந்து போனன்'' என்றாள் மற்றவள். அவள் தன் கணவன் வந்து கூட்டிச் செல்வான் என்று எதிர்பார்த்து வந்தவள். கமலி எதிர் பார்க்கும் அவளது அண்ணன் வராவிடில் தானே தன் கணவனுடன் அவளை அழைத்துச் சென்று எப்படியும் அவள் அண்ணனுடன் சேர்த்துவிடுவதாக நம்பிக்கை கூறி கொழும்பில் இருந்து அந்தக் கிழக்கு ஜேர்மன் விமான நிலையம் வரை கமலிக்குத் துணையாக வந்தவள், திருமண மான கையுடன் நாட்டு நிலைமை கருதிக் கணவன் ஆறு மாதத்துக்கு முன்னர் வந்துவிடவே அவனுடன் சேர்ந்து வாழ்வுப் பயணத்தைத் தொடர என வந்தவள் அவள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சு குறைவாக எனினும் கலகலப்பாக வந்த அவளை மீண்டும் பார்த்த கமலி, ''என்னங்கோ! அண்ணனையும் காணயில்லை. உங்கடையவரையும் காணயில்லை. அவருக்கு நல்லாய்த் தெரியுமேயுங்கோ...நீங்க இந்த பிளைற்றிலைதான் வாறீங்க எண்டு''

''நீர் கவலைப்படாதையும். அவர் எப்படியும் வந்திடுவார்'' என்றாள் அவள்.

''டோ...டோ...டோ...'' என்றது ஒரு குரல்.

''த்...த்...த்...ச்...ச்...ச்... அங்கை பாராதையுங்கடா. இது இந்த நாட்டிலை சர்வ சாதாரணம்'' என்றது இன்னொருகுரல்.

இத்தனை கவனத்துக்கும் இலக்கான வெள்ளைக்காரச் சோடி ஒன்று தன்னை மறந்த நிலையில் முத்த வெள்ளத்தில் மூழ்கி இருந்தது.

''சும்மாய் இரடா!'' என்ற இளைஞன் யாரையோ அதட்டினான்.

''ஆ அங்கை வாறார் எங்கடை அவர். எப்படி நான் சொன்னன் பார்த்தீரா?'' என்றாள் அப்பெண். அவளுக்குப் பயணம் முடிந்து விட்டதே போன்ற நினைவு. அங்கும் இங்கும் கூர்ந்து கவனித்தாள்.

''ஓ...ஹலோ! எப்படிப் பயணம் எல்லாம் நல்லாக இருந்ததா?'' என்றபடி அவர்களை அடைந்த அப் பெண்ணின் தலைவன், பயணப் பொதியைக் கையில் எடுத்தவாறே...''ஆமாம் யார் இவங்க? இவங்களைத் தேடி யாரும் வரவில்லையோ?'' என்று வினவினான்.

''பாவம் பாருங்கோ! என்ரை பிரையாண பிறண்ட் கமலி. இவங்கடை அண்ணனை இன்னும் காணயில்லை'' என்றாள் அவள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்படியா? அப்ப இவரை எப்படித் தனிய விட்டுட்டுப் போறது?" என்ற அவன் அவர்களது எண்ணப் படி அவளையும் அழைத்துச் செல்வது என்றும் போனபின் தேடுவது என்றும் முடிவு எடுத்தான்.

பயணத்தின் அடுத்த கட்டம் ஆரம்பமாகியது. பத்து நிமிட நடை. அதனைத் தொடர்ந்து அரைமணி நேரப் புகையிரதப் பயணம்.

"அடுத்த ஸ்ரேசனிலை இறங்குவம். பொலிசுக்காரரைப் பாராதையுங்கோ. விறுவிறண்டு வரவேணும். ஒரு பதினைஞ்சு நிமிசப் பிரச்சனை. இறங்கி மற்ற றெயினிலை ஏறிவிட்டால் பக்கத்திலே எங்கையாகுதல் இறங்கி ராக்சியிலை போகலாம். பிறகு ஒரு பயமுமில்லை" இப்படிச் சொல்லியபடி முன்னால் விரைவாக ஏறிச் சென்ற அந்த ஆண்மகனைத் தொடர்ந்து அப்பெண்ணும், அவள் பின்னாற் கமலியும் சென்றனர்.

சற்றுத் தொலைவில் பூனைபோல் அடி எடுத்து அந்த இளைஞர் கும்பலும் அவர்களைத் தொடர்ந்ததைக் கமலி கவனித்தாள்.

அவளுக்கு மட்டுமல்ல. அதில் அன்றுபோன பலருக்கும் அது புதுமையான அனுபவம்தான். ஆனால் பொதுவாக எல்லோரும் மனக்கலக்கத்துடன் வர, கமலியோ தன் கவலைகள் பொறுப்புகளை எல்லாம் தற்காலிகமாக அப் பெண்ணுக்கும் அவள் கணவனுக்கும் விட்டுவிட்டு சற்றுத் தொல்லையற்றவள் போலக் காணப்பட்டாள்.

பயண அலுப்பால் சற்றுக் களைத்துவிட்ட அவளது தலையில் இருந்த மயிர்களில் ஒரு சில அவளது முகத்தின் மேல் மட்டத்தில் விழுந்து அவளது அழகிய முகத்தின் அழகுக்கு அழகு செய்தன. கட்டுமீறிய அவளது கருவிழி சுற்றுமுற்றும் துருவிப் பார்க்க புகையிரதப் படிகளை இயந்திரகதியில் கால்கள் கடந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடீரென—

கண்கள் எங்கோ நிலைத்தன. சக்திவாய்ந்த மற்றிரு கண்களுடன் அவை சந்தித்தன...கலந்தன பேசின, கால்கள் பின்னின. நடக்க மறுத்தன. எண்ணம் வளர்ந்தது. மூச்சு விரைவுபட்டது. உடல் சிலிர்த்தது. ஆயினும் இழபட்ட வண்ணம் அவளது பயணம் அடுத்த புகையிரதம் வரை வளர்ந்தது. அந்தக் கண்களுக்குரிய உருவமும் அதோ வண்டியில் இருக்கையின் எதிரே அமர்ந்தது.

வண்டி கடுகதியில் பயணத்தைத் தொடர்ந்தது.

கமலி கண்களை இமைக்கவே விரும்பவில்லை. காரணம் அந்தக் கணப்பொழுதில் அந்த உருவம் மறைந்து விடுமோ என்ற அச்சம்.

புதிய சூழலின் ஊடே விரையும் ரெயில் வண்டியோ, கண்ணைக் கவரும் எழிற் காட்சிகளோ கமலியைத் தொடவேயில்லை. அவளைத் தொட்டது தொடர்ந்தது உதிர்ந்துவிட்ட அவளது இறந்தகாலத்தின் ஒரு சில மறக்க முடியாத நினைவுக் காட்சிகள்.

அந்தச் சிவன் கோவிலின் பாரிய தூண்கள். அவற்றின் பின்னர் ஒருவரை ஒருவர் உரசும் நிலையில் இருவரும்.

நெடுமூச்சு அப்பா அம்மா பார்த்து விடுவாங்களோ, ஊரவர் யாரும் அவர்களுக்குச் சொல்லி வைப்பாங்களோ என்ற அச்சம்.

''கமலி நீர் என்னுடன் வருவீரா? வெள்ளிக்கிழமை களில் நாங்கள் இப்படிச் சந்திப்பது மட்டும் வாழ்க்கை யாகுமா? உள்ளம் தான் பெரிது நாம் அதற்குத்தான் பயப்பிடவேணும். ஆட்களுக்கு அல்ல. நீர் சொல்லும். இண்டைக்கே உம்மைக் கூட்டிச் செல்ல நான் தயார். உமக்கும் என்ன சாதிபார்க்கும் நிலைக்கு நீரும் இறங்கி விட்டீரா?'' இப்படி அவன் வினாக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிரள மிரள விழித்த வண்ணம் தன் கரங்களால் அவன் வாயை மூடும் அவளது உளம் படும் வேதனை.

''நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்கோ! சாதி எண்ணம் ஏதும் எனக்கும் இருக்காது எண்டு நான் யோசிப்பது எல்லாம் என்ரை சகோதரங்களைப் பற்றித் தான். நான் ஓடிவிட்டால் அவர்கள் கதி? சதா சாதி குலம் என்று பழைமை பேசும் அப்பா. அவர் கீறிய கோட்டைத் தாண்டாத அம்மா. இட்டதே கட்டளை என ஏந்தும் யேர்மனியில் இருக்கும் அண்ணா. இப்பிடி நினைக்கும் அவள் அனுபவித்த துன்பம்.

கடைசியாக யாரோ சொல்லி வீட்டில் தெரியவர அறையில் பூட்டி அவள் பெற்ற சித்திரவதை 'திட்டு ஏச்சு அடி உதை.

தற்கொலை பண்ணினால் என்ன என்ற எண்ணம் ''இல்லை. இல்லை. இது கோழைகளின் முடிவு வாழ்ந்து தான் தீரவேணும்'' எனும் மனவலு அதன் விளைவு அப்பா யாரையோ பிடித்துப் பாஸ்போட், செய்தது.

''இவளை சேர்மனிக்கு அனுப்பினால் பிரச்சினை தீர்ந்துவிடும்'' என்று முடிவாகியது.

கமலியோ, வாழ்ந்தால் அவனுடன்தான் என்ற முடிவில் மாற்றம் செய்யாது விடினும் வாழ்க்கையின் அந்த அதிகாரத்தைச் சற்றுப் பொறுத்துத்தான் ஆரம்பிப்போமே என்று அவர்கள் முடிவுக்குக் கட்டுப்படு கிறாள்.

பயணம் என்று வீட்டிலிருந்து புறப்பட்ட வேளைமுதல் அவள் அவனைக் கண்ணாற் காண எடுத்த முயற்சிகள்—

உயிர் வாழ அல்ல-வளம் பெற அல்ல-நல்ல பயணமாக அமைய வேண்டுமே என்றல்ல அவள், கல்லெடுத்த கடவுளரிடம் எல்லாம் வேண்டியது-அவனது தரிசனமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவு தெரியாத தங்கள் உறவின் புதிரை அவிழ்க்க முடியாத அப்பேதை—எவனுக்காக என்றும் எதையும் எவரையும் துறக்கத் தயாராக இருந்தாளோ அந்தப்பேதை சாதி என்னும் தமிழினத்தின் சிறுமையை உடைக்கத் துணிந்துவிட்ட அப் புரட்சிப் பெண்.

இத்தினையாயிரம் மைல்கள் தாண்டி, காவலைத் தாண்டி பெற்றோர் அரண் என நினைத்த வெளிநாட்டிலே தன்னவனைக் காணக் கிடைத்ததை எண்ணி—சிந்தனைப் புயிலில் சிக்குண்டு-செய்வதறியாது நின்ற அவ்வேளையில்.

அவனோ, அப் பெண்ணின் கணவனோடு அவளுக் காகவோ என்னவோ பேச்சுக் கொடுக்கிறான்.

''நான் இப்ப வந்து இரண்டு மாதமுங்கோ. உங்கடை குடும்பம் தங்கப்போற வீட்டுக்கு வெகு அருகிலை—பொடியள் 42 பேர் இருக்கினமல்லேயுங்கோ! அங்கைதான் வாழறன்! என்னங்கோ செய்ய? படும் துன்பத்தைக் கேட்டுக் கேட்டு மனது மரத்துப் போச்சு. கொஞ்சகாலம் நாட்டிலை சுற்றுச் சுதந்திரமாக உலாவக்கூடிய காலம் வரயுக்கை போகலாம் எண்டுதான் வந்தன்'' என்கிறான் அவன்.

மக்கள்படும் துன்பத்தைக் குறிப்பிடுவதாகக் கேட்போர் நினைக்க, செய்தி தனக்குத்தான் என்று புரிகிறாள் கமலி.

''துன்பம் தீரத் துணிவான முடிவுக்குச் சம்பந்தப் பட்டோர் எல்லாரும் வரவேணுமுங்கோ'' என்று அவளும் கலந்து கொண்டாள்.

''உது இப்போதைக்குச் சரி வராதுங்கோ'' இது அவளது துணையாக வந்த பெண்ணின் எண்ணம்.

''இரண்டத்தா ஒண்டு என்று வந்தப் பிறகு ஒரு முடிவு வருமுங்கோ'' என்கிறான் அவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உங்கள் நம்பிக்கை வாழ்க'' என்று தான் அறியாத வாழ்வுக்கு வாழ்த்துக் கூறினான், அப் பெண்ணின் கணவன். பயணம் முடிகிறது. வீடு வருகிறது. அவனும் அவாகளுடன் வீடு வரை பயணம் வருகிறான்.

''என்ன கமலி! இவரை முந்தியே உங்களுக்குத் தெரியும்போல கிடக்கு. அப்ப எனககேன் இவரை அறிமுகப் படுத்தல்லை!'' என்கிறாள் அப்பெண்.

''ஓ! இவரையா? நல்லாய்த் தெரியுமே! எனக்குச் சொந்தக்காரன். இவற்றை பேர் இராமச்சந்திரன்'' என்று வெகு அர்த்தத்தோடு அறிமுகத்தை நடத்தினாள் கமலி.

வீடு வந்ததும்...

''இரண்டு பேரும் கதைச்சுக்கொண்டிருங்கோப்பா. நான் புதுசு. உங்களுக்குத் தெரியும்தானே! தண்ணி வெனனிதர எனக்கு இடம் வலம் தெரியாது. நான் எங்கடை வீட்டைச் சுற்றிப் பார்க்கப் போறன்.'' என்று விடைபெறுகிறாள் அப்பெண். அவள் கணவன் சற்று நேரத்தில் வருவதாகச் சொல்லி வெளியேறுகிறான்.

கதைத்த சத்தம்...ம்...ம்...ம்

ஆனால் அழுகை—விசும்பல்.

''கமலி அழாதையுங்கோ...அவங்களுக்குக் கேக்கப் போகுது. இனி ஒரு முடிவுக்கு வரவேணும். இனி உங்க அண்ணன் வரமுதல் நான் போகவேணும். அவற்றை இடம் எனக்குத் தெரியும். நான் பிறகு உங்களைச் சந்திக்கிறன்'' என்கிறான் இராமச்சந்திரன்.

கதவு தட்டும் சத்தம் கேட்கிறது. கமலி கண்ணீரைக் கட்டுப்படுத்தி கதவைத் திறக்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அண்ணா!'' என அழைத்த அவள் விக்கி விக்கி அழ, வீட்டுக்குரியவன் அண்ணனைக் கூட்டி வர — பாசப் பெருக்கால் ஏற்பட்ட கண்ணீர் என அவர்கள் எல்லாரும் எண்ண,

''ரொம்ப தாங்சுங்கோ! எப்படியோ தவற விட்டிட்டன். நானும் எயர்போட்டுக்குப் போன நானுங்கோ!'' என்று நுழைந்த அவன், ''ஓ! இது யார்? இராமச்சந்திரனா? எனக்கு எல்லாம் தெரியும். நான் ஒரு மரமல்ல. எனக்கும் இதயம் உண்டு. நாட்டிலை, அதன் விடுதலைக்காகச் சிந்தப்படும் இரத்தம் சாதி பாத்தா கொட்டுது? அர்த்தம் இல்லாத சாதி வெறி அம்மா அப்பாவின்ரை சந்ததியோடை ஒழியட்டும். இந்த வெள்ளையர் மண்ணிலை இருந்தும், சாதிக்குச் சாவு மணி யடிக்கத் துணியதே! தமிழன், வாழ்ந்து பயனில்லை யுங்கோ! கமலிக்கு என்ரை வீடு கூண்டல்ல. அது அவளுக்கு வாழ்வு தரும் கூடுதான். இனி என்ன! மிகுதியை நான் கவனிக்கிறன்'' என்று ஒரே மூச்சில் கூறி முடித்தான் அவன்!

வீட்டின் தலைவிக்கோ தலைவனுக்கோ முற்றிலும் புரியவில்லை. ஆனால் புரிந்தன ஏற்கெனவே இணைந்து விட்ட இரண்டு உள்ளங்களும்.

இத்தினயாயிரம் மைல்தூரம் கடந்து இணைந்த அந்தச் சோடிச் சிட்டுக்கள் அண்ணன் அமைக்கும் சாதியற்ற சகாப்தம் காண இன்பக் கனவை எதிர் கொண்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓரக்கண்

**வசந்தி**

### 1

காலை ஏழு மணியளவில் குளித்து விட்டு தேநீர் குடிப்பதற்கு குசினிக்குள் நுழைந்தாள் ரேவதி.

பாத்திரங்களின் தட, புட சத்தம் என்றும் இல்லாத சுருதியில் முழங்கிக்கொண்டு இருந்தது. அம்மாவைச் சுற்றி தம்பி சுரேனும், சாந்தியும் தேங்காய் துருவலை கையால் பிசைந்தவண்ணம் இருந்தனர்.

அம்மா குளித்துவிட்டு திருநீறு இட்ட நெற்றியுடன், அடுப்பின் அருகில் இருந்து ஏதோ பொரித்துக் கொண்டிருந்தாள். மேசையில் உள்ள தேநீரை அவசரமாய் குடித்துவிட்டு சீலையை உடுக்கும் நேரத்தில் "இவளுக்கு தைப் பொங்கல் நாளிலும்கூட வீட்டில் இருந்து ஒத்தாசை செய்ய பிடிக்காமல் பேப்பருடன் வெளிக்கிட்டு விட்டாள். கிழமை நாட்களில் வேலை என்று திரிவது, சனி ஞாயிறு கூட்டம் கச்சேரி என்று இரவு பகல் தெரியாமல் அலைவது. நல்லநாள் பெரியநாளிலும்கூட வீட்டில் இருக்கபிடிக்காமல் அலைகிறாள். என்ன பிள்ளை வளர்ப்போ தெரியவில்லை. இந்தக் காலத்து ஆண் பிள்ளைகள் கூட என்ன ஒழுங்காய் வீட்டில் இருக்குதுகள். இந்த பெட்டை ஜென்மத்துக்கு என்ன ஆட்டாமும் பாட்டாமும்." என்று அம்மம்மாக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழவி அடிக்குரலில் ஓலமிடுவது கேட்காமல்இல்லை. அவள் இங்கு நடக்கும் எதிலும் தனக்கு ஒருவித சம்பந்தமும் இல்லை என்ற மாதிரி, கைப்பையுடனும், பத்திரிகை யுடனும் பஸ் நிலையம் நோக்கி விரைந்தாள்.

ரேவதி எண்ணூறு ரூபாய் சம்பளம் பெறும் கணக்கர் வேலையில் இருந்தபடி தனது குடும்பச் சுமையைச் சுமந்து கொண்டு, தனது விதவைத் தாய் பாக்கியத்துடனும், அருமைத் தம்பி சுரேனுடனும் அந்தச் சிறிய வீட்டில் வாழ்ந்து வருகிறாள். சிறு வயதில் இருந்தே முற்போக்குக் கொள்கையும் முற்கோபமும் உடையவள். காந்தியின் சத்திய சோதனை, ரூசோவின் வாழ்க்கை வரலாறுகளை விரும்பிப் படித்ததால் தாய் பாக்கியத்திற்கு சமுதாயம் வழங்கிய கொடுமைகளையும், தாய் பட்ட சிறுமைகளை யும் கண்டு, பஞ்சு போன்ற பிஞ்சு இதயம் பாறையாய் கனத்துவிட்டது அவளுக்கு.

பாக்கியம் மிகவும் வசதியான குடும்பத்தில் பிறந்தவள், பள்ளிப் பருவத்திலே சுந்தரம் என்னும் தமிழ் ஆசிரியனை தன் விருப்பப்படி மணந்து ஒடுகாலி என்ற பட்டம் பெற்று, மூன்று வருடத்தில் இதய நோயாளியான சுந்தரத்தைப் பறிகொடுத்தாள். கணவனைப் பறிகொடுத்த நாளில் இருந்து, தனது தாய் மரகதத்திடம் மாதப் படிப் பிச்சை பெற்று தனது இரு கண்மணிகளையும் வளர்த்து வந்தாள். இப்போது இருபது வயதான மகள் சம்பாதிப்பதால், மகளின் சுயகௌரவத்திற்காகப் படிக் காசைத் தாயிட மிருந்து பெறுவதை நிறுத்திவிட்டாள்.

மரகதம் பக்கத்து ஊரில் இளையமகள் கனகத்துடன் தனது பெரிய வீட்டில் வாழ்கிறாள். கனகம் அவ்வூரின் பெரிய வசதியான இடத்தில் வாழ்க்கைப்பட்டது பற்றி அவளுக்கு பெரிய திருப்தி.

மரகதம் மாதத்துக்கு ஒரு தடவை பாக்கியம் வீட்டுக்கு வந்து அவளது ஓடுகாலி வாழ்க்கையினைப் பற்றியும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னிடம் படிக்காசுபெற்று ஜீவனம் நடத்துவதை இட்டும் பல தடவை குத்திக்காட்டியிருக்கிறாள்.

ஆனால் பாக்கியத்திற்கு தாயின்மீதும், தங்கை கனகத்தின்மீதும் நல்ல பாசம். என்ன சொன்னாலும் சிரிப்பதுடன் தனது கதையை முடித்துக் கொள்வாள். அப்படி வாழ்வதினால்தான் இவ்வளவு காலமும் இவர்களிடையே தாய், தங்கை என்ற உறவு நிலைத்திருக்கிறது போலும்!

பாக்கியம் வருடப் பிறப்பு, தைப் பொங்கல் போன்ற விசேட தினங்களுக்கு கனகம் வீட்டுக்குச்சென்று கைவேலை செய்து உதவுவாள். தங்கை கனகமும் அக்காவின் வாழ்க்கையினைப்பற்றியும், அம்மாவின் கொடுமையையும் நினைத்து பாக்கியத்திற்காக இரத்தக் கண்ணீர் வடிப்பாள்.

ஆனால் மரகதத்திற்கு மட்டும் முதல் மகளின் மீது நீங்காப் பகமை. அன்று அம்மம்மா வீட்டில் இருந்தாள். அவள் வழக்கம்போல் ஏழு மணிக்கு குளித்துவிட்டு சாப்பாட்டுத் தட்டுடன் குசினுக்குச் சென்றாள். "என்ன நீ பெண் பிள்ளையாய், லட்சணமாய் இல்லாமல், ஆண் பிள்ளை சுரேன் சாப்பிடுவதற்கு முன்னம் சாப்பிடுறது? நாளை புருசன் வீட்டுக்குப் போய் என்ன மாதிரி வாழப் போகிறாய்? நீ. இனி என்ன, படிச்சு வேலையும் எடுத்தாச்சு. கண்ட காவலி ஒருவனைப் பிடித்துக்கொண்டு ஓடுகாலியாய் போகாமல், நான் சொல்லுறபடி கேள். நான் உனக்கு என்று காசும் நகையும் வைத்திருக்கிறேன். சீதனமாய் கொடுத்து நல்லபடி கலியாணம் செய்து தருவேன். உன்னை ஒருவன் கையில் பிடித்துக் கொடுத்தால் எனக்கு ஒரு கப்பலைக் கடலில் இறக்கி விட்ட பெரும் சுமை ஒன்று குறையும். அல்லாவிடின் உனக்கும் அம்மாவைப்போல் சீரழிவுதான். இனிமேல் நான் சொன்ன படி நட" என்றாள் அவள்.

ரேவதி பல்லைக் கடித்துக் கொண்டு அவசரமாய் பஸ்சிற்கு ஓடினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

அன்று வேலை முடிந்து வீடு திரும்ப இரவு பத்து மணியாகி விட்டது. அம்மாவும் தம்பியும் தூங்கிவிட்டனர். அம்மம்மாவும் சின்னம்மா வீட்டுக்குப் போய்விட்டாள். எனக்கு பெரிய நிம்மதியாய் இருந்தது! அடுத்தநாள் காலை நான் அம்மாவிடம் அம்மம்மாக்கிழவி என்னைப்பற்றி திட்டியது பற்றிச் சொன்னேன்.

''உன்னைப் படிப்பித்து நல்ல நிலைக்குக் கொண்டு வந்தது, எங்களுக்கு உழைத்து தருவதற்கு மட்டும் இல்லை. சமுதாயம் என்னும் எல்லைக் கோட்டிற்குள் வாழவும் தான்; பெரியவர்களின் சொல்லைக்கேட்டு நடந்தால் நமக்கும் நல்லது, சமுதாயத்திற்கும் நல்லது'' என்று அம்மா அறிவுரை கூறினாள்.

என்னுடைய சுய விருப்பங்கள், இலட்சியங்கள், அபிலாஷைகளை வெளியிடுவதற்கு கலாச்சர வகுப்புக்கள் உதவின. இப்படி இருக்கும்போது எனக்கு ரவியின் அறிமுகம் கிடைத்தது. அவர் பல்கலைக் கழகத்தின் புவியியல் விரிவுரையாளர், நான் செல்லும் அநேக கூட்டங்களிற்கு அவரும் வருவதுண்டு! பெண்களின் சுதந்திரம் பற்றி மிகுந்த ஈடுபாடு உடைய முற்போக்கு எழுத்தாளர்.

நான் எனது சில சந்தேகங்கள், கவிதைகளின் பொருள் விளக்கம் எல்லாம் ரவியிடம் இருந்து தெரிந்து கொண்டேன்.

நமது இந்தப் பழக்கம் ஒரு வருடகாலமாய் நீடித்தது.

ஒரு நாள் அவர் என்னிடம் ''எனக்கு வாழ்க்கையில் ஒரு குறுக்கீடுகளும் இல்லை. அம்மா அப்பா இல்லை. உம்மை நான் திருமணம் செய்துகொள்ள விரும்புகிறேன். என்று சொன்னார்.

''இல்லை ரவி! நாங்கள் எப்போதும் நல்ல நண்பர்களாகவே இருப்போம். ஆனால் திருமணம் என்ற பந்தத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் நுழைய நான் விரும்பவில்லை. வாழ்க்கைக் கடல் சுயநலம் என்னும் அரண்களினால் தீவுகளாக்கப்படாமல் வாழ்க்கையை சமுத்திரமாய் அனுபவிக்க விரும்பு கிறேன்'' என்றேன். அதற்கு அவர் சந்நியாசி வாழ்க்கையை நான் விரும்பவில்லை. உலகத்தில் பிறந்த ஒவ்வொருவனுக்கும் வாழ்வதற்கு உரிமை; திருமணம் வாழ்க்கைக்கு மிக முக்கியமானதொரு நிகழ்ச்சி என்று பெரிய சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தி, கடந்த மாத இதழில் தான் எழுதிய கவிதையைப் பார்க்கும்படி தந்தார். ஒரு நாள் வீட்டுக்கு வந்து நேரிடையாக அம்மாவிடமே கேட்டுவிட்டார் அவர். இதுபற்றி அம்மாவிற்கு மிகவும் சந்தோசம்.

ஒருவாறு திருமணமும் முடிந்தது. ''உம்மை நான் எனது இலட்சிய மனைவியாக அடைந்ததை மிகப் பெருமையாக நினைக்கிறேன். எனக்கு ஆண்களைக் கண்டால் பதுங்கி ஒழித்துக்கொண்டு சமயலறைக்குப் போகும் பெண்களைப் பிடிக்காது. உம்மைப்போன்ற புதுமைப் பெண்கள் நமது நாட்டில் உருவாக வேண்டும். நமது இலட்சியங்கள் ஒன்று தான். பாரதிக்கு கண்ணம்மா போல, ரவிக்கு ரேவதி'' என்றார்.

அந்த நேரத்தில் நான் எங்கோ புதிய உலகில் சிறகடித்துப் பறந்தேன்.

அவரின் விருப்பப்படி உடுத்திருந்த சீலையுடன் மட்டும், அவரின் வீட்டுக்குப் போய் எமது புதுவாழ்க்கை ஆரம்பித்தோம்.

## 3

நாங்கள் இருவரும் காலை வேலை செய்து பின்னரே ஆறு மணிக்கு அநேகமாக இலக்கிய கருத்தரங்கிற்கு, தமிழ் சங்க கூட்டத்திற்கு என்று சென்று வந்தோம். இப்படியே ஐந்து மாதம் கழிந்து விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று நானும் அவரும் எங்கள் அம்மா வீட்டிற்குப் போனோம். அப்போது அம்மம்மா வீட்டில் இருந்தாள் "என்ன தம்பி இவள் ரேவதியை நீர் கூட்டம் புரட்சி என்று அலையவிடாமல்; வீட்டில் இருந்து ஒழுங்காய் சமைச்சு குடும்பத்தை நடத்தச் சொல்லும். கலியாணம் இல்லாமல் இருக்கையில் அலைந்தது போல் இப்பவும் திரிந்தால் உமக்குத்தான் அதனால் கெட்டப்பெயர்'' என்றாள். அவர் சிரித்துவிட்டு ஒன்றும் பேசவில்லை.

நான் முன்பு பார்த்த ரவி இப்போ இல்லை. வீட்டுக்கு ஒன்பது மணிக்கு திரும்புவதை வழக்கமாக வைத்துக் கொண்டார். கூட்டங்களுக்கும் வருவதை நிறுத்தி விட்டார்.

## 4

அன்று விவாத அரங்கம் முடிந்து ரேவதி வீடு திரும்பிப் போக, இரவு பத்து மணியாகி விட்டது. கதவு எல்லாம் மூடியபடி இருந்தது. அவள் கதவை மெதுவாக திறந்து கொண்டு உள்ளே சென்றாள். ரவி நித்திரையில் இருந்து எழுந்து வந்தார். இன்னும் இரவுச் சாப்பாடு செய்யவும் இல்லை என குசினி சொல்லிற்று.

ரவியின் முகம் சிவந்து இருந்தது.

''இனிமேல் என்னால் இப்படி இருக்க முடியாது, வேலை முடிந்ததும் வீட்டுக்கு வந்து ஒழுங்காய் குடும்பத்தைக் கவனியும். நாலுபேர் மதிக்க மனைவி என்னும் அந்தஸ்தில் நீர் வாழ்வதைத்தான் நான் விரும்பு கிறேன். இப்படி கூட்டங்கள், பேச்சுகள் என்று திரிய வேண்டாம்'' என்று ரவி—என் கணவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் செல்லச் செல்ல வாக்குவாதமாகியது. கடைசி யில் கன்னத்தில் பெரிய அறையும் வைத்தார்.

அவளுக்கு தலைமேல் இரும்பைக் காய்ச்சி ஊற்றியது போல் இருந்தது.

ரேவதிக்கு அன்று இரவு தூக்கம் இல்லாததினால் தலை ஒரே கனமாய் இருந்தது. நான் அடைய விரும்பிய இலட்சி யங்கள் இவைதானா?

அன்று நான் எழுதிய கவிதைகளைப் புகழ்ந்து பெண் விடுதலை என்று வாய் கிழியக் கத்தியதும் எல்லாம் என்ன?

ரேவதி இன்று ஐந்து மாத திருமண வாழ்வின் ஐம்பது வருட அனுபவத்தைப் பெற்றுவிட்ட ரவி போன்றவர்கள் நிலையற்று திரிபவர்களுக்கும் வாழ்க்கையின், ஆழமாக சிந்திப்பதற்கும் நேரமேது.

சம்பிரதாயங்கள் மதித்து, பெண்களை சமாதியாக்கும் கூட்டத்தில் நான் தனிமையில் இருந்து சிந்தித்து, எனது வாழ்க்கையில் விழுந்த தழும்புகளை எல்லோரும் புரியும்படி செய்வதுதான் முறை; இதில் மறைக்க வேண்டியது எதுவும் இல்லை. கணவனுடன் ஒத்துப் போக இயலாமல், போலியான வெள்ளித்திரையில் வாழ முடியவில்லை. என்னைச் சுற்றியிருக்கும் கறைபடிந்த இரும்புகளை, உருக்க வேண்டும்.

"தன்னுடைய புனிதத்தை நிரூபிக்க அன்று சீதை தீக்குளித்தாள். இன்னும் இந்த ஆண் சமுதாயம் திருந்த வில்லையே! தன்னைப் பிரிந்திருக்கிற ஒவ்வொரு நிமிஷமும் தன் மனைவி சோரம் போகிறாள் என நினைப்பவர்கள் தான் இங்கு அதிகம். ஊருக்கும் உலகத்துக்குமென்றும் அஞ்சி அஞ்சி தம் மனைவியரின் சுதந்திரமென்னும் சிறகினை ஒடிக்கிற ஆண்கள் நிறைந்த பூமி இது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுடைய நெஞ்சுக்குள் எரிமலை குமுறியது—தான் முடிவெடுக்க வேண்டிய நேரம் வந்தாகிவிட்டது, என்பதை அவள் உணர்ந்தாள்.

—கணவனா? சுதந்திரமா?

அன்று அம்மம்மாக் கிழவி தன்னுடைய வாயை வைத்துக்கொண்டு பேசாமல் இருந்திருக்கலாம், அதனால் தான் இவ்வளவும் வந்தது என்று சொல்ல முடியாவிட்டாலும், அவள்தானே தொடக்கி வைத்தாள்!

அவளுடைய பேச்சை நாலுபேரும்—இந்தச் சமூகம், ஒப்புக் கொள்கிறது.

பெண்ணுக்கொரு நீதி, ஆணுக்கொரு நீதி என்று இந்தச் சமுதாயத்துக்கு ஏன் இந்த வஞ்சனை—ஓரக்கண்.

பழமை மிகுந்த இந்தச் சமுதாயத்தில் ஒவ்வொரு பெண்ணும் இப்படித்தான் வாழ வேண்டுமெனில், இந்தச் சமுதாயத்தை விட்டுப் போவதே மேல்.

இப்படித்தான் ரேவதி முடிவு கட்டினாள்.

தாய் 'ஓடுகாலி' என்று பெயரெடுத்தாள்.

இவள் 'வாழாவெட்டி' என்று பெயரெடுக்கப் போகிறாள்.

எந்தக் குடும்பச் சுமையும் இல்லாதவள் எந்தப் பேரெடுத்தால்தான் என்ன? இருந்தும், அந்தப் பெயர் செவியினில் விழாத ஒரு தொலை தூரத்திற்குப் போய் விட்டால்...?

''ஆம்; அதுதான் சரி.

*       *       *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்கள் சில நகருகின்றன.

ரேவதி வெளிநாடு செல்வதற்கான எல்லா ஒழுங்குகளும் முடிந்துவிட்டன.

விமான நிலையம்—

அம்மா, அம்மம்மாக் கிழவி, சுரேன், சின்னம்மாவின் மகள் சாந்தி எல்லோரும் நிற்கிறார்கள்.

ரவியைக் கண்டே இரண்டு மாதங்களுக்கு மேலிருக்கும். அவளும் அவனை எதிர்பார்க்கவில்லைத்தான்.

ஆயினும், இவர்களாவது போய் தனது வெளிநாட்டுப் பயணத்தை அவனுக்குச் சொல்வார்கள் என்று இவள் எதிர்பார்க்கிறாள்.

தான் வெளிநாடு போய்விட்டதை அல்ல, இந்த 'வாழாவெட்டி' இனியும் வாழ்வாள் என்ற கருத்தை அவன் அறிந்து கொள்ள வேண்டும் என்பதே அவளின் ஆசை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்வுகள்

பிரேமி

மாரி முடிந்த கையோடு ஆரம்பித்திருந்த அந்தப் பனி காலம், அவ்வளவு குளிரானதாக, உடம்பை ஊடுருவிச் சென்று இதயத்தை இறுக்கும் விறைப்பானதாக என்றைக்குமே இருந்ததாய், இத்தனை வருஷ ஜீவியத்தில் அவனுக்கு ஞாபகமில்லை. தை மாதத்தின் முதல் வாரத்தி லேயே ஆரம்பமாகிவிட்ட அந்தக் கொடும்பனியில் நனைந்த கூரைக் கீற்று நுனிகளிலிருந்தும், குடிசைக்கு முன்னே நின்ற இளந் தென்னைமரங்களிலிருந்தும் பனிநீர் சொட்டு விட்டுக் கொண்டிருந்ததை, படுக்கையிலிருந்து எழுந்து வெளியே வந்ததுமே நன்னி உணர்ந்து கொண்டான்.

வைரம் பாய்ந்த உடம்புதான். என்றாலும், வயோதிகத்தாலும், கடந்த இரண்டு மூன்று நாட்களாகச் சுகவீனமுற்று படுக்கையிலே கிடந்ததாலும் தளர்ந்து போயிருந்தது. ஒரு காலத்தில் மர்க்கடப் பாய்ச்சலில் மரம் ஏறி இறங்கியவன் நன்னி. ஆனால் இன்றைக்கு......?

"ம்...ஏலாத நேரத்தில நாளைக்கு இருமல் காய்ச்ச லெண்டு திரும்பி வந்திட்டா ஆர் பாக்கிறது?" என்று வாய்க்குள் முணுமுணுத்தபடி மீண்டும் குடிசைக்குள் பின் வாங்கிய நன்னியின் கால்களிற்பட்டு வாசலிலே செத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோரம் கிடந்த பனையோலைப் 'பறி' விழுந்தது. அதைக் குனிந்தெடுத்து பழையபடி சரித்து வைத்துவிட்டு, இச்சை யில் செயலாய் கைகள் வளையிலே தூங்கிக் கொண்டிருந்த வீச்சு வலையைத் தடவிப் பார்க்க உள்ளே வந்தான் அவன்.

விடிகிற நேரம்தான் என்று தெரிந்ததே தவிர, எத்தனை மணியிருக்கும் என்பதை அவனால் அனுமானிக்க முடியவில்லை.

அது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

கொழும்பிலிருந்து மதியம் புறப்பட்டு யாழ்ப்பாணத் துக்கு வரும் புகைவண்டி நாவற்குழிப் பாலத்தைக் கடக்கும் கடகடா ஒலியிலேயே அப்போது எட்டு மணி என்பதை நிச்சயப்படுத்திக் கொண்டு சாப்பிட்டுத் தூங்கப் போனால், காலையில் சரியாக ஐந்து மணிக்கெல்லாம் எழுந்து விடுவான் நன்னி. பாயிலிருந்தபடியே தலைமாட்டி லிருக்கும்' மண்ணெண்ணெய் விளக்கைக் கொளுத்துவான். நீளமான சுருட்டொன்றைச் சுற்றி அதைப் பற்றவைத்த பின்னர்தான் விளக்கை அணைத்துவிட்டு வெளியே வருவான். அவன் எழுந்து குடிசைக்கு வெளியே வருகிற போதோ, வந்து சிறிது நேரத்தின் பின்னரோதான் கீழ் மூலையில் கதிரவனின் கீற்றுத் தெரியும். பின்னாளில் புகையிரத நேரங்கள் மாற்றப்பட்டபோதும், புகையிரதங் களே நிறுத்தப்பட்ட போதும்கூட நன்னியின் நடைமுறை யில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. இப்படி மணிக்கூடு இல்லாமலே எல்லாவற்றையும் ஓர் அட்டவணைப்படி ஒழுங்காகச் செய்துவந்த நன்னிக்கு, அன்றைய காலையில் நேரத்தை அனுமானிக்க முடியாமற்போனது ஆச்சரியமாக இருந்ததில் அதிசயமே இல்லை.

இரண்டு நாட்கள் படுக்கையாய் இருந்த அசதியால் மட்டுமல்ல, தூங்குகிறபோது வழக்கத்துக்கு மாறாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்கடி விழித்துக் கொண்டதாலுமே தன்னால் நேரத்தை அனுமானிக்க முடியவில்லை என்பது நன்னிக்குப் புரிந்தது. அந்தக் கணமே இரவில் நீண்ட நேரமாய்க்கேட்டுக் கொண்டிருந்த சத்தங்கள் அவனுக்கு நினைவில் வந்தன.

முதல் நாள் நடுநிசிவரை தோப்பின் வடகீழ் மூலைப் பக்கமாய் ரோட்டிலே சில இளைஞர்களின் குரல்களையும், டொக்கு டொக்கென்று மழைவெள்ளத்தை வடிய விட தார் ரோட்டைப் பிளப்பதுபோன்ற சத்தத்தையும், டார்ச் விளக்கின் ஒளிப் புள்ளிகளையும் அவன் அவதானித்திருந்ததால், இரவு அவனுக்கு அமைதியான தூக்கமே பிடிக்கவில்லை. கண்கள் கிறங்கி தூக்கம்வருகிற சமயத்தில் அந்த டொக்கு...டொக்கு ஒலி அவனை எழுப்பிக் கொண்டிருந்தது.

இரண்டொரு தடவைகள் படலையைத் திறந்து எட்டிக்கூடப் பார்த்தான். அப்போதும் அவர்கள் அங்கே ஏதோ செய்து கொண்டுதான் இருந்தார்கள். முன்பானால் அடிக்கடி லொறிகளும், கார்களும் ஒளிவெள்ளம் பாய்ச்சிய படி பாய்ந்து செல்லும். இப்போதோ தமிழ்ப் பிரதேச மெங்கும் ஒரு சுடலைப் பேரமைதி. பகலிலேயே போக்கு வரத்துக்கள் அருகிவிட்டன. அத்தியாவசிய தேவைக்காக வெளியே போய்வரும் மக்களின் நடமாட்டமும் இருட்டுகிற நேரத்துக்குள் அடங்கிவிடும். எங்கும் பறவை, விலங்கு போன்ற வாழ்க்கையே நிறைந்திருந்தது.

அவர்கள் அங்கே என்னசெய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிய, முதுமையின் இயல்பான ஆர்வம் அவனைப் பிடர் பிடித்து உந்தித் தள்ளியதாயினும் அந்த அமாவாசையை நெருங்கும் இருட்டிலும், இயலாமையிலும் அவ்வளவு தூரம் செல்ல அவனால் முடியவில்லை. விடியட்டும் பார்க்கலாம் என்று படுத்துவிட்டான்.

இரவு ஏற்பட்ட அரவங்களின் ஞாபகம் நெஞ்சில் முளைத்ததுமே, காலையில் அதுதான் முதல்வேலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது போன்ற பிடிவாதத்துடன் துண்டை இழுத்து தலையை மூடிக்கொண்டு குடிசையைவிட்டு வெளியே வந்த நன்னி, கிழக்கைப் பார்த்தபடி சூரியனின் முதற் கீற்றுக் காய் நிஷ்டையிலாழ்ந்தான்.

தரைவை நீரில் தவழ்ந்து வந்த சீதளக்காற்று மெல்ல ஆடிக் கொண்டிருந்தது.

சுருட்டை வலிந்து இழுத்துப் புகையை ஊதினான். அப்படி புகையை வெளியே விடுகிறபோதெல்லாம், தன் செவிகளுக்கு மட்டுமே கேட்கும் மெல்லிய முனகல் அவனிடமிருந்து புறப்பட்டுக் கொண்டிருந்தது.

'ம்...காசு வீணாய்ப் போகேல்லை. நல்ல பொசயிலை தான்!' நெஞ்சுக்குள் திருப்தி வெடித்தது.

சிறிது நேரத்தில் அணைந்து போன சுருட்டை வாசலோரம் கிடுகு மட்டையில் சொருகிவிட்டு, கழுத்தை நீட்டி எச்சியைத் துப்பிய நன்னி, வயிற்றிலிருந்த குமைச்சலை அப்போதுதான் உணர்ந்தவன் போல வயிற்றைத் தடவி விட்டுக் கொண்டான்.

இரண்டு நாட்களாக தேனீரையும், றஸ்க் விசுக் கோத்துக்களையும் தவிர வயிற்றுக்குள் போட்டு கொள் வதற்கு எதுவுமே கிடைக்காமற் போனால், வயிறு 'காந்தா'மல் என்ன செய்யும்? தேங்காய்க் கும்பியிலிருந்து இரண்டு தேங்காய்களை எடுத்து உரித்து கடையிலே கொடுத்தால் அரைக்கொத்து அரிசியாவது வாங்கி யிருக்கலாம்தான். மெல்ல மெல்ல உலையை வைத்து ஒரு பிடி சோறாவது சாப்பிட்டிருக்க முடியும். ஆனால் அவ்வளவு தூரம் அவனால் நடக்க முடியாமற் போய் விட்டது. முதல்நாள் காலை கூப்பிடு தொலைவிலுள்ள அரசாங்க டிஸ்பென்ஸரிக்குப் போய் மருந்து வாங்கி வரும் போதே, தலைச்சுற்று வந்து பாதிவழியிலேயே குந்தி விட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையிலே காசு இருந்திருந்தால் அந்தளவு சிரமப்பட வேண்டியதில்லை. அந்த வழியால் போய்வருகிற யாரிடமாவது கொடுத்தனுப்பி வாங்கியிருப்பான். அவனுக்கு முத்திரை கூட இல்லை.

'பாழாய்ப் போன விதானை. பெத்த பிள்ளையளின்ரை உதவியோ, இன சனத்தின்ரை ஆதரவோ இல்லாமல் தனித்துப்போன இந்தப் பாவிக்கு முத்திரை கூட இல்லாமல் பண்ணிப்போட்டானே!' வயிற்றிலிருந்து நேரடியாக வருவதுபோல், வயிறு பசிக்கிறபோதெல்லாம் அந்த வார்த்தைகளும் நன்னியின் வாயிலிருந்து வந்து கொண்டே இருக்கும்.

பங்கீட்டரிசிக் கூப்பன் முறையை ஒழித்துவிட்டு, அரசாங்கம் முத்திரை முறையை அமுலாக்கியபோது, வட்டக்கச்சியிலே மகளின் வீட்டுக்குப் போய்ச் சிலநாட்கள் தங்கியிருந்த நன்னிக்கு, பதிவு இல்லாமற் போய்விட்டது. திரும்ப ஊருக்கு வந்து ஆறு மாதங்களாய் கிராம விதானை வீட்டிற்கும், உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கும் அலைந்ததுதான் மிச்சம். ஒருநாள் காலையிலே போனவன் விதானை வருவார் வருவார் என்று ஒருமணி வரைக்கும் காத்திருந்தான். விதானைக்குப் பதிலாக பசியில் அவனுக்கு தலைச்சுற்றுத்தான் வந்தது.

'சீ, துப்புக்கெட்ட முத்திரை' என்று காறியுமிழ்ந்து விட்டு, அன்றைக்கே முத்திரை பெறும் முயற்சிக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டான் நன்னி. நெஞ்சில் விளைந்த வெறுப்பில், வேதனையில் முதியோர் உதவிப் பணம் பெறுவதற்கு எழுதும்படி சிலர் கூறிய ஆலோசனையையும் உதறி எறிந்துவிட்டு, பறியையும் வலையையும் தூக்கிக் கொண்டான் அவன். அன்றிலிருந்து கடந்த ஐந்து ஆறு ஆண்டுக்காலமாய் 'வீச்சு'த்தான் அவனுக்குச் சோறு போட்டு வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தோளிலே வீச்சு வலையும், மறுதோளிலே தொங்கவிடப்பட்ட பறியுமாக அவன் வீச்சிலிருந்து திரும்பி வருகையில், 'கையில பெலமிருக்கு, ஆருக்கு வேணும் அவங்கட பிச்சைச் சாப்பாடு?' என்று மனத்துள் நினைத்துக் கொள்வான் அவன். அந்த வைரமான வார்த்தைகளினை உச்சரிக்கும்போது சோர்ந்த உடம்பில் ஒரு சுறுசுறுப்பை உணர்ந்திருக்கிறான் நன்னி.

தூரத்தே தெரியும் தரைவை நீரில் வீச்சுப் பிடித்தும், வயற்குளத்து நன்னீரில் தூண்டி போட்டும் இத்தனை காலங்களையும் கடத்திவிட்டான். இனிமேல்...?

அவனால் இயலவில்லைத்தான். ஆனால், என்ன செய்ய? பட்டினி கிடந்து, நோய் நொடியென்று படுக்கையிலிருந்து சாவதைவிட, வேலை செய்யும்போதே செத்துப் போகவேண்டும் என்பதுதான் அவனுடைய பிடிவாதமான ஆசை. வாழ்க்கைத் தரத்தின் கடை நிலையிலுள்ள தனக்கு அரசாங்க உதவி கிடைக்கவில்லை என்பதால் அல்ல, அந்த ஐந்தாண்டுக் காலமாய் தன்னந் தனியனாக, தானே உழைத்துச் சாப்பிடுவதிலுள்ள ஒரு பரிபூரண நிறைவை அனுபவித்து, அந்த அனுபவ இனிப்புடன் தன் ஏகாந்த வாழ்க்கையை அணு அணுவாக அவன் அலசிப் பார்த்திருக்கிறான். அந்த அலசலில் கிடைத்த ஞானத்தில் தனக்குத் தானே சொல்லிக் கொள்வான் :

'கொள்ளைக்காறத் தேசம்: அதில பிச்சைக்காரச் சனங்கள்! உழைக்கிறவன்கள் ஆட்சி செய்யவேணும்; அப்பதான் உழைக்கிற மக்களின்ரை கஷ்ரம் தீருமெண்டு, மே முதலாந் தேதி சிகப்புக்கொடி பிடிச்சுக்கொண்டு போறதும், கூட்டம் போட்டு பேசுறதும் மட்டுந்தான். மே முதலாந்தேதி போச்சு தொண்டால் சிகப்பையே காணக் கிடைக்காது. காலமையும் பின்னேரமும் மேகந்தான் சிகப்பாயிருக்கும். ஹூம்... எல்லாம் புலுடா, எப்பிடி காக்கிச் சட்டை போட்டவனெல்லாம் பொலிசுக்காரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லையோ, அப்பிடித்தான் சிகப்புக் கொடி பிடிச்சவனெல்லாம் ஏழையளுக்காய்ப் பாடுபடுகிறவனில்லை.

மனத்து நிழலோட்டங்களில் அவனே ஒரு காலத்தில் சிவப்புக் கொடி பிடித்துக் கொண்டு திரிந்த ஊர்வலங்கள் ஞாபகத்துக்கு வரும்; அவனுடைய வைரம் பாய்ந்த இளமைக் காலம் ஞாபகம் வரும்; குடும்பம் ஞாபகத்துக்கு வரும்.

'ம்...அதெல்லாம் முடிஞ்ச கதை. அந்தக் காலத்தில சிகப்புக்கொடி பிடிச்சவனெல்லாம் சிங்கள அரசாங்கத்தை காக்காய் பிடிச்சு தாங்கள் மட்டும் நல்லாய் வந்திட்டான் கள். தொழிலாளரின்ரை பேச்சும் போச்சு; சிந்தனையும் போச்சு. சிகப்புக் கொடியை வீசிப்போட்டு நாளைக்கு பச்சைக் கொடியைப் பிடிச்சுக்கொண்டு வந்து, இதுதான் இனிமேலுக்கு தொழிலாளரின்ரை கட்சியெண்டு இவன்கள் சொன்னாலும் நான் ஆச்சரியப்பட மாட்டன். எல்லாம் துரோகம்! பச்சைத் துரோகம்! ஏழைப்பட்ட சனத்துக்கு விடிவே இல்லை!'

இந்தத் தார்மீகக் கோபத்தில் அவனுடைய கண்கள் சிவக்கும். அவனால் என்ன செய்ய முடியும்? தன் ஆற்றாமையை நினைத்துத் தன் ஆத்திரத்தை அடக்கிக் கொள்வான் அவன்.

ஆனால், அண்மைக் காலமாய் அரசாங்கத்துக்கு எதிராய் தமிழ்ப் பகுதிகளிலே நடைபெற்று வரும் ஆயுதப் போராட்டம் அவனுக்குத் தெரியும். அதுவே வாழ்க்கையில் ஒரு பிடிமானத்தை ஒரு தெம்பினை அவனுக்கு அளித்தது. ஒரு புதிய சரித்திர கால கட்டத்திலும் வாழ்ந்து பார்க்க வேண்டுமென்ற ஆசையை அவனுள் வளர்த்தது அது.

''இப்ப இஞ்சை பெடியள் வெளிக்கிட்டிருக்கிறான்கள். எங்களுக்கெண்டு ஒரு தேசம்; எங்களுக்கெண்டு ஒரு அரசு; அதில உழைக்கிற மக்களுக்கெண்டு ஒரு ஆட்சி, பெடியள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேக்கிறதில ஞாயம் இருக்குதுதான். எண்டாலும், எப்ப இது நடக்கப்போகுது? ஆமிக்காரனும் பெடியளைக் கண்ட கண்ட இடத்தில சுட்டுப் போடுக்கொண்டு திரியிறான். ரண்டு நாளைக்கு முந்திக்கூட கைதடிச் சந்தியில் ஒரு கிழவனையும், குழந்தைப் பிள்ளையொண்டையும் சுட்டுப் போட்டான்கள். இப்ப, தமிழ்ச் சாதியின்ரை ரத்தத்தால தான் சிகப்புத் தெரியுது. தெரியட்டும். எங்களுக்கெண்டு ஒரு நாடு கிடைக்கிற நேரத்தில இந்தரத்த நிறக்கொடியை உச்சிப்பனையில ஏறி கட்டுறதுக்கு நான் இல்லாமல் போனாலும், ஆராவது ஒருத்தன் செய்யத்தான்போறான்.

அவனுக்குச் சிவப்பு என்றால் ஆசைதான். ஆயிரக் கணக்கான இளைஞரும் முதியோரும், ஆண்களும் பெண் களுமாய் மே முதல் நாள் செங்கொடி பிடித்தபடி முதலாளித்துவ எதிர்ப்புக் கோஷமிட்டுச் செல்லும் ஊர் வலங்களைக் கண்டும், அந்தத் தொழிலாளர் தினக் கூட்டங்களில் தானே பங்கெடுத்தும், தலைவர்களின் பேச்சுக்களைக் கிரகித்தும் சிவப்பு வர்ணத்தில் ஓர் ஆசை யையும், உழைக்கும் மக்களின் ஆட்சியில் ஓர் எதிர்பார்ப்பை யும் வைத்துக்கொண்டு ஐந்து தசாப்தங்களைக் கடந்த பிறகுதான் எல்லாவற்றிலும் ஒரு நம்பிக்கையீனம் ஏற் பட்டது அவனுக்கு. மூத்த அரசியல்வாதிகளின் மூத்த பொய்யுரைகளை அவன் இனங் கண்டுகொண்டான்.

அவன் சோர்ந்தே போனான். அந்தச் சோர்வில், விரக்தியில் தன்னுடைய ஆசைக்கும், எதிர்பார்ப்புக்கும் சவக்குழி தோண்டி அவற்றைப்போட்டு புதைக்கப்போகும் நேரத்திலேதான், 'எங்களுக்கென்றொரு நாடு; அதில் உழைக்கும் வர்க்கத்தின் செங்கொடி ஆட்சி' என்ற தாரக மந்திரத்தை உச்சரித்துக்கொண்டு அந்த இளைய தலை முறை ஆயுதம் ஏந்தியது.

அவன் கிழவன். எழுபத்திரண்டு வயதானவன். அதிலும் வறுமையும், பிணியும் செல்லரிக்க வைத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடம்பு. அவனால் என்ன செய்ய இயலும்? தன் நம்பிக்கைக்கு நீரூற்றி வளர்ப்பதைத் தவிர, ஆயுதமேந்திய அந்த இளைய தலைமுறைக்கு அவன் எந்த வகையில் உதவ முடியும்? முடிந்தால் தன் இரத்தத்தையே அவர்களுக்கு வரவேற்புக் கூறும் பன்னீராய்த் தெளிப்பதற்கும் அவன் தயார்தான். ஆனால், அதற்கும் ஒரு சந்தர்ப்பம் வேண்டுமே! பிரதான வீதியிலிருந்து சுமார் இருநூறு யார்களுக்கு மேலே, அக்கம் பக்கத்தில் ஜனசஞ்சாரமோ, குடியிருப்புக்களோ அற்றுப்போன புறம்போக்கான ஒரு தென்னந் தோப்பில் காவற் கொட்டிலையே தன் குடிசையாக்கிக்கொண்டு, அந்தக் குடிசையிலிருப்பதற்குக் கூலியாக தென்னந்தோப்பைப் பராமரித்துக்கொண்டுவரும் ஒரு கிழவனால் எப்படி ஒரு சந்தர்ப்பத்தைத் தேடிக் கொள்ளமுடியும்?

முடியாதுதான்.

அப்படி நினைக்கிறபோதெல்லாம் அவனது வயதையும் விஞ்சிய ஓர் இயலாமை அவனுள் குடிபுகுந்துவிடும்.

குடிசை வாசலில் அமர்ந்திருந்த நன்னி, கிடுகிலே சொருகியிருந்த குறைச் சுருட்டை எடுத்து இதமாகச் சாம்பரைத் தட்டி, மடியிலேயிருந்த தீப்பெட்டியை எடுத்து அதைப் பற்றவைத்தான்.

விறைத்து வந்த உடம்புக்கு இதமாக பக்...பக்கென்று சுதுமலைப் புகையிலையின் புகையை இழுத்து ஊதியவன், வடகீழ் மூலையில் சூரியனின் ஒளிக் கீறலைக் கண்டதுமே துள்ளி எழுந்தான்.

அந்த மெல்லிய வெளிச்சத்தில் தென்னைகளுக்குப் பசளையிடுவதற்காக வெட்டப்பட்டிருந்த அதர்களைத் தெரிந்து விலகி விலகி, அவன் தோப்பின் மூலையை அடைந்த போது, வெளிச்சம் இன்னும் அதிகரித்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோப்பின் மூலையில் வேலியின் முட்கம்பி வரிசையைப் பிடித்தபடி, புகைமூட்டமாய் விரிந்திருந்த பனித்திரையைக் கிழித்துக்கொண்டு கண்களை இடுக்கிய அவனது பார்வை தெருவை ஆராய்ந்தது.

தெருவில் நீர் பாயும் நீளமான மதகின் இரண்டு மேல் விளிம்புகளுக்கு மிடையே, வாகனங்கள் சென்றதால் சில்லுகள் அழுந்திப் பதிந்த தடங்களில், பல இடங்களிலும் தார்ப்படை கிளறி எடுக்கப்பட்டு, மீண்டும் முன்புபோலவே பதிக்கப் பெற்றிருந்தமை அவனுக்குப் புலனாகியது. ஆரம்பத்தில் அவை அவனுடைய கண்களுக்கும் புலப்பட வில்லைத்தான். ஆயினும், அந்தப் பாதையைத் தனது புறங்கையைப் போலவே நன்கு அறிந்திருந்ததனால் மாரியில் விழுந்த சிறு சிறு பள்ளங்களுக்கும், வெளியே பரவியிருந்த கற்களுக்கும் மத்தியில் அந்தப் புதிய 'காய'ங் களை அவன் இலகுவாகவே இனங்கண்டு கொண்டான்.

இப்போது அவனது சிந்தனையில் நின்றதெல்லாம் ஒரேயொரு கேள்விதான். 'எதுக்காக இப்படி றோட்டைப் பிளந்து பிறகு மூடியிருக்கிறான்கள்?'

யுருவத்தை நெரித்து, சிந்தனையைத் தூண்டியும் அது அவனுக்கு விளங்கவேயில்லை.

தென்னைமரங்களின் பசிய இலைகளில் படிந்திருந்த பனிப்படிமங்கள், சூரியனின் வெப்பக் கிரணங்களால் உருகி, பொல...பொலவென உதிர்ந்துகொண்டிருந்தன. விறைப்பில் உடலைச் சிலிர்த்துக்கொண்டு, 'விசர்ப் பெடியள். வேலை மினக்கெட்டு இதில நின்று கூத்தாடியிருக்குதுகள். தோட்டத்தில போய்க் கொத்தியிருந் தாலும், நூறு மிளகாய்க் கண்டு வைச்சிருக்கலாம்' என்று முணுமுணுத்துக்கொண்டு திரும்ப முனைந்தவனின் பார் வையில்; நாவற்குழிச் சந்தியிலிருந்து சாவகச்சேரியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கிய பாதையில் வந்து கொண்டிருந்த ராணுவ வாகனங்கள் விழுந்தன.

'ஒண்டு......ரண்டு......மூண்டு.'

அவன் எண்ணிமுடிப்பதற்குள் முதலாவது வண்டியில் மேலே நின்று முன்னால் பார்த்தபடி துப்பாக்கியும் கையுமாகத் தயார் நிலையிலிருந்தவனது முகம் துலக்கமாய்த் தெரியும் பார்வை எட்டின தூரத்தில் வண்டி வந்துவிட்டது.

'ஓகோ!'

க்ஷணப் பொழுதில் நன்னிக்கு எல்லாமே விளங்கிவிட்டது.

தெருவில் தெரிந்த அந்தப் புதிய குழித் தடங்கள், வேலையற்ற இளைஞர்களின் வெட்டி வேலையல்ல, விடுதலை விரும்பிகளின் கண்ணிகளே என்பதை அவன் புரிந்து கொண்டான். எப்படியோ, அந்த நேரத்தில் அந்த வழியே இராணுவம் வரப்போவதை முன் கூட்டியே தெரிந்துகொண்டு, வழியிலே கண்ணி வெடிகளைப் பதித்திருக்கிறார்கள் அவர்கள். அவனுக்கு இப்போதுதான் விஷயம் புரிந்தது.

'துலையப் போறான்கள்! கூண்டோட கயிலாசம் போகப் போகினம்!' அவனுடைய மனத்துக்குள் மத்தாப்பூ சீறும் கிளுகிளுப்பு.

இதோ, வாகனங்கள் நெருங்கிவிட்டன.

அந்தக் கண்ணி வெடிகள் வெடித்துச் சிதறுவதற்குள் அவன் அப்பாற் போய்விடவேண்டும். இராணுவ வண்டிகள் சிதறும் நேரத்தில், அதிலேயே நின்று கொண்டிருந்தால் அவனும்தான் சிதறிப்போவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓட எத்தனித்த கால்கள் முதல் வண்டியில் வந்து கொண்டிருந்த இராணுவக்காரனின் பார்வை தன்மீதே பதிந்திருப்பதைக் கண்டு தயங்கி நிற்கின்றன.

இருந்தாலும், அவன் தப்பிக்கொள்வதற்கு இன்னும் அவகாச மிருக்கிறது.

'இனி நீ ஓடக் கூடாது. நீயே பலியானாலும் இந்த இடத்தைவிட்டு ஓடக்கூடாது! உள்ளுக்குள்ளிருந்து ஏதோ வொன்று கட்டளையிட்டது.

துணுக்குற்றது நெஞ்சு.

ஆயினும், அவன் தன்னைத் தேற்றிக்கொண்டான். விடுதலை வேள்வியில் தன்னையும் ஒரு பலிகடாவாக்கத் தீர்மானித்துவிட்டான் நன்னி.

எந்த இடத்திலிருந்து அவன் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தானோ, இராணுவ வாகனங்களைக் கண்டதும் அந்த இடத்திலிருந்து ஓடினால், நிச்சயமாகப் பருந்துப் பார்வை பார்த்துக் கொண்டிருந்த அந்த இராணுவத்தானுக்கு அது ஐயத்தை ஏற்படுத்தாமல் போகாது.

வண்டிகள் நிறுத்தப்படலாம். பாதை ஆராயப்படலாம். கண்ணி வெடிகள் கண்டுபிடிக்கப்படலாம்.

இரவிரவாகச் செய்த அந்த இளைய தலைமுறையின் உழைப்பே வீணாகப் போயிருக்கும்; அவர்களின் எதிர் பார்ப்பே சிதறிப்போயிருக்கும்.

சற்றே வாடியும், தளர்ந்தும்போயிருந்த அவனுடைய சுருங்கிய முகத்தில் ஒரு மந்தகாசப் புன்னகை.

இராணுவத்தானின் விழிகள் இப்போது தீட்சண்யமாக நன்னியையே ஊடுருவுகின்றன. அவனும் உற்றுப் பார்க்கிறான். அவனது பார்வை வேறெங்கும் அசைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. முதலாவது வண்டி கடந்ததும், இரண்டாவது வண்டியில் துப்பாக்கி ஏந்தி நின்ற இராணுவக்காரனில் பார்வை படிகிறது. அதுவும் கடந்துவிட்டது. இதோ, ஐந்தாவது ஆறாவது வண்டிகள்.

நன்னியின் மனத்துக்குள் வாணவேடிக்கையே நடக்கும் மகிழ்ச்சி.

"இப்ப தமிழ்ச் சாதியின்ரை ரத்தத்தாலதான் சிகப்புத் தெரியுது. தெரியட்டும். எங்களுக்கெண்டு ஒரு நாடு கிடைக்கிற நேரத்தில இந்த ரத்த நிறக் கொடியை உச்சிப் பணையில ஏறிக்கட்டுறதுக்கு நான் இல்லாமல் போனாலும் ஆராவது ஒருத்தன் செய்தான் போறான்.'

இவைதான் கடைசியாக அவனது சிந்தனையில் ஞாபகம் வந்த வாசகங்கள்.

மறுகணம்—

டும்......டும்......டும்!

வானம், பூமிஎல்லாமே நடுங்கின.

பூகம்பத்தில் நசுங்கிய பூமாலைகளாயின வாகனங்கள்.

எங்கும் மரண ஓலம்.

ஆனால், அதைக்கேட்க நன்னிதான் உயிரோடு இல்லை.

இளைய தலைமுறையின் விடுதலைப் போராட்டத்தில் ஒரு கிழவனின் தியாகம், உங்களுக்கும் எல்லோருக்கும் ஓர் உண்மையைப் பறைசாற்றிக்கொண்டு நிற்கிறது. அடிமை விலங்கொடிப்பை புத்திளமை மிகுந்த இளைய சமுதாயம் மட்டுமல்ல, அந்தச் சமூகம் முழுவதுமேதான் இச்சித்து நிற்கிறது என்பதையே அந்த எழுபத்திரண்டு வயதேயான கிழவன் நிரூபித்துவிட்டுப் போயிருக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்னி—ஒரு தனிமனிதனல்ல.

ஒரு சமூகம்.

ஒரு வர்க்கம்.

ஒரு நீண்ட காலப் போராட்டத்தில் அந்த உழைக்கும் மக்களின்—வர்க்கத்தின், உணர்வுகள் தீட்டப்பட்டு விட்டன. அதைத்தான் அவனுடைய மறைவு உங்களுக்கும் எல்லோருக்கும் சொல்லிக் கொண்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AETE ATWE

ஐதஎஒ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org